திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி வேப்பூர் ஒன்றியம் கிழுமத்தூரில், 2 சத்துணவுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் ஒன்று தண்ணீர் Tank-இன்கீழ் செயல்பட்டு வருகிறது. அதைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? மேலும், தமிழ்நாட்டில் சத்துணவுக் கூடங்களில் சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் விறகு மற்றும் காய்கறிகளின் விலை உயர்வின் காரணமாக, அரசு வழங்குகின்ற நிதி போதாத காரணத்தினால், தரமான சத்துணவு வழங்கப்படவில்லை என அங்கே படிக்கின்ற மாணவர்கள் சொல்கிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என இந்த நேரத்திலே தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளி மாணவர்களுக்கு, ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற பள்ளி மாணவர்களில் கிட்டத்தட்ட 69 இலட்சம் மாணவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடைகிறார்கள். அனைவருக்கும் தகுதியுள்ள, ஊட்டச் சத்துமிக்க உணவு, முட்டையோடுகூடிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காய்கறி மற்றும் விறகு போன்றவற்றுக்கு அரசு அளிக்கும் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று கூறினார்கள். அதை அரசு பரிசீலிக்கும்.

[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல இன்று தமிழ்நாட்டிலுள்ள சத்துணவுக் கூடங்களுக்கெல்லாம் எரிவாயு அடுப்பு வழங்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்பட வேண்டும்? அதேபோல, தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன? அவற்றையெல்லாம் கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்படுவது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் 750 மையங்களுக்கு வழங்கப்பட்டு இதுவரை 2755 மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்போது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல, சத்துணவுக் கூடங்களுக்கு, சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 9045 சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு 200 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

நிதி ஒதுக்கீடு

***62188—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் இந்நிதியாண்டில் ஆதி திராவிடர் நலப்

[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல இன்று தமிழ்நாட்டிலுள்ள சத்துணவுக் கூடங்களுக்கெல்லாம் எரிவாயு அடுப்பு வழங்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்பட வேண்டும்? அதேபோல, தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன? அவற்றையெல்லாம் கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்படுவது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் 750 மையங்களுக்கு வழங்கப்பட்டு இதுவரை 2755 மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்போது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல, சத்துணவுக் கூடங்களுக்கு, சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 9045 சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு 200 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

நிதி ஒதுக்கீடு

***62188—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் இந்நிதியாண்டில் ஆதி திராவிடர் நலப்

2010 ஏப்ரல் 26]

பள்ளி துவக்கவும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரத்தில் ஆதி திராவிடர் நலத் துவக்கப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுர ம், ஆதி திராவிட மக்கள் நிறைந்து வசிக்கிற பகுதி. அங்கே பள்ளியைத் துவக்குவதற்கு மறு பரிசீலனை செய்து அந்தப் பள்ளிக்கூடத்தைத் துவக்கி வைப்பாரா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்கும் திட்டம் பள்ளிக் கல்வித் துறையால் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி தேவையுள்ள, ஆதி திராவிட மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளில், முன்னுரிமை அளித்து புதிய ஆரம்பப் பள்ளிகள் ஆண்டுதோறும் துவக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக இராமநாதபுரத்தில் ஆதி திராவிடர் நல துவக்கப் பள்ளி துவக்கும் திட்டம் இல்லை. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் புதிய துவக்கப் பள்ளி முன்னுரிமை அடிப்படையில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

[2010 ஏப்ரல் 26

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில், மணக்குடி ஊராட்சியிலே ஒரு ஆதி திராவிடர் பள்ளி அமைந்திருக்கிறது. இது ஆரம்பப் பள்ளியாக இருக்கிறது. இது நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றோம். குறிப்பாக, பள்ளிக் கல்வித் துறையின்மூலம் இயக்கப்படுகின்ற பல பள்ளிகள் தரம் உயர்த்தப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஆதி திராவிட மாணவச் செல்வங்கள் அதிகமாகப் படிக்கக்கூடிய பள்ளியாக இது உள்ளது. இந்த ஆண்டு, இந்தப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பினமாகக் கருதி, தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

100—

தொழிற்பேட்டை

***71430—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 26

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில், மணக்குடி ஊராட்சியிலே ஒரு ஆதி திராவிடர் பள்ளி அமைந்திருக்கிறது. இது ஆரம்பப் பள்ளியாக இருக்கிறது. இது நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றோம். குறிப்பாக, பள்ளிக் கல்வித் துறையின்மூலம் இயக்கப்படுகின்ற பல பள்ளிகள் தரம் உயர்த்தப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஆதி திராவிட மாணவச் செல்வங்கள் அதிகமாகப் படிக்கக்கூடிய பள்ளியாக இது உள்ளது. இந்த ஆண்டு, இந்தப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பினமாகக் கருதி, தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

100—

தொழிற்பேட்டை

***71430—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

முற்பகல் 10-15

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் அதுபோன்ற கதர்த் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே தமிழகத்திலே கதர்த் தொழிலில் முதன்மையான இடத்தில் செயல்பட்டு வந்த திருப்பூரில் ஒரு சிறந்த தொழிற்பேட்டை செயல்பட்டு வந்தது. ஆகவே, அங்கு கதர் உற்பத்தி, இராட்டை நூற்பது, தச்சு வேலைகள், காலணிகள் போன்ற பல்வேறு பணிகளில் சில ஆயிரக்கணக்கான பேர் வேலை செய்து வந்த அந்தக் கதர் வாரியத் தொழில் மையம் இப்போது செயலிழந்து அந்த இடம் கொஞ்சம் கொஞ்சமாக வாடகைக்கு விடக்கூடிய நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. பழைய நிலையில், திருப்பூர் கதர்த் துறையிலே தலைநிமிர்ந்து நிற்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துறை கடந்த பல ஆண்டுகளாக நலிவுற்ற நிலையிலிருந்தாலும், தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பின்பு, அதற்கென்று ஒரு தனிக் கவனத்தைச் செலுத்தி, இப்போதுதான் முதன்முறையாக மூன்று கோடி ரூபாய் இலாபம் என்ற அளவிற்கு இந்த வருடம் அந்தத் துறை இலாபத்தை எட்டியுள்ளது. பல வருடங்களுக்குப்பின்,

20 ஆண்டுக் காலத்திற்குப்பின்தான் அந்த இலாபம் என்ற நோக்கே வந்திருக்கிறது. எதிர்காலத்தில் தொடர்ந்து இந்த இலாபம் அதிகரிக்கவும் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். திருப்பூரில் உள்ள நெசவுத் தொழில், அதாவது தறிகளும், நூற்பு நிலையங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இன்னும் இதை அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா-விடை நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள்தான் கையை உயர்த்திக் காட்டினீர்கள் (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: Mike கொடுங்கள் Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் முதலமைச்சர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொருள் குறித்து எடுக்கப் போகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு தலைசிறந்த வார இதழாக இருக்கிற "குமுதம்" இதழ் குறித்து இப்போது மத்தியப் புலனாய்வுத் துறை நம்முடைய சென்னைக் கமிஷனர் ஆபிசில் வழக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொருள் குறித்தும் எடுக்கப் போகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான், உட்காருங்கள், முடிந்தது.

[2010 ஏப்ரல் 26

20 ஆண்டுக் காலத்திற்குப்பின்தான் அந்த இலாபம் என்ற நோக்கே வந்திருக்கிறது. எதிர்காலத்தில் தொடர்ந்து இந்த இலாபம் அதிகரிக்கவும் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். திருப்பூரில் உள்ள நெசவுத் தொழில், அதாவது தறிகளும், நூற்பு நிலையங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இன்னும் இதை அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா-விடை நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள்தான் கையை உயர்த்திக் காட்டினீர்கள் (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: Mike கொடுங்கள் Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் முதலமைச்சர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொருள் குறித்து எடுக்கப் போகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு தலைசிறந்த வார இதழாக இருக்கிற "குமுதம்" இதழ் குறித்து இப்போது மத்தியப் புலனாய்வுத் துறை நம்முடைய சென்னைக் கமிஷனர் ஆபிசில் வழக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொருள் குறித்தும் எடுக்கப் போகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான், உட்காருங்கள், முடிந்தது.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) 'குமுதம்' வார இதழ் நிறுவனத்தில் உருவாகியுள்ள நிருவாகப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர் 'குமுதம்' வார இதழ் அதிபர் திரு. பழனியப்பன், அதே இதழின் நிருவாக இயக்குநர் திரு. வரதராஜன் மீது வழக்குத் தொடுத்து கையாடல் போன்ற குற்றங்களைச் சுமத்தியது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். ராமன் ஆகியோர் விதி 56-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக இதை எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் யாரேனும் ஒருவர், சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழகத்திலே தலைசிறந்த இரண்டு வார இதழ்கள் ஒன்று குமுதம், இன்னொன்று ஆனந்த விகடன் வெளிவந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய தமிழகத்திலே முத்திரை பதித்து மிகச் சிறந்த வார இதழ்களாக அவை மக்கள் கைகளிலே சென்று, நல்ல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தன. அப்படிப்பட்டவற்றில் ஒன்றான 'குமுதம்' வார இதழின் உரிமையாளர் திரு. ஜவகர் பழனியப்பன் என்பவர், இப்போது வெளிநாட்டில் இருந்து கொண்டிருக்கிறார். அவர் வெளிநாட்டில் இருக்கிற காரணத்தினாலே திரு. வரதராஜன் என்கின்ற நிருவாக இயக்குநரிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். இப்போது திரு. பழனியப்பன் என்பவர் ஒரு வழக்குத் தொடுத்திருக்கிறார். நம்முடைய சென்னை போலீஸ் கமிஷனர் ஆபிசில் ஒரு வழக்கைப் பதிவு செய்து, அதன் காரணமாக திரு. வரதராஜன் என்பவர் கைது செய்யப்பட்டு, அவர் நிபந்தனை ஜாமீனில் வெளியில் விடப்பட்டிருக்கிறார். இன்று திரு. பழனியப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற அந்தப் புகாரில், புரசைவாக்கத்தில் இருக்கக்கூடிய 'குமுதம்' அலுவலகம் எங்களுடைய குடும்பச் சொத்து, என்னுடைய தாத்தா, என்னுடைய தந்தையார் போன்றவர்களெல்லாம் முதலீடு செய்து, எங்களுடைய உழைப்பை மட்டும், எங்களுடைய சொத்தை மட்டுமே வைத்து உருவாக்கப்பட்ட நிறுவனம், அந்தக் "குமுதம்" நிறுவனம் என்றும், "மாதத்திற்கு 6 இலட்சம் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டு, அதிக இலாபத்தில்

[திரு. சி. ஞானசேகரன்] [2010 ஏப்ரல் 26

இயங்கிக்கொண்டிருக்கிற அப்படிப்பட்ட 'குமுதம்' நிறுவனத்தை இன்று நட்டக் கணக்குக் காட்டி, சொல்லப்போனால் பத்திரிகையாளர்கள் இவ்வளவுதான் சம்பளம் எடுக்க வேண்டுமென்ற விதிமுறைகள் இருந்தபோதிலும், அந்த விதிமுறைகளை மீறி அதற்கும் அதிகமாக, பத்து மடங்கு அதிகமாக சம்பளத்தை எடுத்து, இன்றைக்கு நட்டக் கணக்கைக் காட்டி எங்களை மோசடி செய்கிறார்கள்" என்றும் வழக்குத் தொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு வார இதழ் நிறுவனத்தை, இவர்களுடைய பிரச்சினையால் மூடிவிடக்கூடாது; அது நின்று விடக்கூடாது. இந்த வழக்கில், காவல் துறை வழக்குப் பதிவு செய்து, புலனாய்வு செய்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், அரசுக்கு என்ன தகவல் கிடைத்திருக்கிறது, யாருக்குச் சொந்தமான இடம், ஏன் இப்படிப்பட்ட பிரச்சினை வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக நான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

திரு. தி. வேல்முருகன்: Speaker Sir, Speaker Sir,... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிவிப்பு கொடுத்திருப்பதை நான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன? திரு. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே நிலவி வருகிற பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்ற நேரத்தில், அதற்கெல்லாம் கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கின்றபோது, தனி நிறுவனத்தைப் பற்றி இவ்வளவு அக்கறை எடுத்து நீங்கள் அவருக்கு அனுமதி வழங்கியதற்கு என்ன காரணம் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்னுடைய விருப்பம். Don't question it. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, என்னுடைய அதிகாரத்திற்குட்பட்டது. (குறுக்கீடுகள்) என்னுடைய அதிகாரத்திற்கு

2010 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

உட்பட்டது. எதை எடுக்க வேண்டும், எதை எடுக்கக்கூடாது என்பது நான் முடிவெடுக்க வேண்டிய விஷயம். அதற்கு நீங்கள் உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒரு நிகழ்ச்சி குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் போன்ற எந்தத் தீர்மானங்களைக் கொடுத்தாலும், அந்தத் தீர்மானங்கள் அளித்தவர்களை அழைத்துப் பேச வைப்பதுதான் முறையாக இருக்கிறது. அந்த முறைப்படி இன்றைக்குக் 'குமுதம்' வார இதழ் பிரச்சினை குறித்து, திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அளித்துள்ள அந்தக் கருத்துகளையொட்டி நான் சிலவற்றை இங்கே கூற விரும்புகின்றேன்.

'குமுதம்' வார இதழ், புகழ்பெற்ற வார இதழ்களிலே ஒன்று. அந்த இதழின் தொடர்புடைய பங்குதாரர்கள் என்று கூறப்படுகின்றவர்களில் உரிமையுடையவர், ஏற்கெனவே அந்த இதழை ஆரம்பித்து மிகுந்த செல்வாக்கோடு அதனைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்திய மூத்தோர்கள் மறைந்துவிட்டாலும்கூட, அவர்களுடைய பிரதிநிதியாக இருந்து அந்த இதழை நடத்துவதற்கு முன்வந்த திரு. ஜவகர் பழனியப்பன் வெளிநாட்டிலே இருந்தாலும், அண்மையிலே அவர் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்து, தான் யாரிடத்திலே அந்தப் பத்திரிகையை ஒப்படைத்துவிட்டுச் சென்றாரோ, அவரிடத்திலே சில விளக்கங்களைக் கேட்டதன் அடிப்படையில் இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இங்கே நம்முடைய நண்பர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் சாதாரணமானவை அல்ல. அவை உண்மைகளாக இருக்குமானால், சாதாரணமானவை அல்ல. எனவேதான் அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட, அல்லது விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ற வகையில் காவல் துறையினர் அதிலே வரதராஜன் என்பவரைக் கைது செய்திருக்கிறார்கள். பொதுவாக, பத்திரிகைகளை ஒடுக்குவது அல்லது அவர்கள்மீது வழக்குத் தொடுப்பது, அவர்களைச் சிறையில் அடைப்பது, அவர்களைச் சட்டசபைக் கூட்டத்திலே கொண்டுவந்து கூண்டிலே நிறுத்துவது போன்ற எந்த நிகழ்வுகளையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் விரும்புவதில்லை, அதை ஏற்றுக்கொள்வதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

[கலைஞர் மு. கருணாநிதி] [2010 ஏப்ரல் 26

முற்பகல் 10-25

பத்திரிகைகள்மீது பல நேரங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த முறையிலே அவர்கள் எந்த நேரத்திலே நடவடிக்கைக்கு உள்ளானாலும், உடனடியாக அதுபற்றி தலையிட்டு கண்டனங்கள் எழுப்பி, அந்தப் பத்திரிகையாளர்களுக்கு நீதி தேடித் தருவதிலே இன்றைய ஆளுங்கட்சி என்றைக்கும் முனைப்பாக இருந்திருக்கின்றது.

அந்த வகையில், இன்றைக்குக் 'குமுதம்' பத்திரிகையினுடைய ஆசிரியர் என்று சொல்லப்படுபவர்களிலே ஒருவர், நிருவாகத்திலே இருந்தவர் ஒருவர், வரதராஜன் என்பவர் கைது செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டவுடன், அதுகுறித்து எனக்கு வந்த தகவல்களின் அடிப்படையில் அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கான சட்டங்கள் இல்லை என்றாலுங்கூட, நிலைமைகள் இல்லை என்றாலுங்கூட, அவற்றுக்கிடையிலேயும் அவர் சிறை புகத்தான் வேண்டும் என்பதுபோல வற்புறுத்தத் தேவையில்லை என்பதை நம்முடைய அரசு வக்கீல்களுக்கு எடுத்துச் சொல்லி, நம் தரப்பிலே அவர்களை ரிமாண்டு செய்வதற்கு வற்புறுத்த வேண்டாம் என்றும் எடுத்துக் கூறி, அவர் உடனடியாக வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார், சில நிபந்தனைகளோடு. வழக்கு விவரம் எனக்குத் தெரியாது. சில நண்பர்கள் இதிலே ஒரு சமாதான முயற்சியை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

ஒரு பெரிய பத்திரிகை, வாரப் பத்திரிகை, கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, தமிழகத்திலே எல்லோருடைய கைகளிலும் இருக்கின்ற ஒரு பத்திரிகை. அந்தப் பத்திரிகைக்கு ஒரு ஊனம், அதற்கு ஒரு தடங்கல், அதனுடைய வளர்ச்சியிலே ஒரு முட்டுக்கட்டை என்ற நிலையில் இந்தச் சம்பவம் வந்துவிடக்கூடாது என்பதிலே நான் மிகுந்த அக்கறை கொண்டவன்.

ஏற்கெனவே இதுபோன்ற சில பத்திரிகைகளுடைய கூடாரத்தில் ஏற்பட்ட புகைச்சல், போர்—அந்த நேரங்களில் நானே தலையிட்டு, அவர்களிடம் அதிகாரிகளை அனுப்பி அவர்களிடத்திலே ஒரு சமரச உடன்பாட்டை ஏற்படுத்தி, அவர்களுக்குள் ஏற்பட்ட வழக்குகள் எதுவாக இருந்தாலும், பத்திரிகை விழுந்துவிடாமல் பார்த்துக்கொண்ட அந்த வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்தில், முதலமைச்சராக இருந்த காலத்தில் அமெரிக்காவுக்குச் சிகிச்சைக்குப் போனபோதுகூட, சுற்றுப் பயணம் செல்ல நேர்ந்தபோதுகூட, இங்கே ஒரு பிரபல நிறுவனத்திலே ஏற்பட்ட தொழிலாளர் தகராறு— என்னைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போனார்கள்,

"அது பாரம்பரியமான நிறுவனம்; நமக்கு எதிர்ப்பாக இருந்தாலும், ஒரு பாரம்பரியமான நிறுவனம்; அங்கே ஏற்பட்டிருக்கிற அந்தத் தொழிலாளர் தாவாவை வளரவிடாமல் பார்த்துக்கொள்" என்று இங்கே சொல்லிவிட்டுப் போனது மாத்திரம் அல்ல; அமெரிக்காவிலேயிருந்து 3, 4 முறை தொலைபேசியின்மூலமாகத் தொடர்பு கொண்டு வலியுறுத்தினார்கள். அப்போது நானும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், நம்முடைய பேராசிரியரும்தான் அந்தத் தொழிலாளர்களையெல்லாம் அழைத்து, மறைந்த N.V.N. அவர்கள் மூலமாக சமரசம் பேசி, அந்த நிறுவனத்தை நடத்துவதற்கு வழிவகுத்துக் கொடுத்தோம்.

முற்பகல் 10-30

அதற்குப் பிறகு குடும்பச் சண்டையின் காரணமாக ஏற்பட்ட மோதல், ஒரு பத்திரிகையே நிறுத்தப்பட்டுவிடுமோ என்று வந்தபோது, "Annadurai also spoke" என்கின்ற அளவிற்குச் செய்திகளை வெளியிட்டார்கள். அப்படிப்பட்ட பத்திரிகையைக்கூட, அது தொடர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, நாங்கள் தலையிட்டு அப்போது ஓய்வுபெற்ற I.A.S. அதிகாரியாக இருந்த நண்பர் குகன் அவர்களை, அவர்களுடைய இல்லத்திற்கே அனுப்பி அவர்கள் மூலமாக சமரசம் செய்து வைத்து, அந்த சமரசத்தின் காரணமாக ஏற்பட்ட நல்ல உடன்பாட்டிற்குப் பிறகு, அந்தப் பத்திரிகை அதிபர் ஒரு நன்றிக் கடிதத்தை எனக்கு எழுதி அனுப்பியிருக்கிறார். இன்றைக்கும் அந்த நன்றிக் கடிதம் என்னிடத்திலே பத்திரமாக இருக்கின்றது. நான் எந்தப் பத்திரிகை என்று குறிப்பிட விரும்பவில்லை. உங்களுக்கே அந்தக் கருத்தை விட்டுவிடுகிறேன். நீங்களே ஊகித்துக்கொள்வீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

அதைப்போலவே, 'குமுதம்' பத்திரிகையும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்கின்ற ஆசை உடையவன் நான். தி.மு.கழகத்தைப் பற்றிச் சில நேரங்களிலே கருத்து வேறுபாடுகள், கேலிச் சித்திரங்கள் இவையெல்லாம் வந்திருந்தாலும்கூட, அவற்றைப் பார்த்து ரசிப்பவனே தவிர, அதற்காக ஆத்திரப்படுபவன் அல்ல நான்

என்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பத்திரிகையும் நின்றுவிடாமல் நடக்க வேண்டும்; அங்கே அதனுடைய பங்குதாரர்களுக்குள்ளே ஏற்பட்ட சண்டையா அல்லது முதலாளி, தொழிலாளி தகராறா என்பதையெல்லாம் ஆராய்ந்தறிந்து ஓர் உடன்பாடு ஏற்படுவதற்கு முன்னால், சட்ட ரீதியாகவோ அல்லது போலீஸ் துறை சார்பாகவோ எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று நான் கருதுகின்றேன். சட்டப்படி உத்தரவிட முடியாது. ஏனென்றால் ஒரு வழக்கைத் திரும்பப் பெறுவது என்பது அரசினுடைய உரிமையாக இருக்கலாம். ஆனால் அதை எப்படி நடத்துவது என்பதையெல்லாம் சொல்லிக்கொடுக்கின்ற அந்த முறையை நாம் யாருக்கும், நீதிமன்றத்திற்கோ அல்லது யாருக்கோ கற்றுத் தர முடியாது; உத்தரவிட முடியாது.

எனவே இருவரிடையே ஒரு சமரச ஏற்பாடு உருவாகி அது வரதராஜனாக இருந்தாலும் சரி அல்லது ஜவஹர் பழனியப்பனாக இருந்தாலும் சரி, எங்கே நியாயம் இருக்கிறதோ, அந்த நியாயத்தை உணர்ந்து நல்ல தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு குழு அமைத்தாவது அதற்கான ஏற்பாடுகளை, 'குமுதம் வாழ வேண்டும்' என்பதற்காக நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்று குறிப்பிட்டு, திரு. ஞானசேகரன் அவர்களுடைய அந்தக் கவலைக்கு மருந்தாக இந்தச் செய்தியைச் சொல்லி, இந்த அளவில் அமைகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 25-4-2010 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில். . . (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு ஒரு பத்திரிகையில் நடைபெற்ற தாவாவை எடுத்துக் கூறி, இதற்கு முன்னால் இருந்த தி.மு.க. அரசு—எம்மாதிரியெல்லாம் நாங்கள் கண்ணியத்துடன் கடமையாற்றியிருக்கின்றோம் என்ற தகவலையும் சொல்லி, நெருடலாக, சில பத்திரிகையாளர்கள் இந்தச் சட்டமன்றத்திற்கு அழைத்து வரப்பெற்ற சம்பவங்கள் எல்லாம் நடந்ததாக எடுத்துக் கூறினார்கள். (குறுக்கீடுகள்) அதுதான், நான் கேட்டுவிடுகிறேன், உரையை முடித்துக்கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது clarification-ஆ? சார்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஓ. பன்னீர்செல்வம் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) 25-4-2010 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது, வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் (குறுக்கீடுகள்) பத்திரிகையாளர்களுக்கிடையே நடைபெறுகின்ற தகராறுகளில் அரசு எப்போதும் நல்ல எண்ணத்தோடு நடந்து கொண்டது என்பதற்கு உதாரணம்தான் சொன்னேன். யாரோ சில வன்முறையாளர்கள் ஒரு பத்திரிகை அலுவலகத்திலே நடத்திய (குறுக்கீடுகள்) செயல்களுக்கு யாரும் பொறுப்பேற்க முடியாது. தருமபுரியில் பஸ்களை கொளுத்தினார்கள். நீங்கள் பொறுப்பேற்க முடியுமா? ஆகவே, யாரோ செய்த காரியங்களுக்கு யாரும் பொறுப்பேற்க முடியாது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எதிர்க்கட்சி துணைத் தலைவர், நீங்கள் ஏற்கனவே முதல்வராக இருந்து அனுபவப்பட்டவர்கள். நீங்கள் இந்த* subject-*க்கு சம்பந்தமில்லாத ஒரு* subject-*ஐ அவையில்* clarification *என்று பேசலாமா? உட்காருங்கள் முதலில்.*

(ஆ) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது சிலர் கறுப்புக் கொடி காட்டியதால் ஏற்பட்ட கலவரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *25-4-2010 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். இரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்*

2010 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* No, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஓ. பன்னீர்செல்வம் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. *(குறுக்கீடுகள்)* 25-4-2010 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது, வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 10-35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் *(குறுக்கீடுகள்)* பத்திரிகையாளர்களுக்கிடையே நடைபெறுகின்ற தகராறுகளில் அரசு எப்போதும் நல்ல எண்ணத்தோடு நடந்து கொண்டது என்பதற்கு உதாரணம்தான் சொன்னேன். யாரோ சில வன்முறையாளர்கள் ஒரு பத்திரிகை அலுவலகத்திலே நடத்திய *(குறுக்கீடுகள்)* செயல்களுக்கு யாரும் பொறுப்பேற்க முடியாது. தருமபுரியில் பஸ்களை கொளுத்தினார்கள். நீங்கள் பொறுப்பேற்க முடியுமா? ஆகவே, யாரோ செய்த காரியங்களுக்கு யாரும் பொறுப்பேற்க முடியாது. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதிர்க்கட்சி துணைத் தலைவர், நீங்கள் ஏற்கனவே முதல்வராக இருந்து அனுபவப்பட்டவர்கள். நீங்கள் இந்த subject-க்கு சம்பந்தமில்லாத ஒரு subject-ஐ அவையில் clarification என்று பேசலாமா? உட்காருங்கள் முதலில்.

(ஆ) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது சிலர் கறுப்புக் கொடி காட்டியதால் ஏற்பட்ட கலவரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *25-4-2010* அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். இரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்

சார்பாக திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக டாக்டர் சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோர் விதி 56-இன்கீழ் அறிவிப்புகொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். அ.இ.அ.தி.மு.க. சார்பாக, யார் பேசுகிறீர்கள்? திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாக இருப்பது நீதிமன்றம். நீதியைப் பரிபாலனம் செய்வது நீதித் துறை. உயர் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவம், அதுவும் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, மாண்புமிகு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, உயர் நீதிமன்ற நீதிபதிகள், இப்படி நீதித் துறை, நிர்வாகத் துறை என்று சேர்ந்து நடத்திய, மறைந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியின்போது நடைபெற்றிருக்கின்ற சம்பவங்களை உற்று நோக்கும்போது ஒன்று மட்டும் புலனாகின்றது. ஓர் அறிஞர் ஒரு நாட்டைப் பற்றிச் சொல்லும்போது அரசாங்கத்திற்கு இரண்டு கடமைகள் உண்டு; ஒன்று, சட்டம்-ஒழுங்கைப் பேணிக் காத்து மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பை, உத்தரவாதத்தை அளிப்பது அரசாங்கத்தினுடைய கடமை; மற்றொன்று அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தித் தருவது அரசாங்கத்தினுடைய கடமை என்று குறிப்பிட்டுள்ளார். சட்டம்-ஒழுங்கை மேம்படுத்தி மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தருவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்ததா? சட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததா? உடைமைக்குப் பாதுகாப்புக் கொடுத்ததா என்றால், இல்லை. தொடர்ச்சியாக இந்த 4 ஆண்டுக்காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனியக்கூடிய அளவிற்கு சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சட்டத்தின் ஆட்சியில்லை;

2010 ஏப்ரல் 26] [திரு. டி. ஜெயக்குமார்]

சட்டப்படியான ஆட்சியில்லை. ஓர் அறிஞர் சொல்லும்போது நல்ல சட்டமே, நல்ல ஒழுங்கு என்று சொன்னார்கள். ஆனால் நல்ல சட்டமும் இல்லை; நல்ல ஒழுங்கும் இல்லாத ஒரு மாநிலம் இருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலை இருக்கின்றது. 10 ஆண்டுக்காலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்தார்கள். இதுபோன்ற எந்த ஒரு பிரச்சினையாவது இருந்ததா என்பதை தயவுசெய்து நீங்கள் உங்கள் மனசாட்சியைத் தொட்டுக் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) அப்புறம் சொல்லுங்கள் பதிலை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் இந்த Subject-இல் மட்டும் பேசினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தைப் பற்றிச் சொல்கிறார் அவர். உங்களுடைய ஆட்சிக் காலத்தில், உங்களுடைய அம்மாமீது வழக்குத் தொடர வேண்டுமென்பதற்காக ஆலோசித்துக் கொண்டிருந்த வழக்கறிஞர் திரு. சண்முகசுந்தரத்தின்மீது கூலிப் படையை ஏவிவிட்டு கொலை செய்ய முயற்சித்தவர்கள் நீங்கள். சாத்தான் வேதம் ஓதுவதுபோல் ஓதக் கூடாது. (கூச்சல்-குழப்பம்)

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எல்லோரையும் அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கொடுத்திருக்கிற அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது, (குறுக்கீடு) அந்த subject-ஐ மாத்திரம் பேசுங்கள். அந்த subject-ஐ விட்டு வெளியே போக வேண்டாமென்று உங்கள் உறுப்பினர்களிடம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதை விட்டுவிட்டு வெளியே போனால், அவர்கள் அதற்குப் பதில் சொல்லத்தான் செய்வார்கள். அது இயற்கைதானே! (குறுக்கீடுகள்) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, அதே உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் அவர்களுடைய தலைவிக்கெதிராக வழக்குத் தொடர்வதற்காக வருகை தந்த சுப்பிரமணிய சுவாமிக்கு எந்தவிதத்தில் நீங்கள் வரவேற்பு கொடுத்தீர்கள்? குச்சியும் இல்லாமல் கொடியும் இல்லாமல் ஒரு கறுப்புக் கொடி காட்டிய வரலாறு உங்களைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. (குறுக்கீடுகள்)

[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள், please. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் முன்னறிவிப்பின்றி அப்படியே பேசிக்கொண்டு போயிருந்தால் பிரச்சினை இல்லை. அவர் என்ன சொன்னாரென்றால், எங்கள் அம்மாவின் ஆட்சியில் இப்படி ஒரு சம்பவம் உண்டா, சொல்லுங்கள் என்று சொன்னார். நீங்கள் கேட்டீர்கள். அதற்குப் பதில் சொல்கிறார். நீங்கள் கேட்காமல் அவர் பதில் சொல்லவில்லை. நீங்களாகப் பார்த்து, எங்கள் அம்மாவினுடைய ஆட்சியில் இந்தமாதிரி சம்பவங்கள் உண்டா, சொல்லுங்கள் என்று கேட்டீர்கள். அதற்குப் பதில் சொல்கிறார். அதற்காக கோபித்துக் கொண்டால் எப்படி? ஒரு சம்பவம் அல்ல. இன்னும் பல சம்பவங்கள் இருக்கின்றன. நீங்கள் கேட்கக் கேட்க நாங்கள் சொல்வோம். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மற்ற அமைச்சர்களெல்லாம் கொஞ்சம் அமைதியாக இருங்கள், please. *(குறுக்கீடுகள்)* மற்ற உறுப்பினர்களெல்லாம் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கே மேற்கோள் காட்டிப் பேசியதன் காரணமாகத்தான் நான் மதுரை சம்பவத்தைப் பேசவேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள். அதேமாதிரி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் பேசுகின்றபோது அமைச்சர் குறுக்கிட்டுப் பேசிய வார்த்தையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதுதான் முறையான செயல். *(குறுக்கீடுகள்)* ஏனென்றால், நாங்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறீர்கள். . . *(குறுக்கீடுகள்)*

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். அவர் சொன்ன அந்த வார்த்தை, அம்மா காலத்தில் இந்த மாதிரியெல்லாம் ஏதாவது நடந்ததுண்டா? நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம் என்றார். அதற்கு உரிய பதிலை அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) கேள்வி உங்கள் பக்கத்திலிருந்து ஆரம்பித்ததால், பதில் அந்தப் பக்கத்திலிருந்து வந்தது. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினர் பேசி முடித்துவிட்டாரா? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். மற்ற உறுப்பினர்களெல்லாம் கொஞ்சம் அமைதியாக இருங்கள், please. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போலத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் அதுமாதிரியெல்லாம் நடக்கமாட்டோம் என்று. அதற்குத்தான் நான் மதுரையிலே நடந்த ஒரு சம்பவத்தை மேற்கோள் காட்டிப் பேசி, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட பதில் சொன்னார்கள், சில வன்முறையாளர்கள் அதை நடத்தினார்கள் என்று அவர்களே தனது ஒப்புதல் வாக்குமூலத்தைத் தந்திருக்கின்றார்கள். அந்த வன்முறையாளர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதுதான் நான் கேட்ட கேள்வி. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்குச் சொல்கிறேன். பிரச்சினை உருவாவது உங்களுடைய பக்கத்திலிருந்துதான். (குறுக்கீடுகள்) அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்வதை விடுத்து, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதைப்போல அவருடைய பேச்சு இருக்கின்றது. நான் சொல்ல வந்தது, நீதிமன்ற வளாகத்தில், முதலமைச்சர், சட்டத் துறை அமைச்சர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள் இருக்கின்ற ஓர் அரங்கத்தில், உயர் நீதிமன்றத்தில் இதுபோன்று ஜனநாயகத்தில் வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்கு ஒரு செயல் நடத்திருக்கிறதே.

அதற்கு என்ன பதில் என்றுதான் நான் கேட்டேன். அதற்கு . . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதை மாத்திரம் சொல்லிவிட்டு, நீங்கள் கொடுத்திருக்கிற அந்தத் தீர்மானத்தின்மீது மாத்திரம் கருத்து சொல்லிவிட்டு உட்காருங்கள். மற்றதையெல்லாம் பேசாதீர்கள். *(குறுக்கீடுகள்)*

திரு. டி. ஜெயக்குமார்: அப்படித் தொடர்ச்சியாகப் பார்க்கும்போது சட்டம்-ஒழுங்கு நிலைமை, இந்த 4 ஆண்டுக் காலத்தில் பத்திரிகை ஊழியர்கள் எரித்துக் கொலை, உயர் நீதிமன்றத்திலே வழக்கறிஞர்கள்-காவல் துறை மோதல், அதைப்போன்று, சட்டக் கல்லூரி மாணவர்கள் மோதல், T.V-ஐத் திறந்தாலே நெஞ்சைப் பதற வைக்கின்ற, ஆங்கிலத் திரைப்படத்தை மிஞ்சுகின்ற வகையிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: எதைப் பற்றித் தீர்மானம் கொடுத்தாரோ அதைப்பற்றிப் பேசச் சொல்லுங்கள். உயர் நீதிமன்றத்தை நீங்கள் எந்த அளவுக்கு மதித்தீர்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம். . . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): கவன ஈர்ப்பிற்குச் சம்பந்தமில்லாதவற்றை கவன ஈர்ப்பிலே கொண்டு வரக்கூடாது. *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் உட்காருங்கள். திரு. வீ.பெ. துரைசாமி, கொஞ்சம் உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார் நீங்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு மீதான விஷயத்தை மட்டும் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள். நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கப் போகிறேன். *(குறுக்கீடு)* நீங்கள் கவன ஈர்ப்பு குறித்து கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா? *(குறுக்கீடு)* அதை மாத்திரம் பேசுங்கள். கவன ஈர்ப்புமீது அல்லாமல் வேறு விஷயம் பேசினால் நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள்ளேயேதான் பேசிக்கொண்டிருக்கிறேனேயொழிய, வேறு subject-ல் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு விஷயத்திற்கு வெளியேதான் பேசுகிறீர்கள். எனவே, நீங்கள் அதன்மீது மட்டும் பேசுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: அதைத்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் சொல்ல வருவது இரண்டு கோரிக்கைகள். ஒன்று, பத்திரிகைத் துறை, ஜனநாயகத்தினுடைய முக்கிய தூண்களில் ஒன்றான நான்காவது தூண். கடுமையான அளவிற்குத் தாக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய T.V. Cameraman தாக்கப்பட்டிருக்கிறார். Camera-க்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. நிருபர்கள் புண்ணியாதேவன் மற்றும் ரமேஷ்குமார் ஆகியோர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகையைச் சார்ந்த நிருபர்கள், NDTV நிருபர்கள் எல்லாம் கடுமையாக முதலமைச்சர் முன்னாலேயே தாக்கப்பட்டிருக்கின்றார்கள். இத்தனைக்கும் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையை நிகழ்த்திக்கொண்டிருக்கும்போது, தாக்குதல் நடக்கிறது. ஆனால் அங்கே இருந்த D.G.P. ஒன்றும் செய்யவில்லை. தொலைக்காட்சியிலே தெளிவாக வந்திருக்கிறது, எப்படியெல்லாம் நிருபர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று. எனவே, தாக்கியவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி முன்பாக, உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்பாக, முதலமைச்சர் முன்பாக, சட்டத் துறை அமைச்சர் முன்பாக, D.G.P. முன்பாக நடைபெற்று இருக்கிற இந்த வன்முறைக்குத் தார்மீகப் பொறுப்பேற்று முதலமைச்சர், சட்டத் துறை அமைச்சர் மற்றும் D.G.P. ஆகியோர் பதவி விலகுவதுதான் தார்மீகக் கடமை என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டிலே (குறுக்கீடுகள்) சும்மா சத்தம் போடாதீர்கள். கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். நாங்கள் நடத்தின பேரணியிலே குறிப்பிட்ட ஒரு ரவுடியை வைத்துக்கொண்டு, காவல் துறையோடு சேர்ந்து நீங்கள் ஆடிய வன்முறை வெறியாட்டத்திற்கு அளவே கிடையாது. 'சாத்தான் வேதம்

[திரு. பரிதி இளம்வழுதி] [2010 ஏப்ரல் 26

ஓதுவதுபோல' பேசக்கூடாது. அதுமட்டுமல்ல உயர் நீதிமன்ற வளாகத்திலே சுப்பிரமணிய சுவாமிக்கு நீங்கள் வரவேற்பு கொடுத்தீர்களே, அந்த வரவேற்பை ஏற்பாடு செய்தவரே மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லாம் தெரியும். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று 25-4-2010 ஆம் நாள் சட்ட மாமேதை அம்பேத்கருடைய சிலைத் திறப்பு விழா உச்ச நீதிமன்ற நீதிபதியை வைத்து நடந்தபோது, அதிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும் பங்கேற்று உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்படி உரையாற்றிக் கொண்டிருக்கிறபோது பத்திரிகையிலே வந்த செய்திகளைப் பார்க்கிறபோது, சில மாவோயிஸ்ட் வழக்கறிஞர்கள் 'அனுமதியோம், அனுமதியோம்' என்று கோஷமிட, பிறகு துண்டுப் பிரசுரங்களை எல்லாம் வீச, சில பேர் கிழித்து கூட்டத்தின்மீது வீசி எறிய முற்பட, அங்கிருந்த சில வழக்கறிஞர்கள் இது தேவையில்லாத வேலை, இப்படிப்பட்ட பணியிலே நீங்கள் ஈடுபடக்கூடாது என்று தடுத்தபோது அங்கே கலவரம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கலவரத்தின் அடிப்படையில் படம் எடுத்துக்கொண்டிருந்த பத்திரிகைத் துறை நிருபர்கள், cameramen எல்லாம் தாக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. நீதிமன்றத்திற்குள்ளேயே இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்கலாமா என்பதுதான் thousand dollar question, still unanswered. ஏற்கெனவே அந்த நீதிமன்றத்திற்குள்ளே நடந்த நிகழ்வினைப் பார்த்தோம் என்று சொன்னால், நீதிபதி வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கிறபோதே சில வழக்கறிஞர்கள் முட்டையை வீசியதன் தொடக்கமாக இது it is a starting point. இப்படியெல்லாம் வருகிறது. இதிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதிமன்றத்திற்குள்ளே அல்ல, நீதிமன்ற வளாகத்திற்குள்ளே. . .

திரு. சி. ஞானசேகரன்: நான் குறிப்பிட்ட நிகழ்வு நீதிமன்றத்திற்குள்ளாகவே நடந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

2010 ஏப்ரல் 26]

திரு. சி. ஞானசேகரன்: The order is there. Even the Judge has already specifically mentioned that those advocates should be booked. A case should be registered என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு அதை அப்படியே விட்டுவிட்டார்கள். Order-ஐ dictate பண்ணி அப்படியே விட்டுவிட்டார்கள். ஆகவே, நான் வழக்கறிஞர் என்ற முறையில் அறிந்துகொள்ள விரும்புவது, இங்கே பல வழக்கறிஞர்கள் இருக்கிறோம், வழக்கறிஞர் தொழிலை Noble profession என்று சொல்வார்கள். அந்த Noble profession-இலே ஈடுபடக்கூடியவர்கள் தங்களுடைய கடமையை உணர்ந்து பணியாற்ற வேண்டியது மிகமிக முக்கியம். குறிப்பாக அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுகிற உரிமை இருக்கிறது, நான் இல்லையென்று சொல்லவில்லை, காட்டட்டும். ஆனால் அப்படிக் காட்டுகிறபோது வன்முறையிலே ஈடுபடக்கூடாது. நீங்கள் யாருக்காவது கறுப்புக் கொடி காட்ட வேண்டுமென்றால் தனியாக ஒரு இடத்தைக் கேட்டுப்பெற்றுச் செய்ய வேண்டும். ஏனென்றால் நேரு சிலைத் திறப்பு விழா நடந்த காலத்திலே இருந்து, அந்த ஜனநாயக முறைப்படி கறுப்புக் கொடி காட்டுகிற நிகழ்வு நடைபெற்றிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுங்கூட 'நான் கடந்த 72 ஆண்டுகளில் என்னுடைய அரசியல் வாழ்வில் எத்தனையோ பல எதிர்ப்புகளை எல்லாம் சந்தித்து, அதையே மாலையாகப் போட்டுக்கொண்டவன்' என்றுகூட தன் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், முதலில் காவல் துறைமீது பல வழக்குகள் போடப்பட்டு, அதனால் காவல் துறையினர் நமக்கு எதற்கு வம்பு என்று சும்மா இருந்துவிட்டார்களோ என நான் கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், எப்படியாவது இதிலே என்ன நடந்தது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

இப்போதுகூட நாம் பத்திரிகைத் துறையைப் பற்றி அதிகமாக விவாதித்தோம். பத்திரிகைத் துறையைச் சார்ந்த நண்பர்கள் அங்கே தாக்கப்பட்டது எவ்வாறு என்பது குறித்தும், how this incident has happened, started என்பது குறித்தும், இனி இப்படிப்பட்ட நிகழ்வுகள் வராமல் பார்த்துக்கொள்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பது குறித்தும் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று உயர் நீதிமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களும், உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி சதாசிவம் அவர்களும், தமிழக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களும், நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், அனைத்து உயர் நீதிமன்ற நீதிபதிகளும், வழக்கறிஞர் பெருமன்றமும் கலந்து கொண்டு, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய திருவுருவச் சிலையைத் திறந்து வைக்க உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் வருகை தந்திருந்தபோது, அந்த விழாவில் வெறும் 6 நபர்கள் என்று கருதுகிறேன்; கறுப்புக் கொடி காட்ட முயற்சித்திருக்கிறார்கள். அந்த 6 நபர்களை அப்புறப்படுத்த வேண்டிய பொறுப்பு காவல் துறைக்கு உண்டு. அவர்கள் அப்புறப்படுத்தவில்லை; இது ஒன்று. இரண்டாவது, குறைந்தபட்சம் காவல் துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர்தான் நீதிமன்றத்திற்குள்ளே வரக்கூடாதே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடந்த சம்பவத்தையொட்டி, காவல் துறையினர் உள்ளே வரக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய உளவுத் துறையினர், இதுபோன்ற ஒரு முயற்சியில் சிலர் ஈடுபட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இழுக்கை ஏற்படுத்த, அவமானத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டு, ஒரு குழு இதில் ஈடுபட்டிருக்கிறது என்பதை ஏற்கெனவே தெரிந்து, அவர்களை அழைத்து, அன்பான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய

2010 ஏப்ரல் 26] [திரு. தி. வேல்முருகன்]

சிலையைத் திறக்க வருகின்ற நிகழ்வில், நமக்குள் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், அவர்களை வைத்துக்கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் கறுப்புக் கொடியின்மூலம் எதிர்ப்பைக் காட்டுவது ஏற்புடையதல்ல என்ற கருத்தை காவல் துறையினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், இந்த நிகழ்வு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மட்டும் ஏற்பட்ட ஓர் அவமதிப்பாகக் கருதவில்லை; இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும் அவமதித்ததாகவே நான் கருதுகிறேன்.

அருமைச் சகோதரர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, ஜனநாயக நாட்டில் போராடுவதற்கு, கறுப்புக் கொடி காட்டுவதற்குச் சில வரைமுறைகள் இருக்கின்றன; வழிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் அவற்றைக் கடைப்பிடித்திருக்கலாம். அதை விட்டுவிட்டு, பதிலுக்கு இன்னொரு பிரிவினர் அவர்களைத் தாக்குகின்ற அந்த முயற்சி, செங்கற்களைக் கொண்டு தாக்கி, அடிக்க நினைப்பதும், அதைப் படம் பிடித்த பத்திரிகையாளர்கள், “இந்து” பத்திரிகையினுடைய, N.D.T.V.-யினுடைய பத்திரிகையாளரைக் காவல் துறையினர் அழைத்துச் சென்று-மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவல் துறையினர் நீதிமன்ற வளாகத்திற்குள்ளே வரக்கூடாது என்று சொல்கிறார்கள்—ஒருசில காவலர்கள் ஒரு பத்திரிகையாளரை மூன்று மணி நேரம் ஒரு அறையிலே பூட்டி வைத்திருக்கிறார்கள். உடனே பத்திரிகையாளர்களெல்லாம் சேர்ந்து அந்தப் பத்திரிகையாளரை விடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால், விட மறுக்கிறார்கள். அதன் பிறகு மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கோ அல்லது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கோ கொண்டுவரப்பட்டு, அதன் பிறகு மூன்று மணி நேரம் கழித்து அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே, எது எப்படி நடந்திருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுகின்ற அந்த நிகழ்வில் ஏற்பட்டிருக்கின்ற அசம்பாவிதம் தமிழ்நாட்டிற்கும், நம்முடைய கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் உகந்ததல்ல. உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை வைத்துக்கொண்டு, ஒருசில வழக்கறிஞர் சமூகம் நடந்துகொண்ட அந்தச் செயல் வருத்தத்திற்குரிய செயல் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவுசெய்து, இனி வருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கும் என்றால் முன்கூட்டியே, சம்பந்தப்பட்டவர்களை, பிரச்சினைக்குரியவர்களை அழைத்துப் பேசி, ஒரு சுமூகமான தீர்வை ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசு ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். கறுப்புக் கொடி காட்டுவதற்கு ஜனநாயகத்திலே உரிமையுண்டு. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அங்கேயிருக்கக்கூடிய Advocate Association-ஓ, Bar Association-ஓ, ஓர் organisation-ஓ, அந்தமாதிரிச் செய்யவில்லை. யாராவது அப்படிக் கறுப்புக் கொடி காட்ட வேண்டுமென்று நினைத்தாலும், கறுப்புக் கொடி காட்டுவதற்கு முன்னாலே, permission வாங்க வேண்டும். காவல் துறையினரிடம் போய், எங்களுக்கு permission வேண்டுமென்று கேட்கவேண்டும். அப்பொழுது அவர்கள் ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுப்பார்கள். அந்த இடத்திலே நின்று கறுப்புக் கொடி காட்ட வேண்டும். ஆனால், அதை விட்டுவிட்டு—வக்கீல்கள், எல்லோரும் கறுப்பு உடையில் வருகிறார்கள்; யாரிடம் கறுப்புக் கொடி இருக்கும் என்று சொல்ல முடியாது; போலீஸ் ஒவ்வொருவரையும் check up பண்ண முடியாது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு—நான்கு பேர் காலித்தனமாக எழுந்து நின்றுகொண்டு கறுப்புக் கொடி காட்டுகிறார்கள் என்றால், அவர்களைக் கண்டிக்கிறேன் என்று சொல்வதற்கு உறுப்பினர் வேல்முருகன் அவர்களுக்கு வாய் வரவில்லை. வருத்தப்படுகிறாராம்! வெட்கப்படுகிறாராம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேல்முருகன் என்ன பேச வருகிறான் என்பதை உள்வாங்கிக் கொள்ளாமல் அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் உணர்ச்சிவசப்படுகிறார்கள். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டியதற்காக வருத்தப்படுவதோடு மட்டுமல்லாமல், இறுதியாக என்னுடைய உரையின் முடிவுக்கு வருகிறேன். இது கண்டனத்திற்குரியது; கண்டிப்பிற்குரியது. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இதை நாங்கள் கண்டிக்கிறோம். அந்தக் கருத்தைப் பதிவு செய்துகொள்வதற்குள்ளாக நான் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏனென்றுச் சொன்னால் ஏற்கெனவே அங்கு ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கிறது. அந்தக் காரணத்திற்காக அந்தச் செயலை அவர்கள் செய்திருக்கக்கூடாது. அப்படிச் செய்தவர்களை அங்குத் தாக்கியதும் கண்டனத்திற்குரியது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அப்பாவிப் பத்திரிக்கையாளர்கள் ஒவ்வொரு விஷயங்களிலும், உயர் நீதிமன்ற மோதலாக இருந்தாலும், நேற்றைய விழாவாக இருந்தாலும், தாக்கப்படுவதும், அடிக்கப்படுவதும், உதைக்கப்படுவதும், மிதிக்கப்படுவதும் பத்திரிகை நண்பர்களின் வேதனைக் குரலை வெடிக்கச் செய்திருக்கிறது. அதையும் இந்த நேரத்தில் முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, short ஆகத்தான் சொல்லப் போகிறேன். நேற்றைய தினம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றிருக்கக்கூடிய சம்பவம் என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்தனை சம்பவங்களுக்குப் பிறகும், மிகச் சரியான நல்ல கருத்துகளை அந்தப் பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளார்கள். மேலும், ஒரு பிரச்சினை வருகிறபோது, அதை நிதானமாகவும், அதை எவ்வாறு கையாள்வது என்ற முறையிலும் அவர்கள் அந்தப் பொதுக் கூட்டத்தில் பேசிய கருத்துகள் முன்னுதாரணமாக இருந்தன. ஆனால், ஜனநாயகத்தில் கறுப்புக் கொடிக் காட்டுவது என்பது மிகப் பெரிய குற்றமல்ல. கறுப்புக் கொடி காட்டியிருக்கக்கூடிய அந்தக் குழுவினர் வழக்கறிஞர்கள், எந்த அரசியலமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுடைய கோரிக்கைகள், கருத்துகள் ஜனநாயகப்பூர்வமாக இருக்கின்றவா என்று முன்னதாகவே காவல் துறை தலையிட்டு, அவர்களுடைய அந்தப் போராட்டத்தை முறைப்படுத்தியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. மாறாக, அவர்கள்மீது பதிலுக்கு பதில் அடிதடி, சண்டை என்ற முறையிலே சென்றதன் காரணமாகத்தான். ...

[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Police-இடம் போய் நாங்கள் இப்படி கறுப்புக் கொடி காட்டப்போகிறோம், எங்களுக்கு உரிமையுண்டு; நாங்கள் கறுப்புக் கொடி காட்டுவது ஜனநாயக உரிமை என்று அவர்கள் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் Police இது போல் வேண்டாம் என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கலாம், consider செய்திருக்கலாம். கோரிக்கை வைத்திருந்தால், என்ன கோரிக்கை என்று கேட்டிருக்கலாம். இவர்கள் யாரும் Police-இடம் போகவில்லை; கறுப்புக் கொடி காட்டப் போகிறோம் என்று சொல்லவில்லை; கோரிக்கையை யாருக்கும் சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால் திருட்டுத்தனமாகக் கொண்டு வந்த கொடியைக் காட்டுவார்கள்—அவ்வளவு ஜனத்திலே—அதைப் பார்த்துக்கொண்டு மற்றவர்களெல்லாம் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருப்பார்களா? (குறுக்கீடுகள்)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறுப்புக் கொடி காட்டுவது என்பதற்கான அனுமதியைக் காவல் துறை வழங்குவதேயில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உட்பட பல போராட்டங்களுக்கு, மறியல், முற்றுகை என்று கேட்டாலே அனுமதி மறுத்துவிடுவார்கள். ஆகவேதான், அவர்கள் காவல் துறைக்குத் தெரியாமல் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்ற உணர்வுக்குச் செல்கிறார்கள். எப்படி இருந்தாலும். ...

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் Police-இடம் permission கேட்டு அவர்கள் கொடுக்கமாட்டேன் என்று சொல்லியிருந்தால், அதனால்தான் இந்த வழியை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால், நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று அவர்களே செய்தார்கள் என்றால் அப்போது என்ன சட்டம்-ஒழுங்கு? அப்போது என்ன யோக்கியமானவர்கள் அவர்கள்? என்ன ஜனநாயக முறையைக் கற்றவர்கள்? ஆக, இவ்வளவு பெரிய நீதிமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முக்கியமானவர்கள் உட்கார்ந்திருக்கும் அறையிலே காலித்தனமாக 4 கொடியைத் தூக்கிக் காட்டினால், உணர்ச்சியுள்ளவர்கள் இரண்டு

போடத்தான் செய்வார்கள். இது நியாயம்தான். இதை யாராலும் மறுக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால், எவன் பொறுத்துக்கொண்டிருப்பான்? நான் கேட்கிறேன், உங்கள் தலைவர்கள் முன்னாலே இப்படி நடந்தால் நீங்களெல்லாம் பொறுத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பீர்களா? உணர்ச்சி உள்ளவன் கிடையாதா? மானம் உள்ளவன் கிடையாதா? திராவிட முன்னேற்றக் கழகத்திலே, இரத்த உணர்ச்சி கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, பேசி முடித்துவிட்டீர்களா?

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு கடுமையான போராட்டத்தைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக நேர்த்தியாக சமாளித்தார்கள். அதைத்தான் ஒரு போராட்டத்தை, கோபத்தை, ஆவேசத்தை அரசியல் அனுபவத்தோடு சமாளிக்கக்கூடிய விதம் என்று நாங்கள் பார்க்கிறோம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இவ்வளவு தூரம் ஆவேசப்பட வேண்டிய தேவையில்லை என்று நான் கருதுகிறேன். எனது கருத்தைத் தாழ்மையோடு நான் பதிவு செய்கிறேன்.

மேலும், இந்த கறுப்புக் கொடி காட்டுவது சரியா, தவறா என்ற விவாதத்திற்குள் இப்போது நாம் செல்ல வேண்டியதில்லை. இதுபோன்ற பிரச்சினைகள் உளவுத் துறைக்கும் தெரிந்திருக்கும். அதைக் கையாண்ட முறையில்தான் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அதை காவல் துறையும், அந்த அரசு விழாவிற்கு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அமைப்புகளும் கவனித்திருக்க வேண்டும் என்று நான் பார்க்கிறேன். இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி, நான் முடித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஒரு கவன ஈர்ப்பின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு ஏதாவது கருத்தா?

செல்வி கே. பாலபாரதி: இல்லை, இல்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, இந்த subject இல் பேசுவது என்றால் பேசுங்கள்; இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை திரு. சிவபுண்ணியம்.

[2010 ஏப்ரல் 26

முற்பகல் 11-00

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில், சமூகப் புரட்சியாளர் அம்பேத்கர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியிலே நடைபெற்ற அசம்பாவித சம்பவம், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டிக்கக்கூடிய சம்பவமாகக் கருதுகிறோம். இந்தச் சம்பவம் குறித்து நாம் பேசுகிறபொழுது, பல்வேறு செய்திகள் கவனத் திருப்பத்தை ஏற்படுத்துவதாக நான் கருதுகிறேன்.

குறிப்பாக, இங்கு எல்லோரும் அறிந்திருக்கிற காரணத்தினாலே, அதற்குரிய முறைகளின்படி போராட்டங்களை நடத்துவதில் தவறில்லை. அது அனுமதிப்பப்படுகிறதா, மறுக்கப்படுகிறதா என்பது பிரச்சினைக்குரிய ஒன்று. ஆனால், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நிகழ்ச்சி நடைபெறுகின்றபொழுது, வழக்கறிஞர்களாக இருக்கக்கூடியவர்கள் அனுமதி பெறாமல் கறுப்புக் கொடி காட்டியது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. சட்டத்தை நிலைநிறுத்தி, அதன்மூலம் நீதி வழங்குவதற்காக இருக்கின்ற நீதிமன்றம், அதற்காக வாதாடி உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கிற வழக்கறிஞர்கள், அவர்களே இப்படி அனுமதி பெறாமல் போராட்டம் நடத்துவதை நல்ல செயலாக நான் கருதவில்லை. ஆகவே, இது கண்டிக்கக்கூடிய செயல்.

குறிப்பாக, சென்னை உயர் நீதிமன்றம் என்று சொன்னாலே, அது ஏதோ ஒரு கலவர பூமிபோலக் காட்சியளிக்கிறதே, இதைப்பற்றி நாம் எப்படிக் கவலைகொள்கிறோம் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற ஒரு முக்கியமான செய்தி. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவது விரும்பத்தக்கதாக இல்லை என்பது என்னுடைய பணிவான கருத்து; வருத்தமான கருத்து. இந்தச் சம்பவத்திலும் அவர்கள் அந்த உயர் நீதிமன்ற சம்பவத்தைச் சுட்டிக்காட்டிப் பேசியதாகக்கூட பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆகவே, உயர் நீதிமன்றத்தில் இந்த மாதிரி செயல்கள் நடைபெறுகிறபோது, சாதாரண மக்கள் தங்களுக்கு நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையோடு அந்த நீதிமன்றத்தின்மீது நம்பிக்கை வைத்துச் செயல்படுகிறபொழுது, அதை எதிர்பார்க்கிறபொழுது, அந்த நீதிமன்ற வளாகமே இப்படி வன்முறைக் களமாக மாறும் என்று சொன்னால், உண்மையிலேயே நீதியின்மீது மக்களுக்கு இருக்கிற நம்பிக்கை வெகுவாகக் குறைந்து விடுகிற அபாயம் வருகிறது என்ற

2010 ஏப்ரல் 26] [திரு. வை. சிவபுண்ணியம்]

அந்தக் கவலையை நாம் உணரவேண்டும்; அதன்மீது நமது கருத்தை நாம் செலுத்த வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

இந்த நிகழ்ச்சி குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சியிலே பங்கெடுக்கிறபொழுது, அப்படி ஒரு திடீர் சம்பவம் நடைபெறுகிறதென்றால், அது வேதனையைத்தான் அளிக்கும். அதுவும் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவிலே நடைபெற்ற சம்பவம் விரும்பத்தகாத ஒன்று என்று நான் கருதுகிறேன்.

ஆதி திராவிட மக்களுக்குரிய போராட்ட நாயகனாக விளங்கியவர், சட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, அதை உருவாக்கியவர் என்ற முறையில், அவருக்குச் சிலை திறப்பு விழா நடைபெற்றிருக்கிறது. அந்த இயக்கத்தின் பெயரைப் பார்க்கிறபோது, 'மக்கள் கலை இலக்கிய மனித உரிமைகள் இயக்கம்' சார்பில் அந்தச் சம்பவம் நடைபெற்றது என்ற செய்தியைப் பத்திகையிலே பார்க்கிறேன். மக்களுடைய உரிமைக்காகப் போராடுகிற அவர்களே, அம்பேத்கர் சிலை திறப்பு விழாவிலே அதை வெளிப்படுத்த வேண்டுமா? எவ்வளவோ காலங்கள் இருக்கின்றன; எவ்வளவோ சம்பவங்கள் இருக்கின்றன; அந்தச் சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்தி அப்படிப்பட்ட விஷயங்களைச் செய்யலாம். ஆனால், முதல்வர் அவர்கள் வருகிறார்கள்; அந்த இடத்தில் இதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறபோது, அனுமதியைப் பெற்றிருக்கலாம். அனுமதி மறுத்திருந்தால்கூட, அவர்கள் வெளியிலிருந்துகூட அதைச் செய்யலாம். அனுமதி மறுக்கிறபொழுது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நாங்கள், அதையும் மீறி சில நேரங்களில் போராட்டங்கள், இயக்கங்கள் நடத்தியிருக்கிறோம். அதற்காக சிறைத் தண்டனையைக்கூட நாங்கள் அனுபவித்திருக்கிறோம். அப்படித்தான் சட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும். அதை மீறிய செயலாக, திடீரென்று செயல்பட்டதென்பது மற்றவர்களுடைய உணர்ச்சி வேகத்தைத் தூண்டுவதற்குரிய தூண்டுகோலாக இருந்திருக்கிறது.

அப்படி நடந்த காரணத்தினாலே, இன்னொரு பக்கத்திலே பதிலுக்குப் பதில் என்ற முறையிலே அங்கே தகராறு நடந்திருக்கிறது. நாற்காலிகள் தூக்கி வீசப்பட்டிருக்கின்றன, அடித்திருக்கிறார்கள். உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் என்று சொன்னாலே தாக்குதலுக்குள்ளாகிக் கொள்வார்கள், மோசமாக, முரட்டுத்தனமாக

நடந்துகொள்வார்கள் என்கிற அந்தச் செய்தி வருவது என்பது நல்லதா என்பதுதான் இதிலே இருக்கிற செய்தி. ஆகவே, அந்தத் தாக்குதல் சம்பவம் தேவையற்ற சம்பவம், அது நடந்திருக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

இப்படி ஒரு சம்பவம் நடக்கிறபோது அதைச் செய்தியாகச் சேகரிக்கச் செல்கிற நிருபர்களும், Camera-man-களும் தாக்கப்படுவது தொடர் நிகழ்ச்சியாக மாறுகின்றது. இது ஒரு தேவையில்லாத, அருவருக்கத்தக்க செய்தியாக நான் பார்க்கிறேன். ஆகவே, இதையும் கண்டனத்திற்குரியதாக நான் கருதுகிறேன். எனவே, நீதிமன்ற வளாகத்தில் சிலை திறப்பு விழாவிலே அப்படிக் கறுப்புக் கொடி காட்டிய சம்பவம் என்பது சரியான சம்பவமல்ல. அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அவர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய முறையிலே வெளிப்படுத்தியிருக்க வேண்டுமேயொழிய, இப்படி மீறுதலான காரியங்களை, சட்டத்திற்குட்பட்டு செயல்பட வேண்டியவர்களே செய்தார்கள் என்பதுதான் பொதுமக்களுக்குச் சந்தேகத்தையும், அச்சத்தையும், கேள்வியையும், எழுப்புகின்றது. இதுபோன்ற சம்பவம் எதிர்காலத்தில் நடக்காதவண்ணம் பாதுகாக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ம.தி.மு.க. சார்பாக டாக்டர் சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களும், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களும், மற்றுமுள்ள நீதிபதிகளும் கலந்து கொண்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலை திறப்பு விழா நேற்று நடந்திருக்கிறது.

முற்பகல் 11-05

அந்தச் சிலையைத் திறந்ததில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், அந்த விழாவிலே ஒரு அசாதாரணமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதில் சிலர் கறுப்புக் கொடி காட்டியிருக்கின்றார்கள். அதை எதிர்த்து அவர்களைப் பலர் தாக்கியிருக்கின்றார்கள். அங்கே ஒரு விபரீதச் சூழ்நிலை

ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையைப் பார்த்தால், நீதிமன்ற வளாகத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி நடப்பதை நினைக்கும்பொழுது, வேதனையும், கவலையும், வருத்தமும் அளிக்கிறது. ஒரு மனிதனோ, அல்லது ஒரு இயக்கமோ அல்லது ஒரு அமைப்போ, ஒரு முறை தவறு செய்தால் அதற்குரிய காரணத்தை அறியலாம். ஆனால், அதே தவறுகள் மீண்டும் மீண்டும் நடந்து கொண்டிருந்தால், மன நிலையைத்தான் ஆராய வேண்டும். ஆகவே, நீதிமன்ற வளாகத்தில் இப்படி அடிக்கடி நடைபெறுகின்ற மோதல்கள், கலாட்டாக்களைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். அங்கே நடந்த நிகழ்ச்சியைப் படமெடுக்கச் சென்றிருந்த பத்திரிகையாளர்கள் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். அங்கே புகைப்படக் கலைஞர்கள் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, நடந்த நிகழ்ச்சிக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மிகுந்த கவலையையும், வேதனையையும் தெரிவித்துக்கொள்வதோடு, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அடிக்கடி நடப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அந்த நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களையும் அவமதிக்கின்றவிதமாக நடைபெற்ற சம்பவத்தை, விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே வன்மையாகக் கண்டிக்கின்றோம். உயர் நீதிமன்ற வளாகத்திலே புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய சிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையேற்று திறந்து வைத்ததென்பது மிகவும் பொருத்தமான ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையைத் திறப்பதற்கு தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவிலேயே ஒரு பொருத்தமான முதல்வர் ஒருவர் உண்டென்று சொன்னால், அது நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைத்தான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

ஏனென்று சொன்னால், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுக்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அளிக்கப்படாத அங்கீகாரத்தை வழங்கி வருபவர் நம்முடைய முதல்வர் அவர்கள்.

அவர் பெயரிலே சட்டக் கல்லூரி, அவர் பெயரிலே சட்டப் பல்கலைக்கழகம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மகாராஷ்டிராவிலே, மராத்வாடா பல்கலைக்கழகத்திற்குப் புரட்சியாளர் அம்பேத்கர் பெயர் வைக்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோது, அந்தப் பெயரைச் சூட்டித்தான் ஆகவேண்டுமென்று வலியுறுத்தி, அங்கேயும் அவருடைய பெயரைச் சூட்ட வைத்தவர். ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து ஒருவர் உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தவர். இந்தியாவிலே முதன்முதலாக ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், இந்திய நாட்டின் முதல் குடிமகனாக, ஜனாதிபதியாக வரவிருந்த ஒரு நேரத்திலே அதற்கு ஆதரவு அளித்ததோடு மட்டுமல்லாமல், பல்வேறு தலைவர்களிடமும் ஆதரவைத் திரட்டி, மேதகு குடியரசுத் தலைவராக திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை அமர்த்தி அழகு பார்த்தவரும் நம்முடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக மாண்புமிகு திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கும் ஊக்கமாக, உறுதுணையாக இருந்தவர் நம்முடைய முதல்வர் என்பதை நாடு அறியும். அப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள், அம்பேத்கர் அவர்களுடைய சிலையைத் திறப்பதற்குப் பொருத்தமானவர் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அவர் அந்தச் சிலையைத் திறக்க வருகின்ற நேரத்திலே, இப்படி ஒரு திட்டமிட்ட அசம்பாவிதத்தை அங்கேயிருக்கின்ற சிலர் நிறைவேற்றியிருக்கின்றார்கள். அங்கே இருக்கின்ற வழக்கறிஞர் சங்கங்கள், குறிப்பாக SC, ST வழக்கறிஞர்களால் நடத்தப்படுகிற சங்கங்களெல்லாம் ஏற்கெனவே கூடிப் பேசி முதல்வர் அவர்கள் வருகின்ற நேரத்திலே எந்த ஒரு எதிர்ப்பும் காட்டப்படக்கூடாது என்று இதற்காகத் திட்டமிட்டுக் கொண்டிருந்த வழக்கறிஞர்களையெல்லாம், சந்தித்து மன்றாடியிருக்கிறார்கள், தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மீறி, அங்கே இந்த எதிர்ப்பு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அவமதிப்பு மட்டுமல்ல; உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களையே அவமதித்தது மட்டுமல்ல; அங்கே திறக்கப்பட்ட புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களையே அவமதிக்கின்ற விதமாகத்தான் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

2010 ஏப்ரல் 26] [திரு. து. ரவிக்குமார்]

முற்பகல் 11-10

இத்தகைய அவமதிப்பைச் செய்தவர்கள் மீது மிகக் கடுமையான கோபத்திலே இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். அந்த அளவுக்கு இது அவர்களுடைய உணர்வுகளைத் தூண்டியிருக்கின்றது. இந்த அவமதிப்பைச் செய்தவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் சட்ட ரீதியாக தண்டிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே வலியுறுத்துகின்றோம். இதை ஏன் அவர்கள் செய்தார்கள் என்று சொன்னால், இப்படி ஊடக கவனம் செலுத்துகின்ற நிகழ்வுகளிலே போய் எதிர்ப்பைத் தெரிவித்தால், தாங்களும் ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கலாம் என்ற மலிவான நோக்கத்தோடுதான் இத்தகைய காரியங்களை, இந்த மாதிரியான வழக்கறிஞர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்களுடைய நோக்கத்திற்குத் துணை போவதுபோல் இல்லையென்று சொன்னாலுங்கூட, இத்தகைய சம்பவங்கள் நடக்கும்போது, ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அதைப் போய் படம் எடுக்கவோ, செய்திகள் திரட்டவோ முற்படுகின்ற நிகழ்வு இயல்பாக நடக்கின்றது. அவர்களும் அப்போது தடுக்கப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் இடையிலே போய் மாட்டிக் கொண்டு, ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் இடையிலே போய் மாட்டிக்கொண்டு அல்லலுற்றிருக்கின்றார்கள். அவர்கள் இப்படித் தடுக்கப்படுவதோ அல்லது தாக்கப்படுவதோ இனி நடக்கக் கூடாது. மாண்புமிகு முதலவர் அவர்கள் இப்பொழுதுதான் இந்த அவையிலே சொன்னார்கள். எப்படிப் பத்திரிகை சுதந்திரத்திற்கு ஒரு பாதுகாவலனாக இந்த ஆட்சி இருக்கிறது என்று சொன்னார்களோ, அப்படிப்பட்ட ஆட்சியிலே, பத்திரிகையாளர்கள் இப்படித் தாக்கப்படக்கூடாது, அப்படிப்பட்ட சம்பவங்கள் இனித் தொடரக் கூடாது. உயர் நீதிமன்ற வளாகத்திலே வன்முறையைத் தூண்டி எதிர்ப்பினைத் தெரிவித்தவர்கள்மீது கடுமையாக நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கர் அவர்களுடைய சிலையை உயர் நீதிமன்ற வளாகத்திலே வைப்பதில், இந்த அரசோ அல்லது இந்த அரசின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கின்ற நானோ யாராவது

குறுக்கீடு செய்து, அந்தச் சிலையை அங்கே வைக்கக் கூடாது என்று அடம் பிடித்திருந்தாலோ அல்லது தடுத்திருந்தாலோ, கறுப்புக் கொடி காட்ட உணர்ச்சியுள்ளவர்கள் கூடினால், அது ஒரு முறையானதாகவும், நியாயமானதாகவும் இருக்கக்கூடும்.

1972-1977 இல் தமிழகத்திலே, வட சென்னையிலே ஒரு கலைக் கல்லூரிக்கும் பிறகு இந்தியாவிலேயே முதன்முதலாக, ஒரு சட்டக் கல்லூரிக்கும் அம்பேத்கர் பெயரை வைத்தவன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முறையில், சட்டக் கல்லூரிக்குப் பிறகு, சட்டப் பல்கலைக்கழகமே இங்கு உருவாக்கப்பட வேண்டுமென்று ஒரு முயற்சியை எடுத்தபோது, அதற்கான இட வசதியில்லை என்று சொன்னபோது, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கிரீன்வேஸ் சாலையில் முதலமைச்சர் தங்குவதற்கென ஒரு வீடு என்று ஒரு பெரிய மாளிகையை ஏற்பாடு செய்திருந்தார். நாளைக்கே அங்கே குடிபோக வேண்டுமென்று நாளெல்லாம் குறித்திருந்தார். என்னை அழைக்க வந்தபோது, அவரிடம் சொன்னேன், சட்டப் பல்கலைக்கழகம் அம்பேத்கர் பெயரில் உருவாக இடமில்லை என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, எனக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கிரீன்வேஸ் சாலை வீட்டை அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய அலுவலகமாக்குங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னேன்.

முற்பகல் 11-15

மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை வைப்பதாக மராட்டிய சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்து, பல ஆண்டுகளாகின்றன, ஆனால் தீர்மானம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லையென்ற செய்தியை ஒரு பத்திரிகையில், ஒரு மூலையில் வந்ததைப் படித்துவிட்டு, அப்படியா என்று வருத்தப்பட்டு, தமிழ்நாட்டிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், கிளைச் செயலாளர்கள் அத்தனை பேரும், இலட்சக்கணக்கில் அங்கே மராட்டிய மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டுமென்று தந்தியைக் கொடுங்கள் என்று சொல்லி, அப்போது அங்கே கவர்னராக இருந்த திரு. அலெக்ஸாண்டர் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு, இன்னும் ஒரு வாரத்தில் உங்கள் தந்திக்குப் பதிலாக இங்கே சட்டம் இயற்றப்படும் என்று உறுதியளித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மராட்டியத்திலே அம்பேத்கர் பல்கலைக்கழகம் உருவானது.

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தவன் கருணாநிதி என்று (மேசையைத் தட்டும் ஒலி) என்மீது குற்றஞ்சாட்டி, ஆகவே உயர் நீதிமன்றத்திற்குள்ளே, உச்ச நீதிமன்றத்திற்குள்ளே இவரை நுழைய விடக்கூடாது, அனுமதியோம் என்று சொல்லியிருந்தால் அது நியாயம். இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தது தப்பு என்று என்மீது குற்றஞ்சாட்டி, சில பேர் கறுப்புக் கொடியோடு வந்தார்கள் என்று சொல்ல மாட்டேன்; வந்த பிறகு சட்டைப் பையிலே இருந்த கறுப்புக் கொடியை எடுத்து வீசினார்கள் என்றால், இங்கே இந்தச் சட்டமன்றத்திலே அதுபற்றிய பிரச்சினை வந்த பிறகுதான் அது நாட்டிற்கே தெரிகிறது, யாருக்கும் அதுவரையிலே தெரியவில்லை. அங்கே கூடியிருந்த கூட்டம் ஓர் ஆயிரம் பேர் இருக்கலாம், அந்தப் பந்தலில். அந்த ஆயிரம் பேருக்கிடையிலே நான்கைந்து பேர் எழுந்து, வழக்கறிஞர் சங்கமோ அல்லது பால் கனகராஜ் போன்ற நண்பர்களுடைய தலைமையிலே உள்ள அங்கீகாரம் பெற்ற சங்கங்களோ, யாரும் ஈடுபடாத நிலையில் ஒருசில கட்சிகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு, எந்தக் கட்சிகளின் பெயரைச் சொன்னால் இங்கே பயப்படுவார்கள் என்று அந்தக் கட்சிகளுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு, அம்பேத்கர் பெயரையும் அங்கே வீணாகக் களங்கப்படுத்தி, இந்தக் கொடியை நாங்கள் பிடிக்கிறோம் என்று சொல்லி, அதன் காரணமாக ஒரு கலாம் விளைவிக்கப்பட்டது என்றால், அப்படிப்பட்ட கலாம் விளைந்ததை நான் ஏற்றுக்கொள்ளவும் இல்லை; வரவேற்கவும் இல்லை.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களைப்போல, அவர்களுடைய கவலையிலே நானும் பங்குகொள்கின்றேன். அந்தக் கலவரத்திலே பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள், செய்தி நிறுவனங்களுடைய கருவிகள் தாக்கப்பட்டன என்ற செய்திக்கு நானும் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்பேன் என்ற உறுதியையும் இங்கே அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால் ஒன்று; ஏன், எதற்காக திடீரென்று அங்கே கறுப்புக் கொடி? கறுப்புக் கொடிக்கு அஞ்சுகிற இயக்கம் அல்ல திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அது நடத்தாத கறுப்புக் கொடி இயக்கம் ஒன்று எனத் தமிழ்நாட்டிலே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு கறுப்புக் கொடி இயக்கங்களை நடத்தியிருக்கிறோம்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2010 ஏப்ரல் 26

ஆசியாவின் ஜோதி, இந்தியாவின் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கே கறுப்புக் கொடி காட்டினோம். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய தலைமையிலேயே தஞ்சைத் தரணியில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. ஆனால் எப்படி? அதற்கு ஒரு முறை கிடையாதா? முன்கூட்டியே போலீசாரிடத்திலே அனுமதி கேட்டு அவர்கள் எந்த இடத்திலிருந்து கறுப்புக் கொடி காட்டலாம் என்று வரையறுத்துச் சொல்கிறார்களோ அந்த இடத்திலிருந்துதான் தி.மு.கழகத்தின் சார்பாக எந்தத் தலைவருக்கும் கறுப்புக் கொடி காட்டப்பட்டிருக்கிறது. இது நம்முடைய பன்னீர்செல்வம் அவர்களுக்கும் தெரியும். ஏனென்றால், அவரும் எங்களோடு இருந்தவர்தானே! இங்கே இருந்து போனவர்களுக்கெல்லாம் தெரியும். ஜனநாயக ரீதியிலேதான் கறுப்புக் கொடி இயக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட இயக்கம் நடத்தியிருக்கிறது. ஆனால், திடீரென்று ஒரு தாக்குதல், ஒரு எதிர்ப்பு அதற்கு நாங்கள் பயந்து விடுவது என்றால் இயலாது.

முற்பகல் 11-20

ஏனென்றால் ஒன்றை உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் கடலூருக்குச் சென்றால் தயவுசெய்து கவனித்துப் பாருங்கள். கடலூரில் ஒரு பாலம். அந்தப் பாலத்தையொட்டி ஒரு சாலை. அந்தப் பாலத்தின் ஒரு மூலையில் பெரியாருடைய சிலை. அதை நான்தான் திறந்து வைத்தேன். பெரியார் தலைமையிலே அந்தச் சிலையை நான்தான் திறந்து வைத்தேன். அந்தச் சிலைக்கு ஒரு வரலாறு உண்டு. என்ன வரலாறு என்றால், அந்த இடத்தில் பெரியார் பேசும்போது, அவர்மீது செருப்பை வீசினார்கள் என்பதற்காக, அந்தச் செருப்பை பெரியார் பத்திரப்படுத்தி, அந்தச் செருப்பு வீசியவனைக் கூப்பிட்டு அவனுக்குப் பரிசளித்தார் என்றெல்லாம் வரலாறு உண்டு. அந்தச் செருப்பை எங்கே வீசினார்களோ, அந்த இடத்திலேயே பெரியாருக்குச் சிலை வைக்க வேண்டுமென்று, பெரியாருக்குச் செருப்பு வீசிய இடத்திலேதான் இன்றைக்கு அங்கே சிலை வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் என்னுடைய 72 ஆண்டுக் கால பொது வாழ்க்கையிலே நான் நினைத்துப் பார்க்கமாட்டேனா? அவர்களெல்லாம் பட்டபாடு; அவர்களெல்லாம் சந்தித்த இந்தச் சோதனைகள்; இந்த வன்முறைகள் என் ஞாபகத்திற்கு வராதா? அப்படி வந்த காரணத்தால்தான், நீதிமன்றத்திலே உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு முன்பாக, உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு முன்பாக,

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

எனக்கு எதிரில் நான்கைந்து பேர்கள் நான் பேச எழுந்ததும் கறுப்புத் துணியைக் காட்டி, "அனுமதியோம், அனுமதியோம்" என்று சொன்னார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், நான் உள்ளே போய் பேச ஆரம்பித்த பிறகு, நீதிமன்றத்திற்குள் அனுமதியோம் என்று சொன்னார்கள். நீதிமன்றத்திற்குள் அனுமதிக்கப்பட்டுதான் உள்ளே சென்றிருக்கிறேன். மேடையிலே அனுமதிக்கப்பட்டுத்தான் அங்கிருந்து பேச ஆரம்பித்திருக்கின்றேன். இதற்குப் பிறகு "அனுமதியோம், அனுமதியோம்" என்றால் என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. ஆக, எங்கிருந்தோ பின்னால் தூண்டப்பட்டு, அனுப்பப்பட்ட ஒரு கூட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டத்தில் பஞ்ச பாண்டவர்களைப் போல ஐந்தாறு பேர்கள் வந்து இத்தகைய ஒரு கலாட்டாவைச் செய்தார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நான் மிகுந்த அடக்கத்தோடு, அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றவுடன், என் பேச்சை நிறுத்திவிட்டு அது என்ன என்றுகூட பார்க்காமல், அதைப்பற்றிக் கவலைப்படாமல் பேசிக்கொண்டிருந்தேன். எல்லாப் பத்திரிகைகளிலும், 'எதைப் பற்றியும் கவலைப்படாமல் பேசிக்கொண்டே இருந்தார்' என்று எழுதினார்கள். டி.வி-யில்கூட சொன்னார்கள்; ஜெயா டி.வி-யிலும் 'எதைப் பற்றியும் கவலைப்படாமல் கருணாநிதி பேசிக்கொண்டே இருந்தார்' என்று சொன்னார்களாம். அதுதான் கருணாநிதி! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. இந்திரா காந்தி அம்மையாரும், நானும் வ.உ.சி. சிலை திறப்பு விழா என்பதற்காக, தூத்துக்குடிக்குச் சென்றிருந்தோம். திரு. கோசல்ராம் அவர்களும் இருந்தார்கள். தூத்துக்குடியில் நமது கல்வியாளர் வீரபாகு அவர்களும் அங்கே என் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். அங்கே பெரிய கூட்டம், அந்தக் கூட்டத்தில் 10 ஆயிரம் பேர்களுக்கு மேல் இருந்தார்கள். இடையிடையே சிறு சிறு கூச்சல். கூட்டம் நடந்துகொண்டே இருந்தது. திடீரென்று அந்தக் கூட்டத்தில்— தூத்துக்குடியில் சொல்வார்கள், 'சொட்டை விழுந்துபோன கூட்டம்' என்று; சொட்டை விழுந்து போய்விட்டது என்றால், என் தலை மாதிரி. பெரிய கூட்டத்தில் வழுக்கை விழுந்த மாதிரி. வழுக்கை விழுந்தால் அந்த இடத்தில் அடர்த்தி இருக்காது இல்லையா? அதுபோன்று அங்கே சொட்டை விழுந்து போய்விட்டது,

சொட்டை விழுந்து போய்விட்டது என்று சொன்னார்கள். அப்போது இந்திரா காந்தி அம்மையார் கோசல்ராமிடம் சொன்னார்கள், "That is Karunanidhi" என்று (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டம் நிறைவு பெற்ற பிறகு, அடங்கிய பிறகு, அமைதி பெற்ற பிறகு "That is Karunanidhi" என்று சொன்னார்கள். அந்த வீர வாக்கியத்தை, பாராட்டை நான் இழந்துவிட முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் உயர் நீதிமன்றத்திலே நடைபெற்ற அந்தச் சம்பவத்திலும் நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் பேசிக்கொண்டே இருந்தேன். நான் இன்று நேற்றல்ல; 16 வயது முதல் இப்படித்தான் பேசிக்கொண்டே இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் பேசுகின்ற இடத்திலே பாம்பு வந்தாலும், பாம்பு விடப்பட்டாலும், செருப்பு வீசப்பட்டாலும், கல் எறியப்பட்டாலும் பேசிக்கொண்டேதான் இருக்கிறேன்; பேசிக்கொண்டே இருப்பேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-25

என்னுடைய கடைசி மூச்சு அடங்குகிற வரையில், இருதயத்திலே கடைசித் துடிப்பு நிற்கிற வரையில் பேசிக்கொண்டே இருப்பேன். (மேசையை தட்டும் பலத்த ஒலி) ஆனால், அந்தச் சம்பவம் நடைபெற்றபோதும் நான் பேசிக் கொண்டேதான் இருக்கிறேன். நடைபெறுவதை நான் கவனிப்பதைப்போல் இல்லை. உயர் நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் நிகழ்ச்சி முடிந்த பிறகு என்னைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். நன்றாகச் சமாளித்தீர்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். மாலைப் பத்திரிகைகளிலே யாரும் செய்தியைப் போடவில்லை; காலை ஏடுகளிலே செய்தி வந்திருக்கிறது. எனக்கு அதிலே ஒரு மகிழ்ச்சி என்னவென்றால், இந்தச் செய்தி வராமலேயே போய்விடுமோ என்று எண்ணினேன். நல்லகாலம், இந்தச் செய்தியை வெளியிட்டு விளம்பரம் கொடுத்த பத்திரிகைகளுக்கும், வானொலி போன்ற தொலைக்காட்சிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், தொலைக்காட்சிப் பெட்டிகள் சில நொறுக்கப்பட்டன; அடிக்கப்பட்டன; பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர் என்ற சம்பவங்கள் எல்லாம் என் கவனத்திற்கு நீங்கள் கொண்டு வந்ததற்காக நன்றி தெரிவித்து, உரிய நடவடிக்கைகள் அதற்காக எடுக்கப்படும் என்பதையும், எதிர்காலத்திலே அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் யாரும் இந்த நிகழ்ச்சியைப் பற்றி, என் மீது குற்றம்—நான் தவறாகப் பேசினேன், அதனால் கறுப்புக் கொடி காட்டினார்கள் என்று—யாரும் சொல்ல முடியாது; செய்தி நிறுவனங்களும் சொல்லமுடியாது.

நான் அம்பேத்கருக்காக பட்ட பாடுகளை, நான் செய்த சிறப்புகளை உலகம் அறியும். என் தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இங்கே இருக்கின்றவர்கள் யாரும், என் கட்சியிலே உள்ளவர்கள் உட்பட யாரும் நான் சொல்வதற்காக வருத்தப்படக்கூடாது. அன்றைக்கு ஜாதியை ஒழிப்பதற்காக ஆதி திராவிடக் குலத்துப் பெண்ணை என்னுடைய மகனுக்குத் திருமணம் செய்து வைத்தவன் நான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). ஒருவேளை, அதற்காகக் கறுப்புக் கொடி பிடித்தார்களா என்னவோ, எனக்குத் தெரியாது. கறுப்புக் கொடி பிடித்துக்கொண்டே இருக்கட்டும். ஆனால், ஒரு காலத்திலே ஆயிரம் பேர் கறுப்புக் கொடி காட்டினார்கள், 500 பேர் காட்டினார்கள் என்பதெல்லாம் மாறி இப்பொழுது, சுருங்கி நான்கு பேர், ஐந்து பேர் என்ற அளவிற்கு வந்துவிட்டது. அந்த நிகழ்ச்சியைக்கூட என்னுடைய அருமை நண்பர், வழக்கறிஞர்கள் சங்கத்தினுடைய தலைவர் திரு. பால் கனகராஜ் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார் என்பதையும் இங்கே சொன்னார்கள். முதலிலே பேசியிருக்க வேண்டாமா என்று வேல்முருகன் சொன்னார். எல்லோரிடத்திலும் பேசியிருக்கின்றார்கள், எல்லோரிடத்திலும், அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர்கள் மாத்திரம் அல்ல; இன்னும் சொல்லப்போனால், உயர் நீதிமன்ற நீதிபதியே, அவர்களையெல்லாம் அழைத்துப் பேசியிருக்கிறார், இந்தத் தகராறு வேண்டாமென்று. ஒத்துக்கொண்டுதான் போய் இருக்கிறார்கள், எந்தத் தகராறும் செய்ய மாட்டோம் என்று. எந்த நிலைமைக்காக, அந்தத் தகராறுக்குக் காரணம் சொல்கிறார்கள்? 4 போலீஸ்காரர்கள் மேலே கருணாநிதி நடிவடிக்கை எடுக்கவில்லை, கோர்ட்டு தீர்ப்பு வந்த பிறகும்கூட என்று. நான் கேட்கிறேன் நடவடிக்கை எடுத்தால், அவர்கள் சட்ட ரீதியாக அதை அணுகும்போது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்றால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை வாங்கிவிடுகிறார்கள். இந்த நிலைமையில் நான் எங்கே நடவடிக்கை எடுப்பது? இதையும் நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, உயர் நீதிமன்றத்தை இதுபோன்று அமளிக் களமாக, கலவர பூமியாக ஆக்குகின்ற யாராக

இருந்தாலும், பொதுமக்களால் அவர்கள் மன்னிக்கப்படமாட்டார்கள் என்பதையும், நேற்று நடந்த அந்த விவரத்தை, செய்தியை, நிகழ்ச்சியை நானும் மறந்துவிடுகின்றேன்; நீங்களும் மறந்துவிடுங்கள்; வழக்கறிஞர்களும் மறந்துவிட்டு நல்ல வழியை மக்களுக்குக் காட்டுங்கள் என்று இந்த அவையில் இந்த விவாதத்தின்மூலமாக நான் தெரிவித்து அமைகின்றேன், வணக்கம்.

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். 23-4-2010 ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப் பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் மீது முன்மொழியப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதம் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

முற்பகல் 11-30

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் அமைதிப் பூங்காவாகத் தமிழகத்தைத் திகழ வைத்தார்கள். தமிழ்நாட்டை மின்வெட்டே இல்லாத மாநிலமாக வைத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். தமிழ்நாட்டில் விலைவாசி உயராமல்

இருந்தாலும், பொதுமக்களால் அவர்கள் மன்னிக்கப்படமாட்டார்கள் என்பதையும், நேற்று நடந்த அந்த விவரத்தை, செய்தியை, நிகழ்ச்சியை நானும் மறந்துவிடுகின்றேன்; நீங்களும் மறந்துவிடுங்கள்; வழக்கறிஞர்களும் மறந்துவிட்டு நல்ல வழியை மக்களுக்குக் காட்டுங்கள் என்று இந்த அவையில் இந்த விவாதத்தின்மூலமாக நான் தெரிவித்து அமைகின்றேன், வணக்கம்.

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். 23-4-2010 ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப் பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின் மீது முன்மொழியப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதம் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

முற்பகல் 11-30

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் அமைதிப் பூங்காவாகத் தமிழகத்தைத் திகழ வைத்தார்கள். தமிழ்நாட்டை மின்வெட்டே இல்லாத மாநிலமாக வைத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். தமிழ்நாட்டில் விலைவாசி உயராமல்

கட்டுக்குள் வைத்திருந்து ஆட்சியை நடத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்நாட்டிலே குடி தண்ணீர்ப் பஞ்சம் இல்லாமல் ஆட்சி நடத்தியவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கைச் சரியாகக் கையிலே வைத்து ஆட்சி நடத்தியவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்நாட்டிலே அரசு அலுவலகங்களில் அரசியல் தலையிடாமல் ஆட்சி நடத்தியவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சென்னை மாநகரத்திற்கு நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இருந்த குடி தண்ணீர்ப் பிரச்சினையை நீக்க புதிய வீராணம் திட்டத்தைத் தந்ததன்மூலம் சென்னை மக்களுடைய குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்தவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியிலே உள்ள முக்கியமான இரண்டு பிரச்சினைகளை முதலில் சொல்லிவிட்டு, பிறகு மானியக் கோரிக்கைக்கு வரலாம் என்று நினைக்கிறேன். முல்லைப் பெரியாறு பிரச்சினை என்பது, 5 மாவட்டங்களின் உயிர் நாடி ஜீவனானப் பிரச்சினை. புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று 142 அடியாக உயர்த்தலாம் என்று நீதிமன்றத்தின் ஆர்டரை வாங்கிக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு வந்த தி.மு.க. அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்க முன்வராமல் காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கிறது. நான் இந்த அரசாங்கத்தையும் முதலமைச்சரையும் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரே ஒரு அறிவிப்பு நீங்கள் அறிவிக்க வேண்டும். நிச்சயம் இந்த அரசு உச்ச நீதிமன்றத்திலே அனுமதி பெற்று, முல்லைப் பெரியாறு அணையை 142 அடியாக உயர்த்துவோம் என்று நீங்கள் அறிவிக்க வேண்டும். இன்னொன்று, கேரள அரசு புதிய அணை கட்டுவதற்காக இப்போது ஆய்வுப் பணிகளை நடத்திக்கொண்டிருக்கின்றது. அந்த ஆய்வுப் பணிகளை நடத்த விடமாட்டோம், புதிய அணை கட்ட விடமாட்டோம் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது என்பதை நீங்கள் எங்கள் பகுதி விவசாய மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவுக்கு நீதிமன்றக் கட்டடங்கள் பல, பிரச்சினைக்குரியவையாக

இருந்துகொண்டிருக்கின்றன. ஒரு சிறிய room-இல்தான் நீதிமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) இரண்டு பிரச்சினைகள், தொகுதிப் பிரச்சினைகள். அவற்றைப் பேசிவிட்டு அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைக்கு வருகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றத்தை அரசு கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தாலுகா அலுவலகங்கள் ஓட்டுக் கொட்டகையில் இயங்கி வருகின்றன. மழை பெய்தால் ஒழுகுகிறது. அங்கே புதிய தாலுகா அலுவலகங்கள் கட்டித் தரவேண்டும். அதே சூழ்நிலையில்தான் காவல் நிலையங்களும் இருக்கின்றன. அவற்றுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைப் பொறுத்த அளவுக்கு இன்றைக்கு கிராமங்களிலே தண்ணீர் வருவதில்லை. அதனால் பெண்களுடைய கண்களிலே கண்ணீர்தான் வந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வராக இருக்கின்றவர், உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பதவி ஏற்ற இரண்டு மாதக் காலத்திலே மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அதிலே நானும் கலந்து கொண்டு 'கடந்த எங்கள் அம்மாவினுடைய ஆட்சியின் கடைசிக் காலத்திலே நான் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேலூருக்கு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டிருந்தேன்; அதற்கான ஆய்வுப் பணிகளையும் நடத்தச் சொல்லி இருந்தார்கள்; பிறகு ஆட்சி மாற்றம் வந்துவிட்டது; அதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும்' என்று நான் கேட்டபோது துணை முதலமைச்சராக இருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சரைக் கலந்து பேசி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அன்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதற்குப் பிறகு நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே 2006-2007-லே பேசியபோது அந்தத் திட்டத்திற்கு 148 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டது. 2006-2007 முதல் கூட்டத் தொடரிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 148 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஓராண்டுக் காலம் திட்டம் எதுவும் நடைபெறவில்லை. 2007-2008-லே நான் பேசியபோது துணை முதல்வர் அவர்கள் இந்த

ஆண்டு ஆய்வில் எடுத்துச் செய்யப்படும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகும் செய்யவில்லை. 2008-2009 ஆம் ஆண்டு நான் கேட்டபோது, 203 கோடி ரூபாய் தருவதாக அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 2009-2010 ஆம் ஆண்டு நான் கேட்டபோது, உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிவிப்பிலே ரூபாய் 291 கோடி ஒதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், இந்தத் திட்டம் உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பேற்ற காலத்திலிருந்து 4 ஆண்டுக் காலமாக சட்டமன்றத்திலே பேசப்பட்டு, அவரும் செய்கிறோம், செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். இந்தத் திட்டத்திற்குச் சென்ற ஆண்டு 2009-2010-இல். . .

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி இங்கே சில செய்திகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். நிறைவாக அறிவிப்பை தயவுசெய்து பொறுத்திருந்து கேளுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆண்டுதோறும் சொல்லிக்கொண்டே இருக்கின்றீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் இதை உங்களுடைய கவனத்திற்கு கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தேன். அதற்குப் பிறகு, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், உடனே இது சட்டப் பேரவையில் இந்த ஆண்டு பிரச்சினைக்கு வரும் என்பதற்காகவே உயர்மட்ட அதிகாரிகளை அழைத்து 10 நாட்களுக்கு முன்பாக ஒரு கூட்டத்தைப் போட்டு, இப்போது திட்டத்தைக் கொஞ்சம் விரிவாக்கம் செய்து, amount-ஐக் கூட்டியிருக்கிறார்கள். வருடா வருடம் amount கூடிக்கொண்டிருக்கிறது. தற்சமயம் 206 கோடி ரூபாய்க்குச் செய்யப் போவதாக, அதற்கான கூட்டம் போட்டு, அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதிகாரி மட்டத்திலே இந்த தடவை அறிவிப்பதாக செய்தி வந்திருக்கிறது. இதில் என்ன செய்திருக்கிறார்களென்றால், விரிவாக்கம் செய்திருக்கிறார்கள். என்னுடைய மதுரை மாவட்டத்திற்கு பல பகுதிகளுக்கு இத்திட்டம்

வருகிறது. மேலூர் தொகுதி முழுவதும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இரண்டாவது, சிவகங்கை மாவட்டம், சிங்கம்புனரி பேரூராட்சிக்கு, எங்கள் மேலூருக்கு வருவதிலிருந்து எடுக்கிறார்கள். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் ஏற்கெனவே இராமநாதபுரத்திற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுபோனீர்கள். அந்த வழியிலேதான் போகிறது. நீங்கள் அதிலே கொடுக்க வேண்டும். ஏற்கெனவே பைப் லைன் போகிற அந்த வழியிலே கொடுக்காமல் விட்டதால், பஸ் மறியல் போன்ற பல மறியல்கள் நடந்தன. இப்போது எங்களுக்கு வருகிற திட்டத்தில் கொடுக்கிறீர்கள். கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அப்படியானால் கூடுதலாக தண்ணீர் எடுங்கள். எனவே, நீங்கள் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புனரி பேரூராட்சிக்குக் கூடுதலாக தண்ணீர் எடுத்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சரால் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே உள்ளாட்சியில், பல கிராமங்களிலே, நகராட்சிகளிலே செய்கிற திட்டங்கள் பூராவுமே, எங்கள் அம்மா அவர்கள் நிதியைத் தேடி வைத்துவிட்டுப் போனார்கள். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III என்று பல கோடி ரூபாயை அம்மா அவர்கள் வாங்கி வைத்தார்கள். ஆட்சி மாற்றம் வந்த பிறகு, நீங்கள் அந்தப் பணியை செய்வதாக அறிவித்திருக்கிறீர்கள். 2009-இலே அறிவித்திருக்கிறீர்கள். மேலூர், கீழ அரியலூர், பழனி, காரைக்குடி, பொள்ளாச்சி, கொடைக்கானல், சாத்தூர், சிவகாசி, நாகர்கோவில், பெரியகுளம், கீழக்கரை, மன்னார்குடி போன்ற 12 நகராட்சிகளுக்குப் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதாக அறிவித்தீர்கள். அது என்னாயிற்று? உங்கள் கட்சியில் அமைச்சர்களெல்லாம் மேடைக்கு மேடை பேசுகிறார்கள். சொல்வதையும் செய்கிறோம்; சொல்லாததையும் செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். இந்த 12 நகராட்சிகளுக்கும் 2009 ஆம் ஆண்டு நீங்கள் சட்டப் பேரவையில் அறிவித்தீர்களே பாதாள சாக்கடை, அது நிறைவேறி இருக்கிறதா, இல்லை தொடங்கி இருக்கிறதா, இல்லை டெண்டர் வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் 12,620 ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 29 மாவட்ட ஊராட்சிகள், 10 மாநகராட்சிகள், 148 நகராட்சிகள், 561 பேரூராட்சிகள் உள்ளன. இதில் என்னவென்றால், நகராட்சியைப் பொறுத்தளவில், 148 நகராட்சிகளிலே, 76 நகராட்சிகளில் கமிஷனர்கள் இல்லை. கமிஷனர் இல்லை என்றால் எப்படி இந்த நகராட்சிகள் செயல்படும். கமிஷனரே இல்லை. இப்போது, நகராட்சிகளெல்லாம் நன்றாகச் செயல்படுகின்றன என்றும், உள்ளாட்சித் துறை அமைச்சர் நன்றாகச் செயல்படுகிறார் என்றும் எல்லோரும் பாராட்டுகிறார்கள். அந்தக் கருத்துக்கு நான் வரவில்லை. 76 நகராட்சிகளிலே கமிஷனர்கள் இல்லை என்றால், இந்தத் துறை இயங்குமா, அங்கு அலுவலகங்கள் செயல்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். இதில் என்ன குறைபாடு இருக்கிறது? ஏன் கமிஷனர்கள் நியமிக்கப்படவில்லை. 76 நகராட்சிகளிலே உங்களுடைய ஆட்சியில் கமிஷனர்கள் இல்லை. அந்த 76 நகராட்சியில் என்ன பணிகள் நடக்கும்? இப்போது மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்கப்படவிருக்கிறது. எப்படிச் செய்ய முடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். காலிப் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும்.

இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஏறத்தாழ 150-க்கு மேல் A.E.-பொறியாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. குடி தண்ணீர் என்பது முக்கியமானது. தமிழ்நாட்டில் இப்போது குடி தண்ணீர்ப் பஞ்சம் பற்றி உங்களுக்குத் தெரியாதது இல்லை. அரசியலுக்காக நான் இதைச் சொல்லவில்லை. தமிழகம் முழுவதும், எங்குப் பார்த்தாலும் குடி தண்ணீர்ப் பஞ்சம் என்பது, கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இருக்கிறது. அதற்காகச் சாலை மறியல் நடந்துகொண்டிருக்கிறது; பஸ் மறியல் நடந்துகொண்டிருக்கிறது. ஆனாலும், அதற்கு நீங்கள் எந்த ஒரு திட்டத்தையும் அறிவிக்கவில்லை. அன்றைக்கு 10 மாவட்டத்திற்கு மட்டும், பத்து, பன்னிரண்டு மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய், 2 கோடி ரூபாய் கொடுக்கிறீர்கள். அதிலிருந்து நிச்சயம் நிறைவேற்ற முடியாது. ஒரு மாவட்டத்திற்கு 50 கோடி, 100 கோடி ரூபாய் கொடுத்தால்தான் வறட்சிக் காலத்தில் குடி தண்ணீர் வசதியைச் செய்ய முடியும். மதுரை மாவட்டத்தில் இதற்காக போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. Daily பத்திரிகையைப் பார்த்தீர்களேயானால், சாலை மறியல்கள் இல்லாத ஊரே கிடையாது. குடிநீர்ப் பிரச்சினையால் பல கிராமங்களில்

உங்களுடைய ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களே சாலை மறியலை நடத்துகிறார்கள். நீங்கள் அதில் கவனம் செலுத்தவில்லை. 150 பொறியாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. எப்படி Water Board வேலை செய்ய முடியும்? நாங்கள் ஆட்களை நிரப்பிவிட்டோம், நிரப்பிவிட்டோம் என்கிறீர்கள். எங்கு நிரப்பி இருக்கிறீர்கள்? 1000 பஸ் இருந்தால், 2000 கண்டக்டர்களை போட்டு vacant ஆக வைத்திருக்கிறீர்கள். அது ஒன்றுதான் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட முக்கியமான துறைகளுக்கு நீங்கள் பொறியாளர் போடவில்லை. பொறியாளர்களை போட்டால்தானே அங்கே குடி தண்ணீர் கொடுக்கமுடியும். நீங்கள் அதை விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல 20 வருடம், 25 வருடமாய் அங்குப் பணிபுரிபவர்களுக்கு, A.E.-களுக்கு, பொறியாளர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படாமல் இருக்கிறது. மற்ற துறைகளில் 10 ஆண்டுகள் பணி புரிந்தால் பதவி உயர்வு வந்து விடுகிறது. ஆனால், இந்தத் துறையில் பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறது. அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அதேபோல, கூட்டுக் குடிநீர்த் திட்டம். தமிழ்நாட்டில் மொத்தம் 550 திட்டங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. அவற்றிலே 2,500 பேர்கள்தான் பணிபுரிவதாகத் தெரிகிறது. ஆனால், 10,000 பேர் பணிபுரிவதாகச் சொல்லி கடந்த 3 ஆண்டுக் காலத்தில்— அது அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்குமென்று நினைக்கிறேன்; கடந்த 10 நாட்களாக அது பரபரப்பாக பேசப்படுகிறது— 10,000 பேர் அங்கே பணிபுரிவதாகச் சொல்லி, bill தயார் செய்து, ஏறத்தாழ 120 கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடந்திருப்பதாக அந்தச் சங்கத்திலிருந்து அறிவிக்கப்பட்டு, அதுகுறித்து எல்லா தினசரி பத்திரிகைகளிலும், குறிப்பாக, "தினமலர்" பத்திரிகையிலும் வந்திருக்கிறது. 120 கோடி ரூபாய் அளவிற்கு இந்த 3 வருடத்தில் ஊழல் நடந்திருக்கிறதாம். வேலை ஆட்களின் எண்ணிக்கை 2,500 பேர்தானாம். ஆனால், 10,000 பேர் வேலை பார்ப்பதாகச் சொல்கிறார்கள். இது உண்மையா, இல்லையா என்பதை விசாரித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னைக்கு அருகில் உள்ள தாம்பரம் நகராட்சியில்கூட, 15 நாட்களுக்கு ஒரு முறைதான் குடி தண்ணீர்

கிடைப்பதாகச் சொல்கிறார்கள். நிறைய செய்வதாகச் சொல்கிறீர்கள். இலவசம் என்று சொல்கிறீர்கள். குடி தண்ணீர்தான் முதலில். தண்ணீர் கொடுத்தால்தான் மனிதன் உயிருடன் வாழ முடியும். இன்றைக்குத் தண்ணீர்ப் பிரச்சினை தமிழ்நாட்டில் கடுமையாக இருக்கிறது. 15 நாட்களுக்கு ஒரு நாள்தான் தாம்பரத்தில் குடி தண்ணீர் கிடைக்கிறதென்ற செய்தி சென்னையிலே எல்லா நாளிதழ்களிலும் வந்துகொண்டேயிருக்கிறது.

மேலூர் நகராட்சியின் துணைத் தலைவர்கூட நேற்றைக்கு முந்தைய நாள்—அவர் தி.மு.க.வைச் சார்ந்தவர், நகராட்சி மன்றத்தினுடைய துணைத் தலைவராக இருக்கிறார்—குடி தண்ணீர் கேட்டு Jeep-ஐ மறித்து office-இல் அவரே துண்டை விரித்து ஒருவராகவே உட்கார்ந்து கமிஷனரை மறித்திருக்கிறார். ஃபோட்டோவுடன் பேப்பரில் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட குடி தண்ணீர்ப் பிரச்சினையை நீங்கள் சரி செய்ய வேண்டும். உசிலம்பட்டி நகராட்சியில் பஸ் நிலையம் கட்டியிருக்கிறார்கள். அதை முழுவதும் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். அவர்கள் யார், எந்தக் கட்சி என்று சொல்லக்கூடாது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பஸ் ஸ்டாண்டிற்கு உள்ளே பொதுமக்களே போக முடியவில்லை. பள்ளிக் குழந்தைகள் பஸ்ஸில் ஏற முடியவில்லை. பொதுமக்கள் நின்று பஸ்ஸில் ஏற முடியவில்லை. கடைகளை வைத்து ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும்.

அதேபோல், வைகை இரண்டாம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 60 கோடி ரூபாயில் நிறைவேற்றினீர்கள். துணை முதல்வரே இதுகுறித்து மதுரையிலே பேசினார்கள், இந்தத் திட்டத்தைத் தொடங்கிய உடனே மதுரை மக்களுக்கு நிரந்தரமாகக் குடிநீர் கிடைக்குமென்று நீங்கள் பேசினீர்கள் அந்த மேடையில். திட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டு வந்தீர்கள். அடிக்கல் நாட்டினீர்கள். Open செய்தீர்கள். இப்போது குடி தண்ணீர் கிடைக்கிறதா மதுரை மக்களுக்கு? அந்த 60 கோடி ரூபாய் வேஸ்ட் ஆகியிருக்கிறது. தண்ணீர் வரவில்லை. வைகை இரண்டாம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கி நீங்கள் திறந்து வைத்தீர்கள். மதுரை மக்களுக்கு நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்குமென்று சொன்னீர்கள். தண்ணீர் கிடைக்கவில்லை. ஒரு சொட்டு தண்ணீர்கூட அதில் வரவில்லை. அந்த 60 கோடி ரூபாயும் வீணாகிவிட்டது. இந்த அரசாங்கத்தால். (குறுக்கீடு) உட்காருங்கள் மூர்த்தி, பார்த்துக்கொள்ளலாம்.

சுஜல்தாரா திட்டம் என்று ஒரு திட்டம்; எங்கள் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில்தான், அந்தத் திட்டத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து, அதிக நிதியும் ஒதுக்கிக் கொடுத்தார்கள் TWAD.-க்கு. குடி தண்ணீர்ப் பிரச்சினை எங்கெங்கே இருக்கிறதோ அங்கேயெல்லாம் 10% பணம் கட்டினால், மீதத் தொகையை அரசாங்கம் கொடுத்து, உடனே போர்வெல் அமைத்து, அங்குள்ள டேங்கிற்கு தண்ணீர் ஏற்றப்படும். இது சுஜல்தாரா திட்டம். இன்றைக்கு தி.மு.க. அரசு வந்த பிறகு, இந்த சுஜல்தாரா திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. எங்கேயும் இல்லை. எந்தக் கிராமப்புறத்திலும் இத்திட்டம் இல்லை. அது இருந்தால்தான் கிராமங்களில் உடனடியாகக் குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். சுஜல்தாரா திட்டத்தை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலே சிறப்பாக நடத்தினார்கள். இந்தியாவிலேயே இத்திட்டம தமிழ்நாட்டில்தான் சிறப்பாக நடந்தது. அந்தத் திட்டத்திற்கு மீண்டும் நீங்கள் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு எங்கு பார்த்தாலும் போலி. ** போலி போலீஸ், போலி மருந்து, போலி மாத்திரைகள், போலி ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், போலி ஐ.பி.எஸ். அதிகாரிகள், போலி பாஸ்போர்ட், போலி மதுபானங்கள், **. அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பல்வேறு வகைகளில் எல்லாமே போலியாகத்தான் இருக்கின்றன. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாமி, போலி, போலி என்று பேசிக் கொண்டிருக்காதீர்கள். உட்காருங்கள், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்தது. (குறுக்கீடுகள்) உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வேல்முருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. ஆர். சாமி அவர்கள் சில செய்திகளைச் சொன்னார்கள். நான் அவற்றுக்குள் போக விரும்பவில்லை. ** என்று சொன்னார், தயவுசெய்து அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர், ** என்று பதிவு செய்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆகவேதான் அதைத்தான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே குடி தண்ணீர்ப் பிரச்சினை இல்லாததற்கு முழுமையான காரணம் அம்மாவினுடைய நிருவாகத் திறமை. அதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐயா, உங்கள் பேச்சை முடியுங்கள். இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. மழைநீர் சேமிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்ததால்தான் தமிழ்நாட்டில் குடி தண்ணீர்ப் பிரச்சினை இல்லாமல் இருந்தது. இப்போது இந்த அரசாங்கம் வந்த பிறகு, அந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டது. மழைநீர்த் திட்டத்தை எங்கும் பாதுகாக்கவில்லை. அதனைச் சுத்தப்படுத்தி, அந்தத் திட்டத்தை முறைப்படுத்தியிருந்தால், இன்றைக்குக் குடி தண்ணீர்ப் பிரச்சினை வந்திருக்காது. குடிநீர்ப் பிரச்சினை என்பது தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலும் இருக்கிறது. இது ஒரு பொதுவான பிரச்சினை. அந்த மழைநீர் சேமிக்கும் திட்டத்தை நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலே, மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட திட்டத்திலே ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் வேலை கொடுக்க வேண்டும், 100 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று அந்தத் திட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 25 நாட்கள், 27 நாட்களுக்கு மேல் ஒரு வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு வேலை கொடுப்பது கிடையாது. 25 முதல் 30 நாட்கள்தான் ஒரு வருடத்திலே அந்தத் திட்டத்திலே வேலை கொடுக்கிறார்கள். சம்பளத்திலே மிகவும் முறைகேடு நடக்கிறது. ஏனென்றால் இதிலே யாரும் குறை சொல்ல முடியாது. 30 ரூபாய், 35 ரூபாய், 40 ரூபாய்தான் சம்பளம் கொடுக்கிறார்கள். 100 ரூபாய் சம்பளம் கொடுக்கச் சொல்லி மத்திய அரசு உத்தரவு போட்டிருக்கிறது. துணை முதலமைச்சர் அவர்களும் பல்வேறு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இடங்களிலே சொல்கிறார்கள், 100 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படும் என்று. ஆனால், அதிலே வேலை பார்க்கக்கூடிய குடும்பத்தினருக்கு 40 ரூபாய், 50 ரூபாய்க்கு மேலே சம்பளம் கொடுப்பது கிடையாது. அதை 100 ரூபாயாகக் கொடுக்க வேண்டும். 150 நாட்கள் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு கிராமங்களிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிரந்தரமாகக் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக வறட்சிப் பகுதிகளிலே கைப் பம்பு அமைப்பதற்கும் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைப்பதற்கும் நிதியொதுக்கிக் கொடுத்தார்கள். இப்போது இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக கிராமப்புறத்திலே சின்டெக்ஸ் டேங்க் அமைப்பதை நிறுத்திவிட்டது. கிராமங்களிலே கிராம மக்கள் தண்ணீர் இல்லை என்றால் அவர்கள் எப்படிக் குடிப்பார்கள்? எனவே, அதை உடனடியாக இந்த அரசாங்கம் கொண்டுவந்து, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக, கிராமப்புறங்களுக்கு வறட்சிக் காலத்திலே சின்டெக்ஸ் டேங்க் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சாமி, 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன. (குறுக்கீடுகள்)

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சல்மேனியா திட்டம் என்ற திட்டத்தின்மூலமாக நல்ல தண்ணீர் கொடுக்கும் திட்டத்தை மத்திய அரசும், மாநில அரசும் இப்போது அறிவித்திருக்கிறது. அதன்மூலம் ஒருசில இடங்களிலே, பள்ளிக்கூடங்கள் மற்றும் hospital-களில் கொடுக்கப்படுகிறது. ஒருசில கிராமங்களிலும் தண்ணீர் ஃபில்டர் செய்து வழங்கப்படுகிறது. அதிலே ஒருசில இடங்களில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல திட்டம் அது. உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக்கிக் கொடுப்பது. இதை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது முதலமைச்சர் பெயரால் கான்கிரீட் வீடு கட்டும் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். 25 இலட்சம் வீடுகள் கட்டித்

தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இன்னும் ஒரு வருடம்தான் ஆட்சிப் பொறுப்பு இருக்கிறது. அதற்குள் எப்படி 25 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. அதிலே, என்னவென்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன். (குறுக்கீடுகள்) மணி தற்போது 11-47.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு நிமிடங்கள் கூடுதலாகவே உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். போதும், உட்காருங்கள். திரு. அ. ராஜன் பேசுங்கள்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றம் ஆகியவை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த நிலையை மாற்றி, பார் வியக்கும் பொற்கோட்டையாக இந்த எழில்மிகு சட்டப் பேரவையை உருவாக்கி இந்தச் சாமானியனுக்கும் இங்கு உரையாற்றும் வாய்ப்பு நல்கிய, உலகமெல்லாம் வாழும் கோடானு கோடி தமிழர்களின் முதுபெரும் தலைவர், மாற்றுத்திறன் படைத்தோர் என்ற வகையில் வாய் பேச முடியாதவர்களுக்கும், காது கேட்காதவர்களுக்கும், பார்வையிழந்தோருக்கும், நடக்க முடியாதவர்களுக்கும் தனித் துறை அமைத்து சரித்திரம் படைத்திட்ட தலைவர், வரும் ஜூன் திங்களில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை, கோவை மாநகரில் தரணி போற்றும் வகையில் நடத்தி, தமிழுக்குப் பெருமை சேர்க்கவிருக்கும் தமிழ்கூறும் நல்லுலகின் தன்னிகரில்லாத் தலைவர் மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் இரண்டரை மணி நேரம் நிமிர்ந்து நின்று, தமிழர் தலை நிமிர, தமிழ் மக்களின் வாழ்வு உயர, சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையினை அவையில் சமர்ப்பித்த அறிவுக் கடல் ஆசான், திராவிட இயக்கத்தின் கருவூலம், மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கடின உழைப்பால், தன் சீரிய சிந்தனையால், சிறப்பான பணி மேற்கொண்டு, எடுத்த பணி எதுவாக இருந்தாலும் ஆற்றலோடு, அறிவோடு, வேகத்தோடு செயலாற்றி, தலைவர் கலைஞர் பணி முடிக்கும் இளம் தலைவர், பெண்ணாகரத்தை பொன்னகரமாக மாற்றிட நடைபெற்ற

இடைத் தேர்தலில் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, களப் பணியாற்றி, எதிரிகளையும் துரோகிகளையும் டெப்பாசிட் இழக்கச் செய்து மாபெரும் வெற்றியைக் கழகத்திற்கு நல்கிட்ட மாண்புமிகு துணை முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத் தமிழகத்தின் வசந்தம், தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) உரையாற்ற வாய்ப்பு நல்கிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் கொறடா அண்ணன் திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு தன்னுடைய *50* ஆண்டுக்கால ஆட்சியில் செய்து முடிக்க முடியாத பல அரிய சாதனைகளை ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றுள்ள நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு நான்கே ஆண்டுகளில் செய்து முடித்து சாதனை படைத்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக, எல்லாவற்றுக்கும் மணிமகுடம் வைத்தாற்போல சொன்னதைச் செய்யும் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் சொன்னபடி சட்டப் பேரவைகளில் முதல் பசுமைக் கட்டடம் இது என உலகமே வியந்துபோற்றும் வண்ணம் கட்டப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இந்தச் சட்டப் பேரவைக் கட்டடத்தைக் கட்டி குறிப்பிட்ட நாளில் திறப்பு விழாவையும் நடத்தி நாமெல்லாம் இங்கு வந்து பணியாற்றும் வகையில் தலைவர் கலைஞர் அவர்கள் பணியை முடித்துத் தந்திருக்கிறார்கள் என்பதால் இந்த நானிலமே தலைவர் கலைஞர் அவர்களைப் போற்றிப் பாராட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில், கறுப்புச் சட்டை அணிந்து முதல் நாளே அமங்கலமாக நடந்துகொண்டவர்களைப் பற்றி தலைவா நீங்கள் கவலைப்பட வேண்டாம்; நாங்கள் இருக்கிறோம் உங்களுக்காக என்ற வகையிலேதான் பென்னாகரம் தேர்தலில் பொது மக்கள் இப்படிப்பட்டவர்களையெல்லாம் ஓட ஓட விரட்டியடித்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் உரையாற்ற வாய்ப்பு கிடைத்தமையை மிகவும் பெருமையாகக் கருதி சில கருத்துகளை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, புலி எட்டு அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்பார்கள். அதுபோல நமது துணை முதல்வர் தளபதியார் அவர்கள் மேயராக இருந்தபோதும், தொடர்ந்து உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதும், இன்று துணை முதல்வராக இருக்கும் இந்தக் காலக்கட்டத்திலும் தன்னுடைய பணிகளால் அதை மெய்ப்பித்து வருகிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. அதன் எடுத்துக்காட்டுக்கு வேறு எங்கேயும் போக வேண்டாம். புதிய சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத் திறப்பு விழாவின்போது உரையாற்றிய நமது பாரத பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தமிழ்நாடு, ஊரக வளர்ச்சியில் நாட்டிலேயே முன்னோடியாக உள்ளது என்று குறிப்பிட்டதை தளபதியார் அவர்களுக்கும், இந்தத் துறைக்கும் சான்றாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனுக்கு மிக முக்கியமான தேவை குடிநீர். கடந்த ஆட்சியில் செயலிழந்து காணப்பட்ட இந்தத் துறைக்கு மாண்புமிகு தளபதியார் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு புதுப் பொலிவூட்டி தமிழகம் முழுவதும் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். எடுத்துக்காட்டாக, 1,929 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கிறது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்ப் பிரச்சினையை வைத்து அரசியல் செய்தவர்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட நமது துணை முதல்வர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 400 கோடி இத்திட்டத்திற்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது பாராட்டத் தகுந்த விஷயமாகும். மேலும், வேலூர் மாவட்டத்திற்குக் குடிநீர் வழங்க, 1,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படுவது தேவையான ஒன்று. குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு இந்த ஆண்டு 1,183 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதும் அனைவராலும் பாராட்டப்படுகிறது. மேலும், கல்லணையிலிருந்து மதுரைக்குக் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பல்வேறு நகராட்சிகள் மற்றும் சுமார் 45 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தலைவர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்படும் இந்தக் காலக்கட்டத்தில்,

நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி மக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்தில்கொண்டு அறிவிக்கப்பட்டு பணி மேற்கொண்டுள்ள, உலக்கை அருவித் திட்டத்தையும் விரைந்து முடித்துத் தந்திட, நான் தளபதியாரிடம் அன்பாய் வேண்டுகிறேன். இதன் ஆய்வுப் பணிக்காக ரூபாய் 25 இலட்சம் நாகர்கோவில் நகராட்சியால் கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் வாழ்வு மலர, தலைவர் கலைஞர் அவர்கள் சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் கடனை இரத்து செய்து சாதனை படைத்தார்கள். அவர்களுக்குத் துணையான நம்முடைய துணை முதல்வர் தளபதியார் அவர்கள், நகராட்சி, ஊராட்சி அமைப்புகள், அரசிடம் பெற்ற கோடிக்கணக்கான கடன்களை இரத்து செய்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதை இன்றைக்கு நாட்டிலுள்ள ஒட்டுமொத்த மக்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகள் உள்ளவரை அண்ணன் தளபதியார் அவர்களைத் தமிழக மக்கள் மறக்க மாட்டார்கள் என்பதை இங்கே நான் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலக்கட்டத்தில் கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்கள் தங்கள் விளையாட்டில் முத்திரைப் பதிக்க, நகரத்திலோ அல்லது வெகு தொலைவிலோ உள்ள விளையாட்டு அரங்குகளுக்கோதான் செல்ல வேண்டிய நிலை இருந்தது. அதேபோல், தன்னுடைய அறிவுப் பசியைப் போக்க, தேவையான நூல்களைப் படிக்க, தொலைவில் உள்ள நூலகங்களுக்குத்தான் செல்ல வேண்டிய ஒரு நிலை இருந்தது. இதை அறிந்து ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகத்தைக் கட்டி வெகு விரைவில் திறந்து வைக்க இருக்கும் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 2,041 கோடி அரசு நிதியுதவியுடன் 10,104 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். எஞ்சியுள்ள 2,516 ஊராட்சிகளில் இந்த ஆண்டு இந்தப் பணி முடிவடையும்போது இந்தியாவிலேயே, ஊராட்சிகளில் நூலகங்கள் மற்றும் விளையாட்டு அரங்க வசதிகள் கொண்ட முதல் மாநிலம், தமிழ்நாடு என்ற பெருமை கிடைக்கவிருக்கிறது. இதை மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும் பாராட்டித்தான் ஆக வேண்டும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சில கட்சித் தலைவர்களுக்குத் தேர்தல் என்று வந்தால்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற தலைவர்களின் நினைவுகள் வரும். ஆனால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் மறு உருவமாகத் தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்ந்து வருவதால் தொடர்ந்து அவர்களின் கருத்துகளையும், எண்ணங்களையும், புகழையும் பரப்பி வருகிறார். அந்த வகையிலேதான் அனைத்துப் பிரிவினரையும் ஒரேயிடத்தில் வைத்து அழகு பார்க்க விரும்பிய தலைவர் கலைஞர் அவர்கள் பெரியார் நினைவு சமத்துவபுரங்களை கடந்த அவர்தம் ஆட்சியில் அமைத்து, சிறப்புச் செய்தார்கள். பின்பு தற்போது 5 ஆம் முறையாக மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்றதும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 29 சமத்துவபுரங்களை அமைத்து, சிறப்புச் செய்தார்கள். அதில் தந்தை பெரியார் சிலையையும் அமைத்து, சிறப்புச் செய்தார்கள். தற்போது மேலும் 30 சமத்துவபுரங்களுக்கான பணிகள் நடைபெற்று வரும் இந்த வேளையில், இந்த நிதியாண்டில் மேலும் 36 சமத்துவபுரங்கள் அமைக்க ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறாரே இதையாவது பாராட்ட நம்முடைய எதிர்கட்சித் தோழர்கள் முன்வருவார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வசதி படைத்தவர்கள் தங்கள் வீட்டுத் திருமணங்கள் மற்றும் மங்கல நிகழ்ச்சிகளைப் பெரிய பெரிய திருமண மண்டபங்களில் நடத்துகிறார்கள். ஆனால், ஏழைகள் தங்கள் வீட்டு நிகழ்ச்சிகளை அவர்கள் வாழும் வீடுகளில் நடத்திடவும் போதிய இடவசதி இல்லை. மண்டபங்களில் நடத்திடவும் பொருளாதார வாய்ப்பில்லை. ஏழைகளின் வாழ்க்கையை அனுபவித்து, உணர்ந்த நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், ஏழைகள் தங்கள் வீட்டு சுப காரியங்களை நடத்திட, அனைத்து ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும், ஏன் மாநகராட்சிகளிலும்கூட பொது சமுதாயக் கூடம் அமைக்கப்படுமென்று அறிவித்து பணிகளை மேற்கொண்டிருக்கிறாரே இதையாவது குறை சொல்லாமல் இருக்க உங்களுக்கு மனம் வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சட்டப் பேரவை கட்டடத் திறப்பு விழாவிற்கு வந்த, ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் தலைவர், திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்கள், அன்றையதினம் உரையாற்றும்போது

மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களின் ஆதரவும், ஆலோசனையும் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் பாராளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டமுன்வடிவை இயற்ற முடிந்திருக்காது என்று குறிப்பிட்டதை நினைவாக்க, அதை நனவாக்கக்கூடிய வகையில் மகளிர் நலத்தில், முன்னேற்றத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிவரும் பணிக்கு கிஞ்சித்தும் குறையாமல் அவர்தம் தனயனார் தளபதியார் அவர்கள் ஆற்றும் பணியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சிறிய அளவில் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் இயக்கம் படிப்படியாக வளர்ந்து, தற்போது மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, சமுதாயத்தில் உள்ள ஏழையெளிய, நலிவுற்ற மகளிரை இணைத்து இன்று அது ஒரு மாபெரும் சக்தி வாய்ந்த இயக்கமாக இயங்கி வருவதை யாரும் மறுக்கமுடியாது.

மாண்புமிகு தளபதியார் அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குவதில், கின்னஸ் சாதனை படைத்து வருகிறார்கள். கடந்த 4 ஆண்டுகளில் 17,12,000 மகளிரைக் கொண்டு 1,11,728 புதிய சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. சுழல் நிதியாக 2,29,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.229 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், தலைவர் கலைஞர் அரசு எடுத்த முயற்சியின் பயனாக ரூ.5,990 கோடியை வங்கிக் கடனாக இந்தக் குழுக்கள் பெற்றிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த நிதியாண்டில், மேலும் 50,000 புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்க அரசு திட்டமிட்டிருக்கும் இந்த வேளையில், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மக்களைச் சந்திக்க ஆகாய விமானம், ஹெலிகாப்டர் என்று அரசியல்வாதிகள் பயணம் செய்யும் இந்தக் காலக்கட்டத்தில், நேரடியாக வந்து மக்களைச் சந்திக்கும் நம்முடைய துணை முதல்வர் அவர்கள் சுழல் நிதி வழங்கக்கூடிய ஒவ்வொரு இடத்திலும் அவராகவே நேரடியாக பல மணி நேரம் மேடையில் கால் கடுக்க நின்று, அதை ஒரு சுமையாகக் கருதாமல், ஏழைகளுக்கு வழங்கும் பணியைச்

சுகமாகக் கருதி, பெண்களுக்கு அந்தச் சுழல் நிதிகளை வழங்கும்போது நாங்கள் அருகில் இருந்து பார்த்திருக்கிறோம். நிதி வாங்க வரும் பெண்கள் ஆர்வத்துடன் முண்டியடித்துக்கொண்டு நிதி வாங்குவதைவிட, அவர் அருகில் நின்று புகைப்படம் எடுத்து நிதி வாங்குவதை நாங்கள் பார்க்கும்போது நம்முடைய தளபதியார் அவர்கள் இளைஞர்களுக்கு மட்டும் தளபதி அல்ல; மகளிருக்கும் இவர் தான் நம்பிக்கை நட்சத்திரம் என்ற நிலை உருவாகியிருக்கிறது என்பதை இங்கே நான் பெருமைபடக் குறிப்பிட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி முதல் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் வரை ஏராளமான மக்கள் பணிகளைச் செய்திட்ட நம்முடைய முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்கள் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்து, அதை மாண்புமிகு தளபதியார் அவர்களால்தான் நிறைவேற்ற முடியும் என்ற வகையில் பொறுப்பை அவரிடம் கொடுத்திருக்கிறார். அதுதான் கலைஞர் வீட்டு வசதித் திட்டம் என்ற மாபெரும் திட்டமாகும். 3-3-2010 அன்று திருச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த மாபெரும் திட்டம், மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டங்களிலே மிகப் பெரிய திட்டமாகும். சாதி, மதப் பாகுபாடின்றி ஓலைக் குடிசைகளில் வாழும் அனைவருக்கும் நிரந்தர வீடுகள் கட்டும் இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டில் மட்டும் 3 இலட்சம் வீடுகள் கட்ட ரூ.1,800 கோடியை ஒதுக்கீடு செய்திருப்பது மட்டுமின்றி, 2010 முதல் 2016 வரை உள்ள ஆறு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குடிசைகளையும் நிலையான கான்கிரீட் வீடுகளாக மாற்ற வேண்டும் என்று திட்டமிட்டு, பணி மேற்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது தலைவா! இது உங்களால் மட்டும்தான் முடியும் என்பதை இன்றைக்கு மாற்றாரும் ஒப்புக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், 'நாளையும் நமதே' என்பதை இதன்மூலம் நீங்கள் கோடிட்டுக் காண்பித்திருக்கிறீர்கள் என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த நாளைய பணியை தளபதியாரால்தான் முடிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் அவரிடம் இதை ஒப்படைத்திருக்கிறீர்கள் என்று இன்றைக்கு நாட்டு மக்கள் குறிப்பிடுவதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் சார்பாக ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி முதலிலே ரூ.25 இலட்சம் என்று வழங்கப்பட்டது. பிறகு ரூபாய் ஒரு கோடியே எழுபது இலட்சம் தலைவர் கலைஞர் அவர்களால் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியாக வழங்கப்படுகிறது. நான் இந்த மாமன்றத்தில் தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தச் சட்டமன்ற உறுப்பினர் நிதியை உயர்த்தி ரூபாய் இரண்டு கோடியாக வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுங்காலம் நடைபெறாமல் இருந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை 1996-இல் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு நடத்திக் காட்டினார்கள். இன்னும் சொல்லப்போனால், நீண்டகாலம் தேர்தல் நடைபெறாமல் இருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் போன்ற ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளுக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நடத்தி சாதனை படைத்தார்கள். தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான் உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி அதிகாரங்கள் வழங்க தளபதியார் அவர்கள் தலைமையிலே மூன்றாவது உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டதன் அடிப்படையில், அந்தக் குழுவின் பரிந்துரைப்படி ஏராளமான சலுகைகள் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டன.

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் ஒன்றாம் தேதி உள்ளாட்சி தினம், அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி, உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அடையாள அட்டை, ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கம்பியில்லாத் தொலை தொடர்பு வசதி, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு வாகனங்கள், இவையெல்லாம் உள்ளாட்சித் துறையில் தளபதி அவர்களுடைய சாதனைகளின் கல்வெட்டுக்கள் என்று சொன்னால் மிகையாகாது. இதன்மூலம் மத்திய அரசு பல்வேறு மாநிலங்களைத் தர

வரிசைப்படுத்திப் பார்த்ததில், 2006-2007-இல் நான்காவது இடத்தையும், 2007-2008-இல் முதலிடத்தையும், 2008-2009-இல் மூன்றாவது இடத்தையும், 2009-2010-இல் இரண்டாவது இடத்தையும் தமிழகம் பெற்றுள்ளது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராம ஊராட்சி நிர்வாகத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, கிராம சபைகளைக் கூட்டுதல், அவர்கள் ஆர்வத்துடன் பணியாற்ற, சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு 'உத்தமர் காந்தி விருது', இவையெல்லாம் தலைவர் கலைஞர் ஆட்சியிலே சாதனைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: துணை முதல்வர் அவர்களின் பதிலுரைக்கு ஒன்றரை மணி நேரம் தேவைப்படுகிறது. எனவே, நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

திரு. அ. ராஜன்: நம்முடைய தளபதியார் அவர்கள் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த காலக்கட்டத்தில், சென்னையில் ஏராளமான பாலங்களைக் கட்டி, சென்னையின் அழகுக்கு அழகு சேர்த்தார். குறுமதியாளர்கள் அவருடைய பதவியைப் பறித்தார்கள். தமிழக மக்கள் அவரை உள்ளாட்சித் துறைக்கு அமைச்சராக்கினார்கள். சென்னையில் உருவாகிய பாலங்களின் எண்ணிக்கை அதிகரித்து, தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்களால் பல்வேறு பாலங்கள் உருவாக்கப்பட்டன.

நான்கூட நாகர்கோவிலுக்கு சுரங்க நடைபாதை வேண்டும் என்று தளபதியாரிடம் கேட்டேன். கேட்டவுடன் தந்தார். நகரின் முக்கிய பகுதியான அண்ணா பேருந்து நிலையம் பக்கம், அந்தச் சுரங்க நடைபாதை அமைக்கப்பட்டு, கடந்த பத்து நாட்களுக்கு முன்பு என்னுடைய தலைமையில், மாண்புமிகு அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் அவர்களால் அது திறந்து வைக்கப்பட்டது. எனவே, இந்த நேரத்தில் அதற்காக நாகர்கோவில் தொகுதி மக்கள் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லிவிட்டீர்கள்.

திரு. அ. ராஜன்: ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்பட்டுள்ள இந்த எழில்மிகு கட்டடத்தில், தலைவர் கலைஞர் அவர்களும், துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களும், நாகர்கோவில் மக்களுக்கு ஒரு மறக்க முடியாத பரிசைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகர்கோவில் நகரின் முக்கியத்துவத்தைக் கருதி நகராட்சியின் வருவாயைக் கருத்தில் கொண்டு, மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு, மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவிலை ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி வரிசையில் மாநகராட்சியாக ஆக்கித் தந்து சிறப்புச் செய்திட வேண்டுமென்றும், குமரித் தந்தை மார்ஷல் நேசமணிக்கு நாகர்கோவிலில் மணிமண்டபம் அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

கழகத்தின் இளைஞர் அணியிலிருந்து உயர்ந்த நமது தளபதியார் அவர்கள் இன்று கழகத்தின் பொருளாளராக இருக்கிறார். அதுபோல் மிகச் சிறப்பான தனது ஆற்றலால் மேயராக இருந்த அவர் உயர்ந்து உள்ளாட்சித் துறை அமைச்சராகி, தமிழகத் துணை முதல்வராக உள்ளார். தலைவர் கலைஞர் அவர்கள் நம்பிக்கையுடன் அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. நானும் முடித்துவிட்டேன். நீங்களும் உரையை முடித்துவிட்டீர்கள். நானும் முடித்துவிட்டேன். இப்போது, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேச ஆரம்பிக்கப் போகிறார்கள். (குறுக்கீடு) இருக்கட்டும் நாம் ஊரில் போய் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ், உங்களுக்கு இருபது நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2010-2011-ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாகத் துறை, குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எனது கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பு தந்த தங்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-05

இந்தியாவினுடைய ஆன்மா அதன் கிராமங்களிலே இருக்கிறது என்று சொன்னார் அண்ணல் காந்தியடிகள். அந்தக் கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் மன நிறைவோடும், மகிழ்ச்சியோடும் என்று வாழ்கிறார்களோ அன்றுதான் சுதந்திரத்தின் முழுமையான வெற்றி என்று குறிப்பிட்டார் அண்ணல் மகாத்மா காந்தியடிகள். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில், வேகமாக நகர்ப்புறமாக மாறி வருகின்ற மாநிலங்களில், முன்னிலையாக நிற்கின்ற மாநிலம் தமிழகம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தமிழகம், வரக்கூடிய 20 ஆண்டுகளிலே தமிழகத்தைச் சார்ந்த ஏறக்குறைய 70 விழுக்காடு மக்கள் நகர்ப்புறங்களுக்குப் புலம் பெயர்வார்கள் என்கிற அந்தச் செய்தியினுடைய பின்னணியிலே கிராமத்தினுடைய வளர்ச்சியை நாம் அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தத் துறையிலே கடந்த 4½ ஆண்டுக் காலம் சிறப்பாகப் பணியாற்றி இருக்கின்ற நம்முடைய அரசை, அதிலும் குறிப்பாக, இந்தத் துறைக்குத் தலைமையேற்று, அதை வழிநடத்திக்கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், அவர்களோடு இந்தக் களத்திலே நின்று பணியாற்றுகின்ற அரசினுடைய பல்வேறு பிரிவுகளிலே செயலாற்றுகின்ற அதிகாரிகளையும் நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கு ஓர் அருமையான பொற்காலம் என்று நான் சொல்வேன். ஏனென்றால் பாராட்டுகள் அவருக்கு எல்லா திசைகளிலிருந்தும் வந்துகொண்டிருக்கின்றன. நேற்றைய தினம் பேசுகின்றபோது, எங்களுடைய அருமை நண்பர் கோவை தங்கம் அவர்கள் இந்த அவையிலே இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு, அவர் பாராட்டினார், இவர் பாராட்டினார் என்று ஒரு பெரிய பட்டியலே அளித்தார். ஆளுகின்ற கட்சி மட்டுமல்ல; ஆளுகின்ற கட்சிக்கு அனுசரணையாக இருக்கின்ற தோழமைக் கட்சி மட்டுமல்ல; இந்தத் தோழமைக்கு வெளியே இருக்கின்ற எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற நண்பர்கள்கூட மனம் நிறைந்து அவரைப் பாராட்டியதை இந்த அவையிலே குறிப்பிட்டார். உடனே அவருக்குப் பின்னாலே இருந்து, எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் சகோதரி காயத்ரி தேவி அவர்கள், நாங்கள் பாராட்டவில்லையா என்று கேட்டார். ஆனால், பாராட்டு, எப்பொழுது பொருளுள்ள

பாராட்டாக இருக்குமென்று சொன்னால், எதையும் எதிர்பார்க்காதவர்கள் பாராட்டுகின்றபோதுதான், பாராட்டு, பொருளுள்ள பாராட்டாக இருக்கும். நான் பாராட்டுகிறேன் என்று சொன்னால், என் பக்கத்திலே இருக்கிற நண்பர்கள் என்ன சொல்வார்கள்? நாளை துணை முதலமைச்சரிடம் இவர் பரிந்துரைக்குப் போவார்; கோரிக்கை வைப்பார்; ஆகவே பாராட்டுகிறார் என்று சொல்வார்கள். ஆனால், இந்த நாட்டினுடைய பிரதம அமைச்சர் யாருக்கும் அசைந்துகொடுக்காத டாக்டர் மன்மோகன் சிங், வார்த்தைகளைக்கூட நிரம்ப அளந்து, அறிந்து, யோசித்துப் பயன்படுத்துகின்ற இந்தத் தேசத்தினுடைய பிரதமர் சென்னைக்கு வந்து, இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக செயல்படுகின்ற உள்ளாட்சித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, தமிழகத்தினுடைய ஊரக வளர்ச்சித் துறை என்று அவர் மனம் நிறைந்து சொல்கின்றபோது, யாருமே பிரதமரைப் பார்த்து, நம்முடைய துணை முதலமைச்சரிடம் சிபாரிசுக்கு வருகிறார் என்று சொல்லமாட்டார்கள்.

அதைப்போல உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி, Full Bench, 3 நீதிபதிகள் அடங்கிய அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக தலைமையேற்றிருக்கிற—உச்ச நீதிமன்றத்தினுடைய First Bench என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள்—அவர்கள் சொல்கின்றபோது என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், follow the Tamil Nadu Model என்று அவர்கள் தீர்ப்பிலே குறிப்பிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகாத்மா காந்தியினுடைய பெயரிலே இருக்கின்ற தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலே பல்வேறு மாநிலங்களில் நடக்கின்ற முறைகேடுகள், மந்தங்கள், தேக்கங்களைச் சுட்டிக்காட்டிய ஒரு பொது நல வழக்கு அவர்கள் பார்வைக்கு வருகிறபோது, பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற செயல்பாடுகளைச் சாடுகின்ற உச்ச நீதிமன்றம், தமிழகத்தைப் பார்த்து, தோள்களிலே தட்டிக்கொடுத்துப் பாராட்டி, எல்லோரும் தமிழகத்தைப் பின்பற்றுங்கள் என்று சொல்கின்றபோது உள்ளபடியே நாம்கூட ஓர் அடி வளர்ந்து நிற்கிறோம், நாமும் தமிழர் என்கின்ற காரணத்தினால். அதனால் நான் பாராட்டுகிறேன். ஆகவே மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, இந்தத் தேசத்தினுடைய பிரதமர் பாராட்டுகிறார், உச்ச நீதிமன்றம் பாராட்டுகிறது, உங்களுக்கு உற்ற நண்பர்களாக இருக்கின்ற நாங்கள் பாராட்டுகிறோம். தங்கள் நட்பை வெளிக்காட்டிக்கொள்ள முடியாத வேதனையிலே இருக்கின்ற,

மாற்று முகாம்களில் இருக்கின்ற நண்பர்கள்கூட வாய் திறக்காவிட்டாலும்கூட மனம்திறந்து பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு அந்த இரகசியத்தை மட்டும் நீங்கள் சொல்லிக்கொடுக்க வேண்டும். அக்கினிக் குழம்பாக இருக்கின்ற சிவபுண்ணியம்கூட தங்கள் பக்கத்திலே வருகின்றபோது, குழைந்து, முக மலர்ச்சியோடு மாறிவிடுகிறாரே! (மேசையைத் தட்டும் ஒலி) எதற்கெடுத்தாலும் எழுந்து உத்வேகப்படுகின்ற தம்பி வேல்முருகன்கூட தங்களைப் பார்த்தவுடனே அப்படியே மகிழ்ச்சியோடு அடங்கிப் போகிறாரே, எதிர்க்கட்சி வரிசையிலிருந்து கணைகள் எல்லா அமைச்சர்களையும் பார்த்து வருகின்றன, உங்களைப் பார்க்கின்றபோது மட்டும் அவர்களும் முக மலர்ச்சியோடு அமர்ந்துகொள்கிறார்களே, இந்த சூட்சுமத்தினுடைய இரகசியத்தை நீங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். நல்ல மரபணுக்களைத் தாங்கி, நல்ல மரபுகளை, பொது வாழ்க்கையில் பண்பாட்டை வளர்க்கின்ற, உங்களைப் போன்ற இளம் தலைவர்கள் இந்தியா முழுவதும் உருவாக வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய விருப்பம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, உங்களுடன் தொடர்ந்து நட்பாகவும், தோழமையாகவும் இருந்து நீங்கள் எடுக்கின்ற பணிக்கு எங்களுடைய முழு ஆதரவைத் தந்து, இந்தத் துறையிலே நீங்கள் மேலும் மேலும் வெற்றிகளைக் குவிக்க காங்கிரஸ் கட்சி உங்களை மனதார வாழ்த்துகிறது.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை மிக அருமையான திட்டங்களைக் கடந்த நான்கரை ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே எவ்வளவு பணிகள் நடக்கின்றன என்று நான் ஒரு கணக்கினைச் சேகரித்தேன். உதாரணமாக, என்னுடைய கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலே எத்தனைப் பணிகள் இந்த ஆண்டு நடக்கின்றன என்று நான் கணக்குப் பார்த்ததை ஒரு புள்ளி விவரத்திற்காக இந்த அவைக்குத் தருகிறேன். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட தொகுப்பு வீடுகள் 294, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மேம்பாடு கச்சா வீடுகள் 77. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் 4 ஊராட்சிகளில் 65 பணிகள், ஊரக உட்கட்டமைப்புப் பணிகள் 58, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம் 20, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 5,

ஊராட்சி ஒன்றிய பள்ளிச் சீரமைப்புத் திட்டம் 3, ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானியத் திட்டம் 1, மாநில நிதிக் குழு மானியத் திட்டம் 5, மாநில நிதிக் குழு gap filling திட்டம் 3, மாநில நிதிக் குழு உபரி நிதியில் நடக்கின்ற திட்டங்கள் 5, சத்துணவுத் திட்டச் சமையலறைக் கட்டடம் 11, ஒன்றிய பொது நிதி மற்றும் ஊராட்சி நிதியிலிருந்து 186 பணிகள், 12-வது நிதிக் குழு மானியத்திலிருந்து 2 பணிகள், நபார்டு திட்டப் பணிகள் 2, பாரத் நிர்மாண் திட்டப் பணிகள் 1, முழு சுகாதாரத் திட்டப் பணிகள் 13, வெள்ள நிவாரணப் பணிகள் 1, குடிநீர்த் திட்டப் பணிகள் 8, மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டத்திலே 42 பணிகள் என்று ஒரு வருடத்திலே ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 802 பணிகள் நடக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஏறக்குறைய 921 இலட்சம் ரூபாய் செலவிலே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பணிகள் நடைபெறுகின்றன. மத்திய, மாநில அரசுகளினுடைய முதலீடுகள், மத்திய மாநில அரசுகளினுடைய செயல் திட்டங்கள் மக்கள் நலம் நாடுகின்ற அரசாக இருந்தால் எப்படி இருக்கும் என்பதற்கு மிகச் சிறந்த திட்டங்களாக நாம் பார்க்கின்ற இரண்டு திட்டங்களைப் பற்றி மட்டுமே நான் இந்த ஊரக வளர்ச்சித் துறையிலே தங்களுடைய கவனத்தைக் கோர விரும்புகிறேன்.

மகாத்மா காந்தி பெயரிலே இருக்கின்ற தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். இந்தத் திட்டம் இன்று இந்தியா முழுவதும் இருக்கின்றது. இந்தியா முழுவதும் இருக்கின்ற அத்தனை மாநிலங்களுக்கும் மத்திய அரசு நிதி கொடுத்தாலுங்கூட, வெற்றிக் கதைகள்-success stories-என்று சொல்லப்படுகின்ற மாநிலங்களாக 3 மாநிலங்களைத்தான் அவர்கள் சுட்டிக் காண்பிக்கின்றார்கள். ஒன்று இராஜஸ்தான், மற்றொன்று ஆந்திரா, மற்றொன்று தமிழ்நாடு. காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற இரண்டு மாநிலங்கள், காங்கிரஸ் கட்சியினுடைய தோழமையை ஏற்றுக்கொண்டு அந்தத் தோழமைக்கு வலு சேர்க்கின்ற திராவிட முன்னேற்றக் கட்சி ஆளுகின்ற ஒரு மாநிலம். இந்த 3 மாநிலங்கள்தான் இந்தத் திட்டத்தினுடைய முக்கியமான பங்களிப்பை ஏற்றுக்கொண்டு இதை ஒரு மிகப் பெரிய வெற்றியாக மாற்றிக்கொடுத்திருக்கிற அந்த வரலாற்றை நாம் படைத்திருக்கிறோம். ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் மற்ற கட்சிகளுக்கு ஆர்வமில்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் இந்த இயக்கத்தினர் தங்கள் வாழ்க்கைத் தத்துவங்களாக ஏழை எளிய மக்களின் முதுகெலும்பை ஒடிக்கின்ற அந்த சுமையைத் தடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு

கொடுக்கின்ற பணியை தங்கள் வாழ்க்கையினுடைய பணியாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், இந்தத் திட்டம் இவ்வளவு மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது. 2005-லே இந்தத் திட்டம் அமலுக்கு வந்தபோது, 2006-இல் 3 கோடி ரூபாயாக இருந்த வரவு-செலவு இன்று ஏறக்குறைய 2,000 கோடியை இந்த நான்கரை ஆண்டுகளில் தொடப்போகிறது என்று சொன்னால் அதற்குப் பின்னாலே இருக்கின்ற மனித உழைப்பு, அதற்குப் பின்னாலே இருக்கின்ற ஆர்வம், அதற்கு வழிகாட்டிய தலைமை, இவற்றை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் பாராட்டவில்லை, இந்தத் திட்டத்திலே பணி செய்கின்ற ஒரு வயதான மூதாட்டி, 101 வயது மூதாட்டி, திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள 101 வயது மூதாட்டி பாராட்டுகிறார். 65 நாட்கள் அவர் வேலை செய்கிறார். அவர் சொல்லுகிறார், அதை 'Times of India'-லே அருமையாக எழுதினார்கள்—it helps me to live with dignity-இந்த வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நான் மதிப்போடும் மாண்போடும் வாழ்வதற்கு உதவி செய்கிறது என்று. (மேசையைத் தட்டும் ஒலி) 101 வயதான மூதாட்டி சொல்கிறார். அதுமட்டுமல்ல; மாதம் 400 ரூபாய் அரசினுடைய ஓய்வூதியத் தொகையைப் பெறுகிறார். அவர் சொல்கின்றார் தினசரி படி அளக்கின்ற அன்னை சோனியா காந்தி அவர்களையும், மாதா மாதம் படி அளக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களையும் நான் சோறில் கை வைக்கும்போதெல்லாம் நினைக்கிறேன் என்று 101 வயது மூதாட்டி பேசுகின்றபோது—யாருக்காக நாம் இந்தத் திட்டங்களைப் போட்டோமோ, எதற்காகப் போட்டோமோ, அந்த நோக்கம் நிறைவேறியது என்கிற ஆத்ம திருப்தியும், மகிழ்ச்சியும் நமக்கு இருப்பது இயற்கை. அதற்காக நம்மை நாமே பாராட்டிக்கொள்கிறோம். . .

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, என்ன? சொல்லுங்கள்.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது, 101 வயதுடைய மூதாட்டி அந்தத் திட்டத்திலே பயனடைகிறார் என்று சொல்லுகிறார். 101 வயது மூதாட்டி அந்த வேலையைச் செய்ய முடியுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: It depends upon the health. வேலை செய்யலாம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய அருமை நண்பர் திரு. அரி அவர்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன். அந்த மூதாட்டி எப்படி மண்ணை அள்ளிச் சுமக்கிறார் என்று 'Times of India'-வில் வந்த படத்தை நான் அவருக்குக் தருகிறேன்.

(உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் பத்திரிகைப் புகைப்படத்தினை எடுத்துக் காட்டினார்.)

அவர் நம்மைப்போல சுகவாசி அல்ல. உல்லாச மாளிகையிலே உட்கார்ந்துகொண்டு ஊரை வேடிக்கைப் பார்க்கின்றவர் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நாளும் உழைத்து வாழ வேண்டும் என்பதை வாழ்க்கையினுடைய கடமையாக ஏற்றுக்கொண்டிருப்பவர். ஆகவே, உழைக்க தனக்கு சக்தி இருப்பதால் உழைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அந்தப் புகைப்படம் 'Times of India'-வில் வந்திருக்கிறது. 101 வயதிலேகூட தன்னால் ஓய்வாக இருக்க முடியவில்லை; தான் உழைத்தே ஆகவேண்டும்; தனக்கு உழைக்கும் ஆர்வம் இருக்கின்ற காரணத்தினால், வேலைவாய்ப்பைக் கொடுத்து வந்த திருமதி சோனியா காந்திக்கும், கலைஞருக்கும் நன்றி சொல்லுகிறார். அது உங்களுக்குப் பொறுக்கவில்லை. ஆகவே, அவரைக் குற்றம் சொல்லாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தியினுடைய பெயரிலே இருக்கின்ற ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை, எந்த அளவிற்கு இன்னும் அதிகமான மக்களுக்கு நன்மை தருகின்ற வகையிலே பயன்படுத்துவதுபற்றி நம்முடைய அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு கிராமங்களிலே மீண்டும் மீண்டும் ஓடைகளை ஆழப்படுத்தவும், குளங்களிலே தூர் வாருவதும், சில இடங்களிலே—ஏனென்று சொன்னால் அடிப்படையிலே வெளியே நாம் பகிரங்கமாகச் சொல்ல முடியவில்லை என்று சொன்னாலுங்கூட— ஏழையெளியவர்களுக்கு உதவ வேண்டுமென்கிற இந்தத் திட்டத்தினுடைய தத்துவத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அதேநேரத்திலே இந்தத் திட்டத்தை மேலும் தமிழக அரசினுடைய அடிப்படைக் கட்டுமானப் பணிகளைப் பலப்படுத்துவதற்காக எப்படிப் பயன்படுத்த முடியுமென்று யோசிக்க வேண்டும்.

2010 ஏப்ரல் 26][திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நான் ஒரு சிறிய ஆலோசனையை நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை வைத்துக்கொண்டு தமிழகம் முழுவதும் ஒரு பெரிய green belt பச்சைப் போர்வையை போர்த்துகின்ற பணியை நாம் ஏன் செய்யக்கூடாது? கிராமச் சாலைகளுக்கு இரண்டு புறமும், கிராமங்களுக்கு வெளியேயும், சாலைகளுக்கு அருகிலேயும் குளத்துக் கரைகள் போன்றவற்றில் எல்லாம் மரங்களை வைத்து வளர்த்து, ஒரு பெரிய பசுமையான தமிழகத்தை உருவாக்குகின்ற முயற்சியிலே நாம் ஏன் ஈடுபடக்கூடாது? அதைப்போல கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திலும் இவர்களைப் பயன்படுத்தினால் என்ன? ஏனென்று சொன்னால், இன்று நீங்கள் 60 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் பணி செய்யக்கூடியவர்கள் இப்போது நம்முடைய நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பு செய்யக்கூடிய சாலைகளிலும், அவர்களுடைய வேலை நேரத்திலே மண் அள்ளிப் போடும் பணியினைச் செய்கிறார்கள். இப்பொழுது சாலைப் புருவங்கள் எல்லாம் சரி செய்யப்பட்டு வருகின்றன. இப்போது தேசிய நெடுஞ்சாலையிலே கூட—நான் நேற்று முன்தினம் பார்த்தேன்—செங்கப்பள்ளியிலிருந்து அவினாசி வழியாக கோவைக்குச் செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையில் கூட அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மரங்களை நடுகின்ற பணிகளைப்பற்றி மட்டும் சொன்னேன். அரசு அதையும் கவனத்திலே கொள்ள வேண்டும்.

இரண்டாவது, 802 ஊரகப் பணிகள் நடப்பதாக நான் குறிப்பிட்டேன். ஆனால், பல்வேறு ஒன்றியங்களிலே—இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்கள்—

கட்டடப் பணிகளை எடுப்பதற்கு எந்த ஒப்பந்தக்காரரும் முன்வருவதில்லை. சாதாரண சமையற்கூடத்திற்குப் பணம் கொடுக்கிறோம். சமுதாய மண்டபங்களுக்குப் பணம் கொடுக்கிறோம். சில நேரங்களிலே அங்கன்வாடி கட்டடங்களுக்குப் பணம் கொடுக்கிறோம். ஆனால், அந்தக் கட்டடப் பணியை எடுத்துச் செய்வதற்காக ஒப்பந்தக்காரர்கள் வருவதில்லை என்கிற குற்றச்சாட்டு உள்ளது. அது குற்றச்சாட்டு அல்ல. உண்மையான, யதார்த்தமான நிலை இருப்பதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இப்போது அரசு வைத்துக்கொண்டிருக்கூடிய விலைகள்-rates-அவை யதார்த்தத்திற்கு சம்பந்தமில்லாத rates என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி நான் அரசிடமிருந்து தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு ஒரு சிறிய புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. உதாரணமாக, அரசு எடுத்துக்கொண்டிருக்கிற பட்டியலிலே, ஆற்று மணல் ஒரு கன மீட்டர் அரசு அனுமதித்துள்ளது 110 ரூபாய். வண்டி வாடகை 153 ரூபாய். ஆனால், சந்தையிலே இன்று அதற்கு விலை 800 ரூபாய். ஆகவே, 536 ரூபாய் அதிலே வித்தியாசம் வருகிறது. அதைப்போல சிவப்புச் சரல், 40 மீட்டர் ஜல்லி, 20 மீட்டர் ஜல்லி, குண்டுக்கல், பாண்டுக்கல், செங்கல். உதாரணமாக, செங்கல்லுக்கு அரசாங்கம் அனுமதித்துள்ள தொகை ரூபாய் 2,220/-. ஆனால் இன்று உள்ளூரிலே 3,000/- ரூபாயாக செங்கல் விற்கப்படுகிறது. அதைப்போலவே அவர்களுக்குக் கொடுப்படுகின்ற கூலிகளும்கூட குறைவு.

பிற்பகல் 12-20

உதாரணமாக கொத்தனாருக்கு அரசு 179 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயித்திருக்கிறது. ஆனால், உள்ளூரிலே கொத்தனாருக்கு 300 ரூபாய். பெரியாளுக்கு 112 ரூபாய் என்று அரசு நிர்ணயித்திருக்கிறது. ஆனால், இன்று எங்கள் ஊரிலே பெரியாளுக்குச் சம்பளம் 200 ரூபாய். சித்தாளுக்குச் சம்பளம் 101 ரூபாய் என்று அரசு கொடுக்கிறது. ஆனால், 200 ரூபாய்க்குக் குறைந்து சித்தாள் வேலைக்கு வருவதில்லை. எனவே, கட்டடப் பணிகள் மிகவும் தாமதமாக நடைபெறுவதாகவும், first call, second call, third call and fourth call என்று நான்குமுறை அழைப்புவிடுத்தபோதும்கூட இந்தக் கட்டடப் பணிகள் நடைபெறவில்லை என்கிற குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. பணம் ஏராளமாகக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இந்தப் பணத்தைப்

பயன்படுத்தி ஒவ்வோராண்டும் கட்டி முடிக்க முடியாத நிலை இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டங்களுக்குக்கூட, நாங்கள் கொடுத்த நிதியைக் கொண்டு இந்த ஆண்டிலே பணி முடிக்கப்படவில்லை. ஏனென்று சொன்னால், ஒப்பந்தக்காரர்கள் வருவதில்லை என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அதையும் தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, இன்று மிகப் பெரிய திட்டமாக கலைஞர் வீட்டு வசதித் திட்டம் உள்ளது. சுதந்திர இந்தியாவிலே அன்றும் இல்லை; இன்றும் இல்லை; இனிமேல் என்றுமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் இன்று பல்வேறு தரப்பு மக்கள் மத்தியிலே ஒரு மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கிறது. நாளைக்கு வீடுகள் கொடுக்கப்பட்டு, அவர்கள் அந்த வீடுகளில் வாழ்கிறார்களோ இல்லையோ, ஆனால் இந்தக் குடிசையை—என்ன சொல்வார்கள் என்று சொன்னால், ஏழைகளின் சின்னம் குடிசை என்றுதான் சொல்வார்கள். நான் சிறுவனாக இருக்கின்றபோது, சோஷலிசக் கட்சியினுடைய சின்னமே குடிசையாகும். ஏழைகளின் சின்னம் குடிசை என்று அவர்கள் சொல்வார்கள். என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே மேக்கரை என்கிற மலையோரக் கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திலே இருக்கின்ற அத்தனை வீடுகளும் குடிசை வீடுகள்தான். அந்தக் குடிசை வீடுகளிலே அவர்கள் அனுபவிக்கின்ற சிரமத்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், மார்கழி மாதத்திலே முன் பனி, தை மாதத்திலே பின் பனிக் காலங்களிலே காலையிலே அதிகாலையிலே அந்த வீடுகளுக்குப் போனீர்கள் என்று சொன்னால், ஓலை முழுவதும் நனைந்து அப்படியே உப்பிப் போயிருக்கும். வீட்டிற்குள்ளே உட்கார முடியாது. அங்கிருக்கின்ற குழந்தைக்கு கக்குவான் இருமல் இருக்கும். அந்தக் குளிரிலும் குழந்தையை வைத்துக்கொண்டு அந்தத் தாய்மார்கள் போராடுகின்ற வாழ்க்கை. அதைப்போல சித்திரை மாதம் வந்துவிட்டால் பெரும் வெய்யில். ஆடி மாதத்தில் பெருங்காற்று, ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும், சித்திரை மாதத்திலே அந்த பெரும் வெய்யிலிலே அடிக்கடி தீ விபத்துகள். அதைப்போல மார்கழி மாதம் முடிந்த பிறகு பெரும் மழை, அந்த மழையினால், நீர் பெருகி தரையெல்லாம் நீரூற்று. அப்படி வாழ்ந்த அந்த மக்களுக்கு கான்கிரீட் கூரை,

கான்கிரீட் தளம் என்று கலைஞர் செய்து கொடுத்திருக்கிற இந்த அற்புதமான திட்டம் இருக்கிறதே இது ஏழ்மையினுடைய முகவரியையே அழிக்கின்ற முயற்சி. அதுதான் இங்கே பெரிய விஷயம். குடிசை என்பது ஏழ்மையினுடைய முகவரி. ஆகவே ஏழையினுடைய சின்னம் என்று சொல்வார்கள். ஒருவேளை உதயசூரியனும், கையும் ஏழையின் சின்னமாகிவிட்டதால் இனிமேல் குடிசைகளுக்கு அவசியம் இல்லை என்று கலைஞர் நினைத்தாரோ, அதனால் குடிசைகளே வேண்டாம் என்கிற நல்ல முடிவு எடுத்தாரோ! இதிலே எங்களுக்கு பெரிய மனக் குறை; திருநெல்வேலி மாவட்டத்துக்காரர்களுக்கு. ஏனென்று சொன்னால், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இருப்பார் என்று சொன்னேன். அவர்கள் மாவட்டத்திலே 54 விழுக்காடு குடிசைகள். ஆனால் எங்கள் தென் தமிழ்நாட்டிலே திருநெல்வேலி மாவட்டத்திலே 10 விழுக்காடுதான் குடிசைகள். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், காவிரி நீர் பாய்கின்ற தஞ்சாவூரில், கடலூரில், திருவாரூரில், நாகப்பட்டினத்தில், இங்கெல்லாம் 50 விழுக்காடு, 45 விழுக்காடு குடிசைகள் இருக்கின்றபோது, வானம் பார்த்தே விவசாயம் செய்கின்ற தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரத்திலே 10 விழுக்காடு குடிசைகள் என்று சொன்னால் எங்கள் உழைப்பை நாங்களே பாராட்டிக்கொண்டு, எங்களுடைய சமூக அமைப்பை நாங்களே பாராட்டிக்கொள்ள வேண்டும். நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்று சொன்னால், இதிலே அடுத்த ஆறு ஆண்டுகளிலே ஏறக்குறைய 28 இலட்சம் குடிசைகளுக்கு நீங்கள் நிதி கொடுக்கப்போகிறீர்கள். அதிலே மாவட்ட வாரியாகப் பார்த்தால் எங்களுக்கு வருவது மிகக் மிகக் குறைவு. ஏனென்று சொன்னால் அதைத்தான் மத்திய அரசிடம் நாம் கேட்டோம். நீங்கள் பீகாருக்கும், (குறுக்கீடு) I am not yielding. பீகாருக்கும், மத்தியப் பிரதேசத்திற்கும், உத்தரப் பிரதேசத்திற்கும் அதிக நிதியினை ஒதுக்குகின்றபோது, வளர்ச்சி அடைந்ததற்காக எங்களைத் தண்டிக்கிறீர்களா? ஏன்? என்று கேட்டோம். 'Are you penalizing for development?' என்று கேட்டோம். இப்போது நாங்கள் கேட்கிறோம், குடிசைகளே இல்லாத காரணத்தினாலே நாங்கள் என்ன பாவம் செய்தோம், அதற்காக எங்களுக்கு சரியான மாற்று நிதி ஒதுக்கீடு வேண்டும். (குறுக்கீடு) அதிலே கோயம்புத்தூரும் இருக்கிறது கவலைப்படாதீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லக்கூடிய அந்தக் கருத்து மீது, நான் கேட்க விரும்புவது, வேண்டுமானால் புதிய குடிசைகளை உருவாக்கி அப்படி ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினால்தான் அந்த நிலையை மாற்றிட முடியும். குடிசைகளை வேண்டுமானால் உருவாக்கக்கூடிய அந்த புதிய திட்டத்தையாவது இந்த அரசு மேற்கொள்ளுமா என்று நீங்கள் கேட்பதுபோல, உங்களுடைய வினா இங்கு அமைந்திருக்கிறது. (குறுக்கீடு)

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமில்லை. திரு. பீட்டர் அல்போன்ஸ், விரைந்து பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வந்தேன் என்று சொன்னால், அடுத்த 6 ஆண்டுகளுக்கு இந்த அரசினுடைய மிக மிக முக்கியமான திட்டமாக இந்தத் திட்டம் இருக்கப் போகிறது. ஆனால்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு நீங்கள் கூடுதலாக நேரம் ஒதுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் எல்லோருக்கும் தெரியும்; இன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளித்தாக வேண்டும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, incentive developmental bonus என்று எப்படி மத்திய அரசு தருகிறதோ அதைப்போல, குடிசைகள் குறைவாக இருக்கின்ற தென் மாவட்டங்களுக்கு ஒரு மாற்று ஏற்பாட்டைக் கருத வேண்டுமென்ற கோரிக்கையை மட்டும் நான் வைத்துக்கொள்கிறேன்.

நான் சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். B.P.L. list பற்றி நான் முதலிலேயிருந்து பேசிக்கொண்டிருக்கிறேன். இப்போது அடுத்த B.P.L. list எடுக்கப் போகிறார்கள். வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே என்கின்ற இந்த எல்லை, இன்றிருக்கின்ற சமூக அமைப்பில், அரசியல் அமைப்பில், நம்முடைய ஆட்சி முறையில் மிக மிக முக்கியமாக இருக்கிறது. அதிலே இரண்டு errors. Exclusion errors and inclusion errors. அதாவது சரியாகச் சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் விடுபட்டிருக்கிறார்கள். யார் சேர்க்கப்படக்கூடாதோ அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பட்டியல் 2005 ஆம் ஆண்டிற்கு முன்னால் தயார் செய்யப்பட்டது. ஒரு கிராமத்தில் இருக்கின்ற மிகப் பெரிய பணக்காரர்கள், வசதி வாய்ப்புள்ளவர்கள், மாடி வீடுகளிலே வாழ்கிறவர்கள், மிகப் பெரிய நிலச் சொந்தக்காரர்களெல்லோரும் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே இடம் பெற்றிருக்கிறார்கள். குடிசைகளிலே வாழ்கின்றவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இல்லை. இப்போது அடுத்த கணக்கெடுப்பை மத்திய அரசு ஆரம்பிப்பதாக இருக்கிறது. தயவுசெய்து, இந்தக் கணக்கெடுப்பை நீங்கள் முறையாக நடத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இப்போது ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளெல்லாம் below poverty line என்கின்ற அந்த வரையறைகளை நிர்ணயித்து, இன்று அமெரிக்காவிலே 27.5 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழ் இருப்பதாகவும், ஜப்பானில் 17.5 விழுக்காட்டினர் வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழ் இருப்பதாகவும் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே, வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ள அந்த நிலவரத்தை நாம் மாற்ற வேண்டும்.

நகர்மன்றங்களிலே பணியாளர்களை அமர்த்துவது மிகவும் சிரமமாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், அரசாணை எண் 19, நாள் 18-1-2007 இன்படி ஒரு நகராட்சியினுடைய வருவாயிலே 49 விழுக்காட்டிற்கு மிகாமல் செலவினம் இருந்தால்தான் பணியாளர்களை அமர்த்த முடியும் என்கின்ற விதி இருக்கிறது. ஆனால், இப்போது ஆறாவது ஊதியக் குழுவை நீங்கள் போட்ட பிறகு, எல்லா நகராட்சிகளும் 49 விழுக்காட்டினைத் தாண்டிவிட்டன. ஆகவே, எந்த நகராட்சியிலும் appointments போட முடியவில்லை. ஆகவே, அதை 60 விழுக்காடாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 26] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நகரப் பஞ்சாயத்துகள் என்ற ஒன்று தேவையா என்கின்ற கேள்விக்கு நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதவிக் காலத்திலேயே முடிவு செய்ய வேண்டும். இந்தியாவிலேயே வேறெங்கும் நகரப் பஞ்சாயத்துகள் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. அதிலே என்ன பெரிய பிரச்சினை என்று சொன்னால், பேரூராட்சிகளிலே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைக்கூட நிறைவேற்ற முடியவில்லை. நகர்மன்றங்களுக்கு வரக்கூடிய சிறப்புத் திட்டங்களும் அங்கே வருவதில்லை. கிராமங்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளும் அங்கே கிடைப்பதில்லை. பல்வேறு பேரூராட்சிகள், நான்கு ஐந்து கிராம ஊராட்சிகளைச் சேர்த்து உருவாக்கப்பட்ட பேரூராட்சிகளாக இருக்கின்றன. ஆகவே, எங்கள் மாவட்டத்திலே பல பேரூராட்சிகளிலே நிருவாக அதிகாரிகளே இல்லை. Bill collector-களைத்தான் promote செய்து பேரூராட்சி அதிகாரிகளாக நாங்கள் மாற்றியிருக்கிறோம். சில பேரூராட்சிகள் இப்போது நகராட்சியினுடைய அளவிற்கு விரிந்திருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது)

இன்றையதினம், குடிநீர் வடிகால் வாரியம் மிக அருமையான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அதிலே பொறியாளர்கள் இரவும் பகலும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட 806 கோடி ரூபாய்க்கு நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கு மிகப் பெரியதொரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அங்குள்ள அந்தப் பொறியாளர்கள் 25 ஆண்டுகளாகப் பதவி உயர்வு இல்லாமலேயே இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் பதவி உயர்வை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கோரிக்கையோடு முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி, சத்துணவுப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நேரடி அழைப்புகள் அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு பணியிடத்திற்கும் ஏறக்குறைய 100 பேர் மனு செய்கிறார்கள். அங்கன்வாடிப் பணியாளார், அங்கன்வாடி உதவியாளர், சத்துணவுப் பணியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு பத்திரிகைகளிலே விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதால், 100 பேர் மனு செய்துவிட்டு, அந்த 100 பேரும் சட்டமன்ற உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை, அரசியல் தலைவர்களை அணுகி, எப்படியாவது அந்தப் பணியை

வாங்கிவிட வேண்டுமென்று அவர்கள் படுகின்ற கஷ்டம், துன்பம், துயரம் சொல்லி மாளாது. இதற்குக்கூட உயர் நீதிமன்றத்தினுடைய உறுத்துக் கட்டளை இருக்கிறது. குறைந்தபட்சம் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து 1:5 என்கிற அளவிலாவது நேர்முக அழைப்பிற்கு அனுப்பி, அவர்களில் தகுதியானவர்களுக்கு மட்டுமே அந்தப் பணியைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

என்னுடைய தொகுதி சம்பந்தமான முக்கியமான இரண்டு கோரிக்கைகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஆய்க்குடி, அச்சன்புதூர், வடகரை, கீழ்குளம், பண்பொழில் ஆகிய பேரூராட்சிகளுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 29 கோடி ரூபாய் கொடுத்தீர்கள். இதிலே 10 விழுக்காடு ஊராட்சி நிதி, 10 விழுக்காடு பொதுமக்கள் நிதியாக, ஆய்க்குடி பேரூராட்சி 77 இலட்ச ரூபாயும், அச்சன்புதூர் பேரூராட்சி 85 இலட்ச ரூபாயும், வடகரை பேரூராட்சி 123 இலட்ச ரூபாயும், பண்பொழில் பேரூராட்சி 84 இலட்ச ரூபாயும் கொடுக்க வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்தத் தொகையினை அரசு மானியமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, கடையநல்லூர் நகராட்சிக்கு நம்முடைய முன்னாள் அமைச்சர் மஜீத் அவர்கள் இருந்த காலத்திலே போடப்பட்ட குடிநீர்க் குழாய்கள்; நானும் நான்கு ஆண்டுகளாகக் கேட்டு, நீங்களும் பெருமுயற்சி செய்து, எனக்கு அந்தத் திட்டத்தை வழங்குவதாக அறிவித்தீர்கள். அதற்காக நீங்கள் டெல்லிக்கே சென்று மத்திய அமைச்சர் திரு. ஜெய்பால் ரெட்டி அவர்களைச் சந்தித்தீர்கள். இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல், சில கோரிக்கைகளுக்காகக் காத்திருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிட்டேன். நம்முடைய அருமை நண்பர் ஞானசேகரன் அவர்கள், வேலூரில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் இருப்பதாகவும், அங்கே ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை 1,800 கோடி ரூபாயில் அமல் செய்து தர வேண்டுமென்றும் பல நாட்களாகக் கேட்டு வருகிறார்கள்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஞானசேகரன் Subject நிரம்ப old. நானே 4 இலட்சம் தடவை கேட்டுவிட்டேன், please.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இதோ முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல பணிகளை வெற்றிகரமாக செய்து முடித்து, மிகச் சிறப்பான நிருவாகத்தை நமக்குத் தந்து, பல்வேறு நல்ல பணிகளை எதிர்நோக்கிக் காத்திருக்கின்ற நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். அதற்கு மனமார அவர்களைப் பாராட்டி, அவர்கள் வெற்றியினைத் தொடுகின்ற இடத்தில் இருக்கிறார்கள். கூப்பிடும் தூரத்திலே வெற்றியிருக்கிறது. அந்த வெற்றியை அவர்கள் பெற வேண்டுமென்று வாழ்த்தி, விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 15 நிமிடங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பாகப் பேசுவற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தினைத் தெரிவித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும், தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அண்ணன் தளபதி அவர்கள், இந்த ஊராட்சி மானியக் கோரிக்கையை இந்தியாவில் ஊராட்சி தினம் கொண்டாடப்படுகிற இந்த வேளையில் கொண்டுவந்து, அதற்கு பதிலளிக்கிற இந்த வாய்ப்பில், இந்திய அளவில் தமிழகம் மீண்டும் பரிசு பெற்றிருக்கிறது என்கிற அந்தச் செய்தியை நேற்றைய முன்தினம் பத்திரிகையில் பார்த்தேன். மாண்புமிகு நம்முடைய தமிழகத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சார்பாக நம்முடைய பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று “மீண்டும் தமிழகம் ஊரகப் பணிகளில் முதலிடம்” என்கிற அளவில் பரிசு பெற்றமைக்காக என்னுடைய பாராட்டுதல்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Mike-இலிருந்து கொஞ்சம் தள்ளிநின்று பேசுங்கள். எதிரொலிக்கிறது.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் சட்டமன்றத் தொகுதிக்குள் வருகின்ற வகையில் மாற்றியமைக்கப்படும் என்று

அரசு, பக்கம் 32-இல் அறிவித்திருக்கிறது. இப்போது முழுவதுமாக, நெல்லிக்குப்பம் தொகுதி கலைக்கப்பட்டு, பண்ருட்டி தொகுதியினுடைய நகரத்தை எடுத்து நெல்லிக்குப்பம் தொகுதியோடு இணைத்து அதை பண்ருட்டி தொகுதி என்று அறிவித்திருக்கிறார்கள். ஆக, பண்ருட்டி தொகுதியாக இருந்ததை இன்றைக்கு நெய்வேலி தொகுதியாக, நெய்வேலி நகரப் பகுதியைச் சேர்த்து அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவிக்கின்றபோது, அந்த நெய்வேலி தொகுதிக்கென்று ஒரு ஊராட்சி ஒன்றியம் இல்லை. ஆதலால், மாண்புமிகு நம்முடைய தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு அரசியல் பிரமுகர்களையும், அரசியல் சாணக்கியர்களையும் உருவாக்கிய நான் பிறந்த, எனது கிராமமான புலியூர் காட்டுசாகை என்னும் கிராமத்தை, வருகின்ற புதிய ஊராட்சி மறு சீரமைப்பில் எடுத்து அந்த ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டுமென்று என்னுடைய முதல் கோரிக்கையை இங்கு நான் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, இந்திய அரசின் ஊராட்சித் துறை அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்படும் கிராம ஊராட்சிகளுக்கு ஒரே சீரான கணக்கீட்டு முறையை எல்லா மாநிலங்களிலும் திணிக்கும் மத்திய அரசின் முயற்சியை நாங்கள் எதிர்ப்போம்; அதில் இருக்கிற சிக்கலான, சிரமமான காரியங்களை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டுவோம் என்கிற அந்த அறிவிப்பையும் நான் வரவேற்கிறேன்.

12,620-க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி செய்ய வேண்டியதில் வெறும் 48 ஊராட்சிகளுக்குத்தான் செய்ய வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த 48 ஊராட்சிகளுக்குக்கூட கைபேசி வாங்கித் தந்துவிடலாம். ஆனால், தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்ட பல்வேறு கிராமங்களில் அவை சரியான முறையில் இயங்கவில்லை. அதற்குப் பதிலாக தற்போதைய நவீன உலகத்திற்கேற்ப மாற்றுத் திட்டத்தை நம்முடைய அரசு கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராம ஊராட்சிகளுக்கான மின் கட்டணத்தை பற்றிக் குறிப்பிடுகின்றபோது கால அவகாசத்தை நீட்டித்திருக்கிறீர்கள், வட்டியை குறைத்திருக்கிறீர்கள். 18.48 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டின்

தலைநகரமாக இருக்கின்ற இந்தச் சென்னை மாநகரத்துக்குக் குடிநீர் தருகின்றது என்னுடைய தொகுதி. பல்வேறு இராட்சத bore-கள் மூலமாகத் தண்ணீரைத் தருகின்ற என்னுடைய தொகுதி, இப்போது வறட்சியால் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஒரு ஆழ்துளைக் கிணற்றில் நாங்கள் தண்ணீர் எடுத்து குடிக்க வேண்டுமென்று சொன்னால் 1,700 அடியைத் தாண்டி, நீரை உறிஞ்சி எடுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் கோரிக்கை வைத்தேன். கடலூர் மாவட்டத்தில் இருக்கிற, சென்னைக்கு குடிநீர் தருகின்ற பகுதிகளில் இருக்கின்ற ஊராட்சிகளுக்கு மின்சாரக் கட்டணத்தையாவது தயவுசெய்து தமிழக அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். அதேவேளையில் நீங்கள், மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணம் அறிவித்தீர்கள். பாவம், கடலூர் மாவட்டம், என்ன செய்தது?

பிற்பகல் 12-35

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் அனுமதி பெற்று எங்களுக்கு 5 கோடி ரூபாய் வளர்ச்சி நிவாரண நிதி அளிக்க வேண்டும். அதில் பாதித் தொகையை என்னுடைய பண்ருட்டி தொகுதிக்கு நீங்கள் தர வேண்டும். காரணம், சென்னை மக்களுக்குக் குடிநீர் தருகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற நாங்கள், அங்கிருக்கின்ற மக்கள் படுகின்ற அவலங்கள், துன்பங்கள், துயரங்களை உள்வாங்கியதால், நீங்கள் அதைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோன்று, “உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் நிலையான பதவிக் காலம்” என்ற தலைப்பில் நியாயமற்ற அற்ப காரணங்களுக்காக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிராக அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டுவருவது குறித்து நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்த அற்பக் காரணங்களாலும், சில அரசியல் காரணங்களாலும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு ஒன்றியப் பெருந்தலைவர்களை, சேலம் மாவட்டத்தில் ஒருவரையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒருவரையும் நீக்கம் செய்திருப்பதாக அறிவிப்பு வெளியிட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் பார்க்கின்றபோது, இன்றைக்கு அரசியல் தளங்களைக் கடந்து, அனைவரோடும் பழகக்கூடிய பண்பாடு உடையவராக இருக்கிறார். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் முதல் துணை முதலமைச்சர் வரை எந்த நேரத்திலும் தங்களைத் தொடர்பு கொள்ளலாம், தொடர்பு கொண்டு குறைகளைத் தெரிவிக்கலாம், தெரிவித்த குறைகளுக்கு உடனடியாகப் பதில் கிடைக்கின்ற ஒரு தமிழகத்தினுடைய முதலமைச்சரைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால் இரவு 12 மணிக்கு நாங்கள் தொடர்பு கொள்கின்றபோதும், 'நான் அதிகாரிகளோடு கூட்டத்தில் இருக்கிறேன், திரும்பவும் உங்களைத் தொடர்பு கொள்கிறேன்' என்று சொல்லி, கூட்டம் முடிந்து இரண்டு மணிக்குத் தொடர்பு கொள்கின்ற தமிழகத்தின் துணை முதலமைச்சர் அவர்களுடைய அந்தச் செயல் திறனை நாங்கள் பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம். அதேநேரத்தில், நீங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று, அற்பக் காரணங்களுக்காகக் கலைக்கப்படுகின்ற நிலைமையை நீங்கள் எதிர்வரும் காலத்தில் கவனத்தில் கொள்ளவேண்டும். குறிப்பாக, பாட்டாளி மக்கள் கட்சிக்கு அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையிலும், எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையிலும், அரசியல் கட்சிகள், கூட்டணிகள், மாச்சரியங்கள் எப்படியிருந்தாலும்கூட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்பாக, "இதற்குத் தகுதியானவர் என்றும் தன் உள்ளத்தில் இருப்பதை, பட்டதைப் பட்டது என்று சொல்லக்கூடியவர்" என்றும் சொன்னவர் எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா என்பதையும் நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி எங்கள் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். பல்வேறு பத்திரிகைகளும் பாராட்டியிருக்கின்றன. நேற்று வந்த 'இந்து' பத்திரிகையில்கூட ஒரு பக்கத்திற்கு மிகப் பெரிய கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது. 'Deccan Chronicle' பத்திரிகை பாராட்டியிருக்கிறது, 'Times of India' பாராட்டியிருக்கிறது. ஏன், இந்தியாவில் இருக்கிற பல்வேறு பத்திரிகைகள் பாராட்டியிருக்கின்றன. (குறுக்கீடுகள்)

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைதியாக இருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: இன்றைக்கு அந்தத் திட்டம் ஏழை, எளிய மக்களிடத்தில் சென்றடைகிறது, அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்குப் பயன்படுகிறது. அந்தத் திட்டத்தை நாங்கள் மனதார வரவேற்கிறோம். அதில் ஒரு சிறு மாற்றம் அல்லது ஒரு சிறு சேர்த்தலைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், நம்முடைய அதிகாரி பெருமக்களுடைய கவனத்திற்கும் கொண்டுவருகிறேன். நீங்கள் கிராமப்புறங்களிலுள்ள ஏரி, குளங்களைத் தூர் வாருகிறீர்கள். வாய்க்கால், வரப்புகளைச் சீர்செய்வதற்கு அந்தத் திட்டத்தைப் பயன்படுத்துகிறீர்கள். அதேநேரத்தில், அந்தத் திட்டத்தில் பயனாளிகளாகப் பயன் பெறுகின்ற ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாள் பணியின்போதும் ஒரு மரக்கன்றை நட்டு, அதைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைக்கும், அதற்கு அந்த ஊராட்சி பொறுப்பேற்கின்ற ஒரு திட்டத்தையும் அதில் இணைத்தோமென்று சொன்னால், இந்தியாவே பாராட்டும். உச்ச நீதிமன்றம் பாராட்டுகிறது என்று நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்தைக் காட்டிலும், உலக வங்கி இந்தத் திட்டத்தை ஏழு முறை பாராட்டியிருக்கிறது. அதுவும் உங்கள் கொள்கைக் குறிப்பேட்டிலே இடம் பெற்றிருக்கிறது. அந்த வகையில் பாராட்டுக்குரிய ஒரு திட்டத்திற்கு மேலும் பாராட்டைச் சேர்க்கின்ற வகையிலே, நீங்கள் அதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மனித உழைப்பைக் குறிப்பிடுகின்றபோது சொல்லியிருக்கிறீர்கள், கடந்த ஆண்டு 82 சதவீதம் பேர், அதில் 56 சதவீதம் பேர் ஆதி திராவிட மக்கள். இந்த ஆண்டு 4,091 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் இத்திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. போன ஆண்டு குறைவாக இருந்தபோது 82 சதவீதம், இந்த ஆண்டு மனித சக்தி இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், சதவீதம் 82-லிருந்து 76 ஆகக் குறைந்திருக்கிறது. அது எந்தக் கணக்கின் அடிப்படையில் என்று எனக்குப் புரியவில்லை. அதேபோல, கடந்த ஆண்டும் இதை நான் சுட்டிக்காட்டினேன். அதே 56 சதவீதம் ஆதி திராவிடர்களுடைய மனித உழைப்பு என்பது தொடர்ந்து எப்படி 56 சதவீதமாக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே கேள்வியாக எழுப்ப விரும்புகிறேன்.

அதேபோல, தலைவர் கலைஞருடைய வீட்டு வசதித் திட்டத்தைப்பற்றி இதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். எங்கள் தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்கள் பெண்ணாகரம் தேர்தலிலே எதிரும், புதிருமாக இருந்தபோதுகூட இந்தத் திட்டத்திற்கான அடிக்கல்நாட்டு விழா, இந்தத் திட்டத்திற்கான தொடக்க விழா திருச்சியிலே நடைபெற்றபோது அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, தமிழ்நாட்டில் வாழுகின்ற ஏழை, எளிய பாட்டாளி மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஒவ்வொருவருக்கும் ஒரு வீட்டைக் கட்டித் தருகின்ற அந்தப் பாங்கை, தமிழக அரசின் திட்டத்தை, பாட்டாளி மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது; பாராட்டுகிறது என்பதற்காகத்தான், எங்கள் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களை அனுப்பி, அதிலே கலந்துகொண்டு பாராட்டச் செய்தார்கள். ஆக, அந்தத் திட்டத்தை வரவேற்கக்கூடிய, போற்றக்கூடிய ஒரு திட்டமாக பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. இன்னும் சொல்லப்போனால், அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்கின்றபோது குறிப்பிட்டார்கள், மற்றவர்களுக்கு என்ன செய்யப்போகிறார்கள் என்று. நான் சொல்வதுபோல, இன்றைக்கு பசித்தவனுக்கு உணவு என்ற அடிப்படையிலே குடிசைகளில் இருக்கின்ற ஏழை மக்களுக்கான இந்தத் திட்டத்தை வரவேற்கின்ற அதே வேளையில், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது குடிசையில் இருந்தாலுங்கூட, அவர்களுக்கும் கலைஞர் திட்டத்தில் கான்கிரீட் வீடு கட்டித் தரப்படும் என்கிற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறீர்கள். அதையும் இந்த நேரத்திலே நாங்கள் பாராட்டுகிறோம். காரணம், இன்னும் இன்றைக்கு அரசியலிலே இலாபம் தேடாமல், ஊழலிலே ஈடுபடாமல், நேர்மையாக, நியாயமாக அரசியல் செய்து வருபவர்களுடைய வாரிசுகளும், குடும்பங்களும் மிகுந்த துயரத்தில் இருக்கின்றார்கள். அதுகுறித்து வேண்டுமானாலும் நான் மாண்புமிகு துணை முதலமைச்சருடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வருகின்றேன்.

பிற்பகல் 12-40

அதேபோன்று, மகளிர் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மகளிர் திட்டம், கடந்த ஓர் ஆண்டில் மட்டும், இந்த மகளிருடைய எண்ணிக்கை, சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பார்க்கப்போனால்,

7 இலட்சம் மகளிர் உறுப்பினர்களை ஒரே ஆண்டில் சேர்த்து சாதனை படைத்திருக்கிறீர்கள். அதற்காக நான் தங்களையும், தங்கள் துறை அதிகாரி பெருமக்களையும் பாராட்டுகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இன்றைக்குப் பலன் கிடைத்திருக்கிறது. அவரோடு இருக்கின்ற அலுவலகத்தைச் சார்ந்த செயலாளர்களாக இருந்தாலும், துறை சார்ந்த அலுவலகத்தினுடைய செயலாளர்களாக இருந்தாலும் தங்களுக்கென்று தேர்ந்தெடுத்துக்கொண்டு 24 மணி நேரமும் இரவு பகலாக இந்த ஊராட்சி, உள்ளாட்சி, நகராட்சிக் குடிநீர் வழங்கல் துறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு நீங்கள் எடுத்திருக்கிற அந்த முயற்சியை நான் இங்கே மனதாரப் பாராட்டுகிறேன்.

அதிலும் குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தங்கள் அரசு செய்திருக்கிற சாதனையை நான் இந்த நேரத்தில் இங்கு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், உலக வங்கி உதவிபெறும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம். இத்திட்டத்தின்மூலம் மிகக் குறைந்த செலவினத்தில், மிகவும் ஏழை எளிய நலிவுற்ற இளைஞர்கள், பெண்கள், பழங்குடியினர் மாற்றுத் திறன்படைத்தோர் ஆற்றல் பெறுதல் மற்றும் அவர்களின் நிலையான வாழ்வாதாரம் மற்றும் பிற பலன்கள் பெற்றிடும் வகையில் அதன் வடிவம் மற்றும் செயலாக்க உத்திகள் அமைந்து, அதன் தனித் தன்மையை எடுத்துக்காட்டுகிறது என்று பிப்ரவரி 2009-இல் உலக வங்கி தெரிவித்திருக்கிறது. அதேபோல், கிராம அளவிலான மக்கள் அமைப்புகள் உருவாக்குதல் மற்றும் அவற்றை பலப்படுத்துதல் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்னும் முக்கியமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சிரமமின்றி மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்றும், இது எளிதான காரியம் அல்ல; பாராட்டப்படவேண்டிய சாதனை என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

இப்படிப் பாராட்டுகளைப் பெறுகின்ற இந்த அரசு இன்னும் தமிழகத்தில் பல இடங்களில் சாலை வசதிகள் இல்லாமலும், குடிநீர் வசதி இல்லாமலும், ஏனைய அடிப்படை, infrastructure வசதிகள் இல்லாமலும் இருக்கிற அந்தச் சூழலையும் கவனத்திலே கொள்ளவேண்டும். கவனத்தில் கொள்வோம் என்பதோடு தாங்கள் கடந்துவந்த பாதையைப் பெருமிதத்தோடு திரும்பிப் பார்க்கும் அதேவேளையில், முழுமையான கிராம மறுமலர்ச்சி என்ற இறுதி

இலக்கினை அடைந்திட ஓயாது உழைப்பும், தொடர் முயற்சியும் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்தேயிருக்கிறது. தொலைநோக்குப் பார்வைகொண்ட நமது தமிழக முதல்வர் தலைமையில் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வில் ஒளி வீச தொடர்ந்து அயராது உழைத்திடுவோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த உழைப்பும், இந்தச் செய்தியும் ஏதோ நாங்கள் ஊராட்சித் துறையில், உள்ளாட்சித் துறையில் சாதித்துவிட்டோம் என்கிற அந்த எண்ணம் இல்லாமல், தொடர்ந்து நாங்கள் அதற்கான முயற்சியை எடுப்போம் என்பதைப் பெருந்தன்மையோடு இந்தக் குறிப்பேட்டில் குறிப்பிட்டிருப்பதற்காக நன்றி சொல்கிறோம்.

குறிப்பாக, இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையில் மிகச் சிறப்பாக 2 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தின் துணை முதலமைச்சராக இருக்கிற தளபதி அவர்களுடைய உள்ளாட்சித் துறைக்கு மட்டும் இது பொருந்தக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், இந்த அவையிலே இருக்கிற அனைத்து அமைச்சர் பெருமக்களும் தங்கள் துறை சார்ந்த அரசு அதிகாரிகளோடு தங்கள் துறை சார்ந்த செயலாளர்களோடு கலந்து பேசி, தங்கள் துறையில் எடுத்த நடவடிக்கை என்ன, இன்னும் எடுக்கப்போகிற நடவடிக்கை என்ன என்பதையும், அறிவித்த திட்டங்களில் எது செயலாக்கம் பெற்றிருக்கிறது, எது இன்னும் செயலாக்கம் பெறவில்லை என்பதையும் இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கின்ற வகையில் இதுபோன்ற வெளியீடுகளை நீங்கள் வெளியிட்டு இந்த அவையில் வைக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு அவையின் கவனத்தை ஈர்க்கிறேன்.

அதுபோல, நகராட்சிக் குடிநீர், பாதாளச் சாக்கடைப் பிரச்சினை. தமிழகத்தில் எந்த பாதாள சாக்கடைத் திட்டமும் இன்னும் முழுமையாக நிறைவுபெற்றதாக இல்லை. கடலூரில் மட்டும் இருவர் அந்த பாதாளச் சாக்கடையால் உயிரிழந்திருக்கிறார்கள். காலை விட்டுக்கொண்டு அடிபட்டிருக்கிறார்கள். இறந்துபோய் இருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் இன்னும் தண்ணீர் leakage ஆகிக்கொண்டிருக்கிறது. சரியான திட்டமிடல் அந்த இடத்தில் ஒப்பந்ததாரர்களால் செய்யப்படாத ஒரு சூழல் இருக்கிறது. ஆதலால், அதையும் நீங்கள் திருத்திக்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நேரத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய 'தினமணி' செய்தி. "திருவொற்றியூரில் துறைமுகத்தில் container-க்கு என்று ஒதுக்கப்பட்ட அந்த lorry terminal இதுவரைக்கும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. வாடகை மட்டும் Port Trust கட்டிக்கொண்டு இருக்கிறது. நகராட்சி நிருவாகம் அந்த இடத்தை ஒதுக்கி, அதைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரவில்லை" என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளது. அதைக் கவனிக்கவேண்டும். அதுமாதிரி ஓசூர் பேருந்து நிலையம். நான் Assurance Committee-இல் போய் ஆய்வு செய்துவிட்டு வந்தேன். உடனே action எடுத்து, வேலையை முடிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரைக்கும் முடியவில்லை. அதுமாதிரி அங்கே இருக்கிற மின் தகன மேடை, அதுகுறித்தும் அந்தக் கமிட்டிமூலமாகப் பரிந்துரை செய்துவிட்டு, பத்திரிகைகளுக்குப் பெரியதாக செய்தி கொடுத்துவிட்டு வந்தோம். அது இன்னும் நடைபெறவில்லை. அதேமாதிரி, கடல்நீரைக் குடிநீராக்குகிற திட்டத்திற்கு மீனவர்களிடத்தில் எதிர்ப்பு இருக்கிறது. அந்த மீனவர்களுடைய குறைகளையும், அவர்களுடைய வாழ்வாதாரத்தைம் பாதிக்காதவண்ணம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சேலம் மாநகராட்சியிலே பொறியியல் பிரிவில் பணிபுரிந்துவரும் பொறியியல் படித்துள்ள பணியாளர்களுக்குப் பதவி உயர்வே இல்லை. பதவி உயர்வு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனென்று சொன்னால், சென்னை மாநகராட்சியில் வழங்கப்பட்டிருக்கிறது. ஏனைய மாநகராட்சிகளில் வழங்கப்படவில்லை.

அதேமாதிரி ஊரக வளர்ச்சித் துறையால் கலைஞர் காப்பீட்டுத் திட்டம், வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் ஒரு B.D.O. தான். எல்லாவற்றுக்கும் அந்த A.B.D.O.-தான். அதனால் 24 மணி நேரமும் அரசுத் துறை அலுவலர்களும், செயலாளர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் உழைத்தாலுங்கூட, திட்டங்களை நடைமுறைப்படுத்துகிற பொறுப்பிலேயிருக்கின்றவர்கள், அந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள்தான். அலுவலர்களுடைய கோரிக்கையை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

அதேமாதிரி, அலுவலக அமைச்சுப் பணி, களப் பணி மற்றும் தொழில்நுட்பப் பணியிடங்களை நிரப்பவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் கணினி இயக்குபவர்களைப் புதிதாக நியமிக்க வேண்டும். ஏற்கெனவே 10 ஆண்டுகளை பணி முடித்து R.D. Secretary மூலமாகக் கடிதம் அனுப்பப்பட்டும் இன்னும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதேமாதிரி, அந்தத் துறையில் இருக்கிற இரவுக் காவலர்கள், அங்கு இருக்கிற பணியாளர்கள், கணினி உதவியாளர்கள் ஆகியோரை நீங்கள் பணி நிரந்தரம் செய்வதற்கும், . . .

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை, முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, முடியாது. இன்றைக்கு துணை முதல்வர் அவர்கள் reply பண்ண வேண்டும்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதிவு எழுத்தர்கள், அரசு எழுத்தர்கள் தங்களைச் சொந்த மாவட்டங்களுக்குப் பணி மாறுதல் செய்ய வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலப் பணியாளர்களை இரண்டு முறை dismiss செய்திருக்கிறார்கள். அவர்களுக்கான பதவி உயர்வு, ஊதிய உயர்வு, காலமுறை உயர்வு எல்லாவற்றையும் மாற்றிக் கேட்கிறார்கள். அதையெல்லாம் கொடுக்க வேண்டும். குறிப்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில்—கடந்த முறை மாண்புமிகு துணை முதலமைச்சரிடத்தில் தனியாகவும் வந்து சொன்னேன்; மனுவும் கொடுத்தேன். இருபது ஆண்டுக் காலமாகப் பணிபுரிகின்ற அந்த உதவிப் பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. அதை நீங்கள் செய்து தர வேண்டும். அதேமாதிரி, 200-க்கும் மேற்பட்ட உதவிப் பொறியாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேமாதிரி, பேரூராட்சி செயல் அலுவலர்கள் தகுதி வாய்ந்த பேரூராட்சி மூன்றாம் நிலையில் இருக்கிறார்கள். அதேமாதிரி கடன் தள்ளுபடி. நகராட்சிக்குச் செய்தீர்கள்; மாநகராட்சிக்குச் செய்தீர்கள்; பேரூராட்சிக்கும் செய்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதி ரூ. 1.70 கோடி, குறைவாக இருக்கிறது. அதை நிறைவாக இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியில் இருக்கிற சில பிரச்சினைகளை மட்டும் ஓரிரு நிமிடங்களில் சொல்லி விடை பெற விரும்புகிறேன்.

பண்ருட்டி தொகுதியிலே முதன் முதலாக, தமிழ்நாட்டில் இரண்டாவது சமத்துவபுரத்தை வழங்கியதற்காகத் தங்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றி. நீங்கள் வந்து திறக்கும்போது நான் அங்கு வரவில்லையென்று பதிவு செய்தீர்கள். அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலையில் வர முடியவில்லை. இருந்தாலும் எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டு, நான் வைத்த அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்தமைக்காக நன்றி கூறுகிற அதேவேளையில் என்னுடைய சொந்த ஊரில் இன்னும் பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமல் எங்கள் மக்கள் துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாகிறார்கள். எனது தொகுதியிலும் அதேபோல நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மாண்புமிகு துணை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கடலூரில் ஒரு புறவழிச்சாலை. அந்த சாலை ஜவான் பவான் வழியாக வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் நேரத்தை adjust செய்ய வேண்டும். (குறுக்கீடு) எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்துவிடுங்கள். நீங்கள்தான் எது கேட்டாலும், கொடுத்து விடுகிறார்களே! நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள். நாங்கள் என்ன மறுக்கிறோமா, என்ன? (குறுக்கீடு) சார், நேரம் இல்லை please. எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய தலைவர், திரு. ஜி.கே. மணி அவர்களுடைய கோரிக்கை, எங்கள் ஓமலூர் திரு. தமிழரசு, எம்.எல்.ஏ. அவர்களுடைய கோரிக்கை, எங்கள் திரு. காவேரி எம்.எல்.ஏ. அவர்களுடைய கோரிக்கை, இன்னும் எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நான் கொறடா என்ற முறையில்,

அவர்கள் கொடுத்த அந்தக் கோரிக்கைகளை எல்லாம், மானியக் கோரிக்கை முடிவுபெற்றவுடன் மாண்புமிகு துணை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவற்றையெல்லாம் நீங்கள் நிறைவேற்றித் தந்து, நீங்கள் ஊராட்சி, நகராட்சி மற்றும் உங்கள் துறை சார்ந்த துறைகளில் மின்னுவது போல, தமிழகத்தின் எதிர்கால இளைய தலைமுறைக்கு நீங்கள் வழிகாட்ட வேண்டும். படித்து விட்டு இருக்கிற இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். தங்கள் துறையில் இன்னும் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. 17,819 பேர்களை நீங்கள் தேர்வு செய்திருந்தாலுங்கூட, கடந்த ஆண்டு வெறும் 108 பேர்கள்தான் உங்கள் துறையில் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஆகவே உங்கள் துறையில் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிற அந்த எதிர்கால இளைய தலைமுறைக்கு வாய்ப்பு அளிப்பதற்கு வேலைவாய்ப்பினை நீங்கள் உறுதிப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. டி. சுதர்சனம்: Point of clarification. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுதர்சனம். *(குறுக்கீடு)* காங்கிரஸ் கட்சியின் தலைவர் கேட்டிருக்கிறார்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் வேல்முருகன் பேசுகின்றபோது, சமத்துவபுரம் திறக்கின்றபோது, தான் இருந்த அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக வரவில்லையென்று சொன்னார். இப்போது அரசியல் சூழ்நிலை அப்படியே இருக்கிறதா அல்லது மாறியிருக்கிறதா என்பதை அவர் தெரிவிக்க வேண்டும். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சும்மா நகைச்சுவைக்காக கேட்டார் அவர். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* சரி, சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அரசியல் சூழ்நிலைகளை, எங்கள் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் சின்ன அய்யா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்கள் சொல்கின்றபோது சொன்ன, அவர்களின் பெரிய அய்யாவாகிய தலைவர் கலைஞர் அவர்களும்,

எங்கள் பெரிய அய்யாவாகிய அய்யா அவர்களும், எங்கள் சின்ன அய்யாவும், இந்தச் சின்ன அய்யாவும் சேர்ந்து முடிவு செய்வார்கள், கட்சியின் மேல்மட்டக் குழு முடிவு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விசு படம் பார்ப்பது மாதிரியே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் பத்து நிமிடம்.

***திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னால், வாராது போல் வந்த மாமணி, காய்ந்து சிவந்த கதிரவனின் சிகப்பினை ஈந்து சிவந்த கரத்தாலே வென்ற எங்கள் வாய்மைமிக்க தூய்மைத் தலைவி, ஆறு கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், தங்கத் தாரகை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவருக்கும் நன்றி கூறி, 1991 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலேயே Zero ஆக இருந்த தி.மு.க.-வே நாட்டை ஆளும்போது, 2001 ஆம் ஆண்டு பெண்ணாகரம் தேர்தலிலே deposit இழந்த தி.மு.க.-வே நாட்டை ஆளும்போது, தமிழ்நாட்டு மக்களுக்காகப் பல திட்டங்களைத் தந்து, நாட்டு மக்களுக்காகவே வாழும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-இல் முதல்வராக வருவார் எனக் கூறி எனது உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 12-50

உள்ளாட்சித் துறை என்பது ஒரு முக்கிய துறையாகும். மக்கள் தொகையில் 60 சதவிகிதம்பேர் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள். இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன்மூலமே ஒரு நாடு சிறப்பான நிலையை அடைய முடியும். மானியக் கோரிக்கை எண் 34, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011 ஆம் ஆண்டு புத்தகத்தில் பக்கம் 150-ல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சொத்துவரி சீராய்வு, 1-4-2008 அன்று உள்ளாட்சி அமைப்புகள் உயர்த்த அரசு ஆணையிட்டுள்ளது; நகராட்சிகளில் 30 சதவிகிதம், மாநகராட்சிகளில் 47 சதவிகிதம் என உயர்த்தப்பட்டுள்ளது. அதை இந்த அரசு அதிகாரிகளும், உள்ளாட்சி மன்றங்களும் வலியுறுத்தி உயர்த்தியுள்ளன. ஆனால், எங்கள் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் ஆட்சிக் காலத்திலே 1-10-2003-இல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரிச் சீரமைப்பு செய்ய வேண்டுமென்றாலுங்கூட, அப்போது சுனாமி, வறட்சி, புயல் என்று சிரமமான சூழ்நிலை இருந்தபோதிலுங்கூட மக்கள்மேல் வரிச் சுமையைச் சுமத்தவில்லை என்பதைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட சில திட்டங்களை இங்கே குறிப்பிடுகிறேன். ரூ.277.79 கோடியில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான 13,062 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன. 11,573 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. அதேபோல, பேரூராட்சிகள், சிற்றூராட்சிகள் எல்லாம் கணினிமயமாக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை சிறப்பு ஊராட்சிகளாக, மத்திய அரசினுடைய நிதி, நேரடியாக ஊராட்சிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக அம்மா அவர்கள் அதை மாற்றினார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சி வந்தவுடனே, அதை மீண்டும் பேரூராட்சியாக மாற்றியிருக்கிறீர்கள். அதைக்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள் என்பதற்காகவே, அதை மாற்றியிருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிடுகிறேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். இத்திட்டத்தில் பொது மக்களுக்கு வழங்கும் வேலை நாட்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் கூடுதலாக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தை ரூ.100 ஆக உள்ளதை, ரூ.150 ஆக உயர்த்த வேண்டும். இத்திட்டத்தினால் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காமல், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தில் கேரள மாநிலம் செய்வதைப்போன்று பின்பற்றினால் சரியாக இருக்கும். அங்கே விவசாயத்திற்கும் அந்த ஆட்களை அனுப்பலாம். அந்த விவசாயிகளின் கூலியில் பாதியை விவசாயம் செய்பவரும், அந்த ஊராட்சியும் தரும் என்று குறிப்பிடுகிறார்கள்; அதை இந்த அரசு செய்ய முன்வரவேண்டும்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம். இதில் வீடுகள் கட்ட 60,000 ரூபாய் ஒதுக்கியிருந்தாலுங்கூட, விஷம்போல் ஏறுகின்ற விலைவாசியில் கண்டிப்பாகக் கட்ட முடியாது. மாண்புமிகு

அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிமெண்ட் ஒரு மூட்டை ரூ.130-க்கு விற்றது. தி.மு.க. ஆட்சியில் ரூ.295. மணல் விலை ஒரு யூனிட், அம்மா அவர்கள் ஆட்சியில் 1,400 ரூபாய். தி.மு.க. ஆட்சியில் ரூ.2,500. அம்மாவினுடைய ஆட்சியிலே கம்பி ஒரு கிலோ 24 ரூபாய், தி.மு.க. ஆட்சியில் ரூ.42. ஆகவே, இந்த 60,000 ரூபாய் என்பதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும். அதேபோல, அம்மாவினுடைய ஆட்சியிலே ஆதி திராவிடர்களின் தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் தனியாக நிதி ஒதுக்கியிருந்தார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்து, கடந்த நான்கு ஆண்டுகளாக எந்த நிதியும் ஒதுக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மட்டும் பழுதுபார்க்கலாம் என்றிருக்கிறது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வேலுமணி, வண்டி self starter எடுக்கவில்லைபோல இருக்கிறது; வேகமாகப் பேசுங்கள்.

திரு. சு.ப. வேலுமணி: சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வருடா வருடம் தெரு விளக்குகள் ஒதுக்குவதிலே முரண்பாடுகள் இருக்கின்றன. தெரு விளக்குகள் மிகவும் அவசியமாகத் தேவைப்படுபவை; அதிலே என்ன முரண்பாடு இருக்கிறது என்று தெரியவில்லை; வருடா வருடம் அதிலே முரண்பாடு இருக்கிறது என்பதைப் பதிவு செய்கிறேன்.

அதேபோல, என்னுடைய கோவை மாநகராட்சிக்குட்பட்ட, பேரூர் தொகுதிக்குட்பட்ட தெலுங்குபாளையம், செல்வபுரம், வேலாண்டிபாளையம், கரும்புக்கடை, பிஎன். புதூர் ஆகிய அனைத்து இடங்களுக்கும் மாநகராட்சி மெட்டல் சாலை போட்டு வருடக் கணக்கில் ஆகிவிட்டது. அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். தார்ச் சாலைகளும் போடப்படவில்லை.

அடுத்து, குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அதேபோல அத்திக்கடவு இரண்டாம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மதுக்கரை யூனியனிலே நிறைவேற்ற வேண்டும். அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் அது சர்வே செய்யப்பட்டது.

பிற்பகல் 12-55

கோவை மாவட்டத்தில், கடந்த தி.மு.க. ஆட்சியில் என்னுடைய பேரூர் தொகுதிக்குட்பட்ட ஆத்துப்பாலத்தில் ஒரு பாலம் கட்டப்பட்டது. பழைய பாலத்திற்கும் சேர்த்து சுங்க வரி நிர்ணயம் செய்து 12 ஆண்டுகளாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் கோவை மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களும் பாதிக்கப்படுகின்றார்கள். தினமும் வாகன நெரிசல் ஏற்படுகின்றது. எனவே அந்தச் சுங்க வரியை இரத்து செய்ய வேண்டும். மத்திய அரசில் அங்கம் வகிக்கும் நீங்கள் நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலுங்கூட, L & T நிறுவனத்திடம் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த ஆத்துப்பாலம் சுங்க வரியை இரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பேரூர் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சிப் பகுதிகள் செல்வபுரம், கல்லாமேடு, சீரநாய்க்கன்பாளையம் போன்ற பகுதிகளிலே வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சரிசெய்து தரவேண்டும்.

அதேபோல குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகளில், தற்காலிகமாகப் பணிபுரியும் 104 பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும். குனியமுத்தூர் நகராட்சி, கோவைப் புதூர் பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் உள்ளன. இந்நிலத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எனது தொகுதியில் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர்கள் அதிகமாக வசிக்கின்றார்கள். அவர்களுக்கு ரம்ஜான் நோன்பு காலத்தில் கஞ்சிக்கு வழங்கப்படும் அரிசியைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இஸ்லாமியர்களின் மயானத்திற்கு அரசே சுற்றுச் சுவர் அமைத்துத் தரவேண்டும். மதுக்கரை ஒன்றியம், நாச்சிபாளையம் தக்காளி மார்க்கெட்டில் தினமும் 10 ஆயிரம் தக்காளிக் கூடைகள் வருகின்றன. எனவே, அங்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசிடம் கொப்பரைத் தேங்காயை அப்படியே கொள்முதல் செய்ய

வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதை இந்த அரசு உடனடியாக அமல்படுத்தி கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்ய வேண்டும். அதேபோன்று என்னுடைய தொகுதியில் CCMS தெலுங்குபாளையத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட்டார்கள். அங்கே மீண்டும் கொள்முதல் செய்தால், மதுக்கரை யூனியன், தொண்டாமுத்தூர் யூனியன் விவசாயிகள் பயனடைவார்கள். என்னுடைய தொகுதியில் கோவை-பொள்ளாச்சி பிரிவு ரோட்டில் 150 வீடுகளையும், சிறுவானி மெயின் ரோட்டில் 200 வீடுகளையும் காலி செய்ய வேண்டுமென்று திடீரென்று நோட்டீஸ் கொடுத்துள்ளார்கள். எங்கள் அம்மா அவர்கள் ஆட்சியிலே இவர்களுக்கெல்லாம் வீடுகளைக் கட்டிக்கொடுத்தார்கள். அதேபோல இந்த அரசாங்கம் செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு.ப. வேலுமணி, mike-ஐச் சரியாக on செய்துவிட்டுப் பேசுங்கள்.

திரு. சு.ப. வேலுமணி: என்னுடைய தொகுதியிலே கேரளாவுக்கு தினமும் 100 லாரிகளின் மூலம் மணல் கடத்தப்படுகின்றது. அதேபோல அரிசியும் கடத்தப்படுகின்றது. இதுபற்றி அதிகாரிகளிடம் சொன்னால், கண்டுகொள்ளாமல் இருக்கின்றார்கள். இதை இந்த அரசாங்கம் கண்டிப்பாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதிக்குட்பட்ட குறிச்சி-குனியமுத்தூர்-ஆழியாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே 2004-2005 ஆம் ஆண்டு உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்டது. அதன் பிறகு தி.மு.க. ஆட்சி வந்த பின்னால், 4 வருடங்களாக ஆமை வேகத்தில் நடந்த அந்தப் பணி 27-10-2009 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இன்னும் அந்தத் திட்டத்தின்மூலம் பல டேங்குகளில் தண்ணீர் ஏற்றப்படவில்லை. குறிச்சியில் 5 டேங்குகளிலும், குனியமுத்தூர் குளத்துப்பாளையத்தில் ஒரு டேங்கிலும் தண்ணீர் ஏற்றப்படவில்லை. சில டேங்குகளில் தண்ணீர் ஏற்றி, 10, 15 நாட்களுக்கு ஒருமுறைதான் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், 27-10-2009 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குறிச்சி-குனியமுத்தூர்-ஆழியாறு கூட்டுக்

குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைக்க பொள்ளாச்சிக்கு வருகை தந்தார்கள். இதுகுறித்து குறிச்சி நகராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். அதேபோல, குனியமுத்தூர், பொள்ளாச்சியிலும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். அந்த agenda கூட என்னிடம் உள்ளது. அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த agenda-வின் நகல் என்னிடம் உள்ளது. அந்த நகராட்சியின் தலைவர் தி.மு.க.வைச் சார்ந்தவர். நான் இப்போது சொல்லப்போகின்ற தீர்மானம்—பொள்ளாச்சி நகராட்சியிலும், குனியமுத்தூர் நகராட்சியிலும், இதே தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். எங்களது அ.தி.மு.க.-வைச் சார்ந்தவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் முன்னிலையில் குறிச்சி-குனியமுத்தூர்-ஆழியாறு கூட்டுக் குடிநீர்த் திட்ட அரசு விழா 27-10-2009 அன்று பொள்ளாச்சியில் நடைபெற்றது. மேற்படி விழா தொடர்பாக அமைக்கப்பெற்ற விழாப் பந்தல், இருக்கை வசதி, இதர பிற பணிகளுக்காக பொதுப் பணித் துறையின்மூலம் தயாரிக்கப்பட்ட மூன்று நகராட்சிகளின் செலவுப் பட்டியல், குறிச்சி நகராட்சிக்கு செலவுப் பட்டியல் 9,22,809 ரூபாய், குனியமுத்தூர் நகராட்சிக்கு 8 இலட்சம் ரூபாய் மற்றும் பொள்ளாச்சி நகராட்சிக்கு 13 இலட்சம் ரூபாய் என்று 30 இலட்சம் ரூபாய். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு.ப. வேலுமணி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. சு.ப. வேலுமணி: ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். குறிச்சி நகராட்சி செலவுப் பட்டியல் தொகை ரூ.9,22,809 பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு என்று இந்த agenda-வில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சாதாரண திட்டத்தைத் தொடங்குவதற்கு, துணை முதலமைச்சர் வருவதற்கு ரூ.30 இலட்சம், இருக்கை வசதி, அமர்வதற்கு பந்தல் செலவு என்று இந்தப் பணத்தை எடுத்துள்ளார்கள். அந்த நகராட்சியில் ரோடு போடுவதற்கும், குடிநீருக்கும் பணமே இல்லையென்று சொல்கிறார்கள். ஆனால், பொது நிதியிலிருந்து இதற்காக 30 இலட்சம் ரூபாயை எடுத்திருக்கிறார்கள். வாரம் ஒருமுறை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் செம்மொழி மாநாட்டுக்கென்று வருகிறார்கள். அப்படியானால் ஒவ்வொரு முறையும் மக்களுடைய வரிப் பணத்தை

எடுப்பார்களா என்பதைக் கண்டிப்பாக விளக்க வேண்டும். இது துணை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? 30 இலட்சம் ரூபாய் இருக்கை வசதிக்கும், பந்தல் அமைப்பதற்கும் எடுத்தது துணை முதலமைச்சருக்குத் தெரியுமா என்பதை பதிலிலே தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு.ப. வேலுமணி, பேசியது போதும், உட்காருங்கள். இவ்வளவு நேரம் பேசியது போதும். பத்து நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. சு.ப. வேலுமணி: கோயம்புத்தூர் மாநகராட்சியிலே, 6 கவுன்சிலர்கள் மீது காவல் துறையினர் பொய் வழக்குப் போட்டு அவர்கள் சென்ட்ரல் ஜெயிலில் இருக்கின்றார்கள். இப்போது பார்த்தீர்களேயானால், சாதாரணமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் எப்படி வேண்டுமானாலும் அவர்கள் மேல் வழக்கு—எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள்மீது எப்படி வேண்டுமானாலும் வழக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரடியில் பொய்யாமொழி,
ஈரோட்டு அய்யா வழி,
இரண்டும் எங்களது இரு விழி
இனமான தமிழகத்தின் முகவரி"

என்று அய்யன் திருவள்ளுவர் அவர்களையும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், அண்ணா! நீ இயற்பெயரில் அகர முதல்வன், அன்னைத் தமிழ்த்தாய் ஈன்ற அரும்புதல்வன் என்று பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களையும், எமது சிந்தையாலும், சொல்லாலும், செயலாலும் தொழுதேற்றி, எங்களுக்கு உருவமும், உள்ளடக்கமும் தந்து உலவவிட்டிருக்கும்

நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களையும் வணங்கி, கருத்தாலும், இரு கரங்களாலும் அவர்களுடைய பாத மலர்களைத் தொட்டு என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

2010-2011 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கைகள். இதன் மீது கடந்த 2 நாட்களாக விவாதம், இந்த அவையிலே நடைபெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. இராஜேந்திரன், திரு. சு.ப. மதியரசன், திரு. அ. ராஜன், அ.இ.அ.தி.மு.க.-வைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.பி. அன்பழகன், திரு. தா. மலரவன், திரு. ஆர். சாமி, திரு. சு.ப. வேலுமணி, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. கோவை தங்கம், திரு. கரி. இராமசாமி, பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், திரு. கி. ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், ம.தி.மு.க. வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் ஆகியோர் பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்து இந்தத் துறைகளுக்குத் தேவையான அறிவுரைகளை, ஆலோசனைகளை, நிறைகளை, அதேநேரத்தில், குறைகளைச் சுட்டிக்காட்டி ஆக்கப்பூர்வமான கருத்துகளையெல்லாம், எடுத்துச்சொல்லி இருக்கக்கூடிய அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் எங்கள் துறையின் சார்பிலே நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

எனது பதிலுரையை இந்த மாமன்றம் கட்டப்பட்டிருக்கும் பின்னணியில் இருந்தே தொடங்கிட விரும்புகிறேன். 'தமிழ் மரபு, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ் மொழி ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும்; தரணி எங்கும் பரவிடவேண்டும்; மங்காமல், மறையாமல் போற்றிப் புகழப்பட வேண்டும்; அந்த மறுமலர்ச்சி தமிழுக்கும், தமிழர்களுக்கும் ஏற்படத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடம் ஏறிட விரும்புகிறது' என்று

1967 ஆம் ஆண்டு விருகம்பாக்கத்திலே நடைபெற்ற மாநாட்டில், அறிஞர் அண்ணா முழக்கமிட்டார். அறிஞர் அண்ணா அவர்களுடைய முழக்கத்திற்கேற்ப நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தின் சிறப்பினை உணர்த்தும் பூம்புகார் கலைக்கூடம், பூலித்தேவர் வாழ்ந்த நெற்கட்டும்செவல் என்னும் புகழ் பெற்ற மண்ணில் புதுப்பிக்கப்பட்டு, பொலிவூட்டப்பட்டு இருக்கக்கூடிய அந்த மாவீரனின் மாளிகை, வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக நெல்லைச் சீமையிலே, நெஞ்சுரம் விளைந்த பாஞ்சாலங்குறிச்சியிலே எழுப்பப்பட்ட கோட்டை, வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டிற்கு வரலாற்றுப் புகழ் சேர்க்கும் வள்ளுவர் கோட்டம், சூழும் தென்கடலாடும் குமரியில் குவலய அதிசயங்களில் ஒன்றாக *133* அடி உயரமுள்ள அய்யன் திருவள்ளுவரின் அழகிய சிலை, சென்னையிலே அறிவியல் வளர்ச்சியின் அற்புதச் சின்னமாக விளங்கிடும் Tidel தொழில் நுட்பப் பூங்கா. அந்த வரிசையிலேதான் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய புதிய வரலாற்றின் பொன்னேடுதான் இந்தச் சட்டப் பேரவை (மேசையைத் தட்டும் ஒலி) தலைமைச் செயலக வளாகமாகும்.

பிற்பகல் *1-05*

ஒவ்வொரு கல்லிலும் கலைஞரின் கனவுகள், ஒவ்வொரு மணலிலும் கலைஞரின் உணர்வுகள், ஒவ்வொரு படிகளிலும் கலைஞரின் வியர்வைகள். ஒவ்வொரு அறைகளிலும் கலைஞரின் பார்வைகள். ஒவ்வொரு தூண்களிலும் கலைஞர் மூச்சு வீசும். ஆயிரம் ஆண்டு கடந்தும் கலைஞர் புகழ் பேசும். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லணை கரிகாலனுக்கு அன்று. சட்டசபை கலைஞருக்கு இன்று. (மேசையைத் தட்டும் ஒலி) தொல்காப்பியர் எழுத மறந்த கலைஞர் இலக்கணம் இது. இளங்கோவடிகள் இயற்ற மறந்த கலைப்பதிகாரம் இது. ஏழை கண்ணீர் துடைக்கும் தாயின் முந்தானை இது. தாகம் போக்க அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தல் இது. அனைவரும் விரும்பி வரக்கூடிய ஜனநாயகப் பூங்கா இது. (மேசையைத் தட்டும் ஒலி) என்று அருமை நண்பர் இளம்கவிஞர் ஈரோடு இறைவன் அவர்கள் எழுதிய கவிதை வரிகள்தான் இவை. ஆம். தமிழ் கூறும் நல்லுலகின் பெருமையைத் தரணிக்கு உணர்த்தக்கூடிய தஞ்சைப் பெரிய கோயிலை ஆயிரம்

ஆண்டுகளுக்கு முன்னால் அமைத்துத் தந்தான் மாமன்னன் இராஜ ராஜன். இன்று மக்களாட்சியின் மகத்தான சின்னமாகத் திகழக்கூடிய இந்தப் புதிய சட்டமன்ற வளாகத்தை அமைத்துத் தந்திருக்கிறார் நமது தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாமன்னன் இராஜ ராஜன் தனது ஆட்சியினுடைய 19-வது ஆண்டில் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டத் தொடங்கி 6 ஆண்டுகளில் கட்டி முடித்தான். தான் முதல்வராகப் பதவி வகிக்கக்கூடிய இந்த 19 வது ஆண்டில் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தச் சட்டமன்றத் தலைமைச் செயலக வளாகத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சை பெரிய கோவிலின் உயரம் 200 அடி. இந்த மக்களாட்சி மாமன்ற வளாகத்தின் உயரமும் 200 அடி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தலைமைச் செயலக வளாகத்தைப் பற்றி அவையிலே பலர் பாராட்டி உரையாற்றியிருக்கிறீர்கள். இந்த அவையிலே மட்டுமல்ல; வெளியிலே இருக்கக்கூடிய ஆன்றோர்கள், சான்றோர்கள் தொடர்ந்து புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக 'The New Indian Express' என்கிற ஆங்கில நாளேடு 12-4-2010 அன்று கட்டுரை ஒன்றைத் தீட்டியிருக்கிறது. ஓய்வு பெற்ற I.A.S. அதிகாரி, திரு. எம்.ஜி. தேவசகாயம் எழுதிய கட்டுரை அது. அதிலே ஒரு இடத்திலே அவர் குறிப்பிட்டுக் காட்டுகிறார். "This magnificient edifice has been showcased as the triumph of democratic spirit by placing people first and Government after." அதாவது இந்த பிரமாண்டமான வளாகம் மக்களாட்சியின் வெற்றியைப் பறைசாற்றுவதாகவும், ஜனநாயகத்தில் அரசு நிருவாகத்தை விட மக்களை முன்னிலைப்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது என்று மனம் திறந்து அவர் பாராட்டியிருக்கிறார்.

2006 ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், பொதுத் தேர்தலைச் சந்தித்தோம். அப்படிப்பட்ட பொதுத் தேர்தலைச் சந்தித்தபோது, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கப் போகிறோம் என்று உறுதிமொழிகளாக, வாக்குறுதிகளாக தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக, அரசியல் அறிஞர்கள், மேதைகள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், சமூக சேவை அமைப்பைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள், கவிஞர்கள், வணிகர்கள்,

விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், உள்ளாட்சி மன்றங்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இடம்பெறக்கூடிய வகையிலே தமிழக சட்ட மேலவை உருவாக்கப்படும் என்ற வாக்குறுதி. ஆக அந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையிலேதான் புதிய வளாகத்தில் அமைந்திருக்கக்கூடிய இந்த மாமன்றத்தில் முதல் முக்கியத்துவம் வாய்ந்திருக்கக்கூடிய ஒரு சிறப்பான தீர்மானமாக மீண்டும் தமிழக சட்ட மேலவை உருவாக்கப்பட வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் முன்மொழிய, இங்கு அமர்ந்திருக்கக்கூடிய கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் அதுபற்றி தங்களுடைய கருத்துகளை எடுத்து வைக்க, நிறைவாக வாக்கெடுப்பின்மூலம் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பது நாம் அறிந்திருக்கக்கூடிய ஓர் உண்மையாகும். ஆக, இப்படிப்பட்ட இந்தச் சிறப்பிற்குரிய வளாகத்திலே முதன்முறையாக இந்தத் துறையின் சார்பில், இந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்று 5-வது முறையாக மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திற்குப் பதிலளிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

பிற்பகல் 1-10

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், 11 இடைத் தேர்தல்களைச் சந்தித்திருக்கிறோம். இதுவரையில், தமிழக வரலாற்றிலே இல்லாத அளவிற்கு 11 இடைத் தேர்தல்களைச் சந்தித்த வரலாற்றையும் நாம் பெற்றிருக்கிறோம். சந்தித்தத் இடைத் தேர்தல்களில் நம்முடைய அணி மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து பெற்று வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆக இந்த வெற்றி இந்த ஆட்சியின்மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கை என்று சொல்வதைவிட, அதையும் தாண்டி பெருமையோடு, பூரிப்போடு சொல்லவேண்டுமென்று சொன்னால், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கைதான் இந்த மாபெரும் வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அரசினுடைய சாதனைகளுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அங்கீகாரம் மட்டுமல்ல; இந்தச் சாதனைகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்று மக்கள் அளித்திருக்கக்கூடிய ஊக்கமும், உற்சாகமும் என்பதை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் உணர்ந்து, புரிந்து அதற்கேற்ற வகையிலே இந்த ஆட்சியை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 4 ஆண்டுகளில், இந்தத் துறைகளின் சார்பில் அரசினுடைய திட்டங்களைச் செயல்படுத்தி, ஊரக நகர்ப்புறப் பகுதிகளில் வளர்ச்சியையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்குவதிலே ஒரு சிறப்பான முன்னேற்றத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலே மாபெரும் வெற்றியையும் தொடர்ந்து பெற்று வருகிறோம் என்கிற அந்த மன நிறைவோடுதான் நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தலை நடத்தினோம். உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தலை நடத்தியதற்குப் பிறகு அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய அதிகாரங்களை அதற்குரிய பொறுப்புகளை பரவலாக்கி வழங்கிட வேண்டுமென்ற ஒரு தூய உள்ளத்தோடு சில குழுக்கள் அமையப் பெற்றன. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள். இந்த அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்களையெல்லாம் பல கட்டங்களில் அழைத்து, அவர்களோடு கலந்துரையாடல் நடத்தி, அவர்களுடைய கருத்துகளையும் கேட்டு, குழுக்களுடைய பரிந்துரைகளையும் ஏற்றுக்கொண்டு, அதிகாரப் பரவலாக்கத்தை எந்த அளவுக்கு நிறைவேற்றித் தந்திருக்கிறோம் என்பதை இங்கிருக்கக்கூடிய அனைவரும் நன்றாக உணர்ந்திருப்பீர்கள்.

அதைப்போல, உள்ளாட்சி அமைப்புகள் சிறப்போடு செயல்படுவதற்கு ஏதுவாக நிதிப் பகிர்வையும் நாம் தொடர்ந்து உயர்த்தி வருகிறோம். மாநிலத்தினுடைய நேரடி வரி வருவாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிப் பகிர்வு 8 சதவிகிதமாக இருந்தது. 2007-2008 ஆம் ஆண்டில் 9 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டில் அதை 9.5 சதவிகிதமாக உயர்த்தினோம். இந்த நிதியாண்டில், 2010-2011 ஆம் ஆண்டில், 10 சதவிகிதமாக உயர்த்தி வழங்க இருக்கிறோம். அதாவது, 2006-2007 ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி 2,112 கோடி ரூபாய், அதாவது 8 சதவிகிதம், 2007-2008 ஆம் ஆண்டில் 2,734 கோடி ரூபாய், அதாவது 9 சதவிகிதம். 2008-2009 ஆம் ஆண்டில் 2,959 கோடியாக அது உயர்த்தப்பட்டது, 9 சதவிகிதமாக. 2009-2010 ஆம் ஆண்டில் 3,316 கோடி ரூபாய் - 9.5 சதவிகிதமாக. நடப்பு நிதியாண்டில், 2010-2011-ல், 4,030 கோடி ரூபாயாக, 10 சதவிகிதமாக உயர்த்தி வழங்க இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; இந்த நிதிப் பங்கீட்டுடன் நேரடியாக மாற்றப்படக்கூடிய வருவாய் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக நிதியுதவி செய்யக்கூடிய வகையிலே, மொத்தம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 7,701 கோடி ரூபாய் இந்த ஆண்டு வழங்கப்படுகிறது. இதுதவிர, தொடக்கக் கல்வி, குடிநீர் வழங்கல், பொது சுகாதாரம் இதுபோன்ற அடிப்படை வசதிப் பணிகளுக்காக உள்ளாட்சியினுடைய சார்பிலே அரசு மேற்கொள்ளக்கூடிய செலவினங்களையும் சேர்த்துப் பார்த்தால் இந்த அமைப்புகளுக்கென அரசு மேற்கொள்ளக்கூடிய செலவினம் எவ்வளவென்று கேட்டால், மாநில அரசினுடைய சொந்த வருவாயில் 33 சதவிகிதம் ஆகும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

இங்கு சட்டமன்ற உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக, பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் வற்புறுத்திச் சுட்டிக்காட்டினீர்கள், நிதிப் பகிர்வைப் பற்றி; அதிகாரப் பகிர்வைப் பற்றியெல்லாம். அதற்கு நான் ஒரு விளக்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மாநிலங்கள் எவ்வாறு நிதிப் பகிர்வு, அதிகாரப் பகிர்வு, அலுவலகப் பகிர்வு, Fund, Functions, Functionaries இது எந்த நிலையிலே மாநிலங்கள் வழங்குகிறது என்பதைப் பற்றி, ஒரு அமைப்பு, IIPA, Indian Institute of Public Administration என்ற சொல்லக்கூடிய ஒரு அமைப்பு அது ஒரு ஆய்வுப் பணியை நடத்தி, மதிப்பீடு செய்து மாநிலங்களையெல்லாம் வரிசைப்படுத்திக் காட்டுகிறது. அந்த வகையில் கடந்த 4 ஆண்டுகளில் நம்முடைய தமிழ்நாடு, அகில இந்திய அளவிலே ஒப்பிட்டுப் பார்த்தால் 2006-2007 ஆம் ஆண்டு 4-வது இடம், 2007-2008 ஆம் ஆண்டு முதலிடம். 2008-2009 ஆம் ஆண்டு 3-வது இடம். 2009-2010 ஆம் ஆண்டிலே இரண்டாவது இடத்தில் இருக்கிறோம் என்பதை நான் இந்த அவையிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ், நம்முடைய சகோதரர் திரு. வேல்முருகன் போன்ற நண்பர்கள் எல்லாம், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசுகிறபோது டெல்லியிலே, நேற்று முன்தினம் 24 ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் அதற்கான

விருதை நம்முடைய தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள்; இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். என்னுடைய சார்பிலே நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் அவர்கள் சென்று அதைப் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வைப் பொறுத்தவரையிலே 47 சதவிகிதமாக இருந்த கிராம ஊராட்சியினுடைய பங்கு, 60 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து பெறக்கூடிய 12-வது நிதிக் குழு மானியம் முழுமையாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஊராட்சிக்கும் 3 இலட்சம் ரூபாய் வீதமும் எஞ்சியுள்ள மாநில நிதிக் குழு மானிய நிதியிலிருந்து மக்கள் தொகையின் அடிப்படையிலும் நிதி வழங்கப்படுகிறது. 53 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பொறியியல் பிரிவுகளுக்கும் மொத்தம் 1,213 புதிய வாகனங்கள் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வாங்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன.

இங்கே மின்சாரத்தைப் பற்றியெல்லாம், ஊராட்சியில் இருக்கக்கூடிய மின்சாரப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம்கூட உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். உண்மைதான்; கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் ஓராண்டுச் செலவில், ஏறத்தாழ 70 சதவிகிதம் மின்சாரக் கட்டணத்திற்கே செலவு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை, கடந்த காலங்களில் இருந்து வந்தது உண்மைதான். ஆனால், இந்த நிலையிலே இருக்கக்கூடிய கிராம ஊராட்சிகளுக்கும் மின் வாரியத்திற்கும் இருக்கக்கூடிய பிரச்சினைகளைச் சரிசெய்ய அவர்களுடைய பல பிரச்சினைகளை இந்த 4 ஆண்டுக் காலத்தில் நம்முடைய அரசு தீர்த்து வைத்திருக்கிறது. மின் கட்டணம், அபராத வரி, குறைக்கப்பட்டிருக்கிறது. நிலுவை அபராத வரியைப் பொறுத்தவரையில் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அனைத்து இணைப்புகளுக்கும் இப்போது மீட்டர் பொருத்தப்பட்டிருக்கிறது. பிற துறைகள் பயன்படுத்தக்கூடிய ஊராட்சிக் கட்டடங்களுக்கு அத்துறைகளே மின் இணைப்பு பெற்று கட்டணம் செலுத்த ஆவன செய்யப்பட்டிருக்கிறது. இதனால், ஊராட்சியினுடைய செலவினங்களைப் பொறுத்தவரையில் பெருமளவில் அவர்களுக்கு அந்தச் சுமை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், சிறப்பாகச் செயல்படக்கூடிய கிராம ஊராட்சிகளை ஊக்கப்படுத்தக்கூடிய வகையிலே நாம் ஆட்சிக்கு வந்து இந்த 4 ஆண்டுக் காலங்களில் 60 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருதை வழங்கிக்கொண்டிருக்கிறோம். தலா 5 இலட்ச ரூபாய் நிதியும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய ஊராட்சித் தலைவர்களுக்குப் பாராட்டிதழும், சான்றிதழும் நம்முடைய மாநில அரசின் சார்பில் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வோராண்டும் நவம்பர் முதல் நாள் 2007 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து உள்ளாட்சியினுடைய தின விழாவாக நாம் தொடர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதேபோல, ஊரக உள்ளாட்சிகள் அவற்றினுடைய பொது நிதியிலிருந்து மேற்கொள்ளக்கூடிய வளர்ச்சிப் பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்கக்கூடிய அதிகார வரம்பைக்கூட உயர்த்தியிருக்கிறோம். அதாவது, கிராம ஊராட்சியைப் பொறுத்து, ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாகவும், ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்து, ரூபாய் 5 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாகவும், மாவட்ட ஊராட்சியைப் பொறுத்து, ரூபாய் 10 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கியிருக்கிறோம்.

பிற்பகல் 1-20

மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்விலேகூட, 47 சதவீதமாக இருந்த கிராம ஊராட்சியினுடைய பங்குகளைக்கூட 60 சதவீதமாக நாம் உயர்த்தியிருக்கிறோம் என்பதையும் நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆக, இந்த நிலைதான் அதிகாரப் பகிர்வைப் பொறுத்தவரையில், அதேபோல நிதிப் பகிர்வைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு எந்த அளவிற்கு இந்தத் துறையின்மூலமாகத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இந்த விளக்கங்களையெல்லாம் நான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன்.

அடுத்து, மத்திய மாநில அரசினுடைய திட்டங்களைப் பொறுத்தவரையிலே, நம்முடைய துறை எந்த அளவிற்கு இதிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு அந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் மற்றும் பல உறுப்பினர்களெல்லாம் அதைப் பெருமையோடு சில

செய்திகளை ஆதாரங்களோடு குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதிலே நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும், சில சாதனைகளை விளக்கிட விரும்புகிறேன்.

முதலில் நான் குறிப்பிட விரும்புவது, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இது மாநில அரசினுடைய முழுமையான நிதியைப் பெற்று, நிறைவேற்றப்படக்கூடிய ஒரு மாபெரும் திட்டம். இன்னுங்கூடப் பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், வரலாற்றிலே பதிவு செய்யப்படக்கூடிய வகையிலே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய வரலாற்றிலே ஓர் உன்னத திட்டம் எந்தத் திட்டம் என்று கேட்டால், இந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்தான் என்பதைப் பெருமையோடு நம்மால் சொல்லிட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) 2006 ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்தவுடன், இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். தமிழகத்திலே 12,620 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. அந்த 12,620 கிராம ஊராட்சிகளில் இருக்கக்கூடிய மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆக, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஐந்து ஆண்டுக் காலத்திலே முழுமைபெறக்கூடிய வகையிலே நிறைவேற்ற வேண்டும். அதற்காக இந்த 5 ஆண்டுக் காலத்திற்காக, 2,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யக்கூடிய நிலையிலே ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கி, ஆக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் மட்டுமல்ல; அரசு சார்ந்திருக்கக்கூடிய பல்வேறு துறைகள், அந்தத் துறைகளையும் சேர்த்துப் பார்த்தால் சராசரியாக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தது ஒரு கோடி ரூபாய் வரக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, இதுவரையில் இந்தத் திட்டத்தில் இந்த நான்கு ஆண்டுக் காலத்திலே 10,104 கிராம ஊராட்சிகளில் இந்தத் திட்டம் முற்றுப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 2,041 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின்மூலமாக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், கிராமச் சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள், நூலகங்கள், விளையாட்டுச் சாதனங்கள், மயான மேம்பாட்டுப் பணிகள், உள்நாட்டு மீன்வள அபிவிருத்தி, கிராம சந்தை மேம்பாடு, நீர் ஆதார மேம்பாட்டுப் பணிகள், இதுபோன்ற பல பணிகளை, இன்னும் புள்ளிவிவரத்தோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால்

1,37,125 வளர்ச்சிப் பணிகள் இதுவரையிலும் இந்தத் திட்டத்தின்மூலமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திலே ஒரு மிகப் பெரிய சிறப்பு என்னவென்று கேட்டால், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் நூல் நிலையங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. 2006-2007 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைத் தொடங்கியவுடன் அந்த நூல் நிலையங்களை உருவாக்குகின்ற பணியைத் தொடங்கினோம். முதலில் 2,534 கிராம ஊராட்சிகளில் ஒரு நூலகத்திற்கு 897 வகையான புத்தகங்கள் என்ற அளவில் 22,72,998 புத்தகங்கள், அதாவது 11 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவிலே வழங்கப்பட்டன. ஒவ்வோராண்டும் இப்படித் தொடர்ந்து வழங்கி, மொத்தமாகக் கணக்கெடுத்துப் பார்த்தால், இந்த நான்கு ஆண்டுக்காலத்தில் 10,104 கிராம ஊராட்சிகளில் (மேசையைத் தட்டும் ஒலி) 10,104 நூலகங்களுக்கு 48 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் 96,46,768 புத்தகங்கள், அதாவது ஏறக்குறைய ஒரு கோடி புத்தகங்கள் இன்றைக்கு கிராம ஊராட்சிகளில் இருக்கக்கூடிய, (மேசையைத் தட்டும் ஒலி) அமைந்திருக்கக்கூடிய நூல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், இந்த ஆண்டிற்குள் இந்தத் திட்டம் முடிவடையவிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக தமிழகத்திலே நூல் நிலையங்களே இல்லாத கிராம ஊராட்சிகளே இல்லை என்ற ஒரு நிலையை (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றிக்காட்டிய ஒரு பெருமை—இந்தியாவிலே நம்முடைய மாநிலம்தான் முதலிடத்திற்கு வரப்போகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அடுத்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இந்தத் திட்டம் மத்திய அரசினுடைய துணையோடு நிறைவேற்றப்படக்கூடிய திட்டம். இங்கேகூட பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள். இந்தியாவிலேயே ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய தமிழ்நாடு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய சாதனையைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பது உண்மை. அதற்கு ஒரு உதாரணத்தைக்கூட நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே நம்முடைய சகோதரர்

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறியிருந்தாலும், நானும் அதை வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் உச்ச நீதிமன்றத்திலே தலைமை நீதிபதியாக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. K.G. பாலகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு நீதிபதி திரு. தீபக் வர்மா அவர்கள், மாண்புமிகு நீதிபதி திரு. சவான் அவர்கள், இதுசம்பந்தமான ஒரு வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, அப்போது சில கருத்துகளை, அவர்களுடைய உணர்வுகளையெல்லாம் வெளிப்படுத்தி அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். என்னவென்று கேட்டால், "Tamil Nadu and Meghalaya show better results in implementing Mahatma Gandhi National Rural Employment Guarantee Act. *(மேசையைத் தட்டும் ஒலி)* The other States could also frame broad guidelines based on the model of these two states" என்று பெருமையோடு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதாவது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை, தமிழ்நாடு மற்றும் மேகாலயா மாநிலங்கள் சிறப்பான வகையில் செயல்படுத்தி வருகின்றன. பிற மாநிலங்களும், இந்த இரு மாநிலங்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்த வகுத்துள்ள நெறிமுறைகளைப் பின்பற்றலாம் என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; 25-4-2010 அன்று நேற்றையதினம் வெளிவந்திருக்கக்கூடிய "இந்து" பத்திரிக்கையிலே ஒரு நீண்ட கட்டுரை. இந்தத் திட்டத்தினுடைய பெருமைகளை, சிறப்புகளைப் பற்றியெல்லாம் ஒரு பெரிய கட்டுரையை அதிலே எழுதியிருக்கிறார்கள். தமிழ்நாடு இந்தத் திட்டத்தை எந்த அளவிற்கு சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்று அதிலே பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதிலே ஒரு செய்தி. Tamil Nadu's success in implementing the NREGA, shows its commitment to social welfare, and the way ahead for other States என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதாவது இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது சமூக நலத்தில் தமிழ்நாடு அரசுக்கு உள்ள ஈடுபாட்டைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது என்றும், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டுவதாக இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இப்படிப் பல செய்திகள். அதிலே கடைசியாக ஒரு இடத்திலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள்

அந்தக் கட்டுரையிலே "there is a lot to learn from Tamil Nadu" இதுதான் முக்கியம். அதாவது தமிழ்நாட்டிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம் என்று "இந்து" பத்திரிகையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த 4 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின்கீழ் 3,958 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு அதிலே 3,350 கோடி ரூபாய் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இதிலே மாநில அரசினுடைய பங்குத் தொகை எவ்வளவு என்று கேட்டால், 498 கோடியே 62 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்மூலமாக 41 கோடியே 2 இலட்சம் மனித சக்தி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, 41,416 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. வேலைவாய்ப்பு பெற்றோரில் 82 சதவிகிதம் மகளிர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 59 சதவிகிதம் பேர் இதிலே பயன்பெற்று வருகிறார்கள் என்று புள்ளிவிவரம் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னுங்கூட பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், நேற்றைக்கு வெளிவந்த 'இந்து' பத்திரிகையிலே செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்; இந்திய மாநிலம் முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால், மகளிர் இன்றைக்கு 82 சதவிகிதம் பேர் பங்கேற்கக்கூடிய வகையில் இத்திட்டம் நடைபெறுகிறது என்று சொன்னால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகமான அளவிற்குப் பெண்கள் பங்கேற்கக்கூடிய நிலையிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருப்பதற்காகத் தொடர்ந்து நாம் விருதுகளைப் பெற்று வந்து கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே 2007-2008 ஆம் ஆண்டு தேசிய அளவிலே கடந்த முறை 22 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டன. அந்த 22 மாவட்டங்களில் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 மாவட்டங்கள் தேர்வாகி கடலூர், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய 3 மாவட்டங்கள் அந்த விருதுகளைப் பெற்றிருக்கின்றன.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: அதற்கு அடுத்து 2008-2009 ஆம் ஆண்டு தேசிய அளவிலே 26 மாவட்டங்கள் தேர்வு

செய்யப்பட்டு, அதிலே தமிழகத்திற்கு இரண்டு மாவட்டங்கள் பரிசு பெறக்கூடிய சூழ்நிலையில் நாகப்பட்டினம், விழுப்புரம் என்ற இந்த இரண்டு மாவட்டங்கள் இந்தச் சிறப்பான சாதனையைப் பெற்றிருக்கின்றன. ஆக, இப்படிப்பட்ட சாதனையைப் பெறுவதற்கு என்ன காரணம் என்று கேட்டால், அதற்கும் ஒரு செய்தியை, ஒரு விளக்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய தனியான ஊரக விலைப் பட்டியல், வேலைபெறும் குடும்பங்களினுடைய பதிவு முறை, கண்காணிப்பு அமைப்புகள், வாகன எரிபொருள் ஒதுக்கீடு, பணியாளர்கள் நியமனம், ஒப்பந்ததாரர்கள் பயன்பாடு தடை, ஊதியம் வழங்கும் குழு, சமூக தணிக்கைக் குழுக்கள் போன்ற நம்முடைய முன்னோடி நடவடிக்கைள்தான் இதற்குக் காரணமாக அமைந்திருககின்றன. நான் இந்த நேரத்தில் இன்னொரு செய்தியைக்கூட குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், இந்தத் திட்டத்தைப் பற்றி பேசுகிறபோது, 101 வயதுடைய ஒரு மூதாட்டியைப் பற்றிப் பெருமையோடு பத்திரிகையிலே வந்த செய்தியைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் இங்கே சொன்னார்; உண்மைதான். அறிஞர் அண்ணா அடிக்கடி சொல்லுவார், அரசினுடைய திட்டங்கள் குப்பனுக்கும், சுப்பனுக்கும் போய்ச் சேரவேண்டும் என்று. அதேபோல் கலைஞர் ஆட்சியிலே குப்பனுக்கும், சுப்பனுக்கும் மட்டுமல்ல; கருப்பாயிக்கும் இந்தத் திட்டம் போய்ச் சேருகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரத்தைச் சார்ந்த கணக்கன்குளம் என்கிற ஒரு சின்னஞ்சிறு கிராமம். அந்தக் கிராமத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய 101 வயதுடைய ஒரு மூதாட்டி. அவருடைய பெயர் திருமதி கருப்பாயி. அவருக்கு ஏழு குழந்தைகள். 15 பேரக் குழந்தைகள் உண்டு அவருக்கு. அவர் சொல்வதைப்போல, முதியோர் உதவித் தொகையில் 400 ரூபாயை ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அந்த மூதாட்டி, இந்தத் திட்டத்திலே தன்னையும் இணைத்துக்கொண்டு இந்தப் பணியை அவர்

நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். பத்திரிகைச் செய்தியாளர்கள்கூட அவரைப் போய் சந்தித்து, "101 வயதை அடைந்திருக்கக்கூடிய நீங்கள், இந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறீர்களே, 400 ரூபாய் ஏற்கெனவே உங்களுக்கு முதியோர் உதவித் தொகை வந்து கொண்டிருக்கிறது; இந்தப் பணியை இந்த வயதிலே ஆற்றிடவேண்டுமா?" என்று கேட்டிருக்கிறார்கள். இங்கே சகோதரர் திரு. அரி அவர்கள்கூட பேசுகிறபோது 101 வயதுடைய ஒரு மூதாட்டி எப்படி பணியாற்ற முடியும் என்று கேட்டார். நான் அவருக்கும் சேர்த்துப் பதில் சொல்ல விரும்புகிறேன். அப்பொழுது அந்த மூதாட்டி சொல்லியிருக்கிறார் "உழைத்துச் சாப்பிட்டால்தான் உடம்பில் ஒட்டும், அதனால்தான் நான் உழைக்க வந்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார், இது பத்திரிகையிலே வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த சுறுசுறுப்புப் பாட்டிக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம், அதை திரு. அரி அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். 101 வயதுடைய மூதாட்டியை இந்தத் திட்டம் எந்த அளவிற்குக் கவர்ந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம். ஐ.ஏ.ஒய். என்கிற பெயரில் நிறைவேற்றப்படக்கூடிய ஒரு சிறப்பான திட்டம். ஏற்கெனவே, நம்முடைய தமிழ்நாட்டிலேதான் முதன்முதலில் 1973 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கென, தொகுப்பு வீடுகளைக் கட்டக்கூடிய ஒரு சிறப்பான திட்டத்தை நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்த நேரத்திலே 1973 ஆம் ஆண்டு அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போது 1975 ஆம் ஆண்டு செங்கற்பட்டுக்கு அருகில் இருக்கக்கூடிய காட்டுப்பாக்கம் என்கிற ஒரு பகுதியில் இந்தத் தொகுப்பு வீடுகளின் திறப்பு விழா நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதற்காக பெருமதிப்பிற்குரிய மாபெரும் தலைவர், திரு. பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் அந்த விழாவிற்கு வந்தார்கள். அந்த விழாவிலே கலந்துகொண்டு அவர் உரையாற்றுகிறபோது ஒரு செய்தியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்று நாம் இந்தியாவில் கூறிவருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு

உண்மையான விசுவாசத்துடன் முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று குறிப்பிட்டுச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அப்படிப்பட்ட ஒரு திட்டம்தான் இந்தத் திட்டம். அது தொகுப்பு வீடுகளாக அன்றைக்கு நம்முடைய அரசின் சார்பில் நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசு ஒரு புதிய அறிவிப்பாக, ஒரு திட்டமாக நாடு முழுவதும் நிறைவேற்றப்படக்கூடிய வகையிலே இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் என்கிற பெயரிலே இந்தத் திட்டத்தை உருவாக்கி, அந்த வகையிலே 2008-2009 ஆம் ஆண்டு முதல் ஒரு வீட்டிற்கான நிதியுதவி 35,000 ரூபாய் என்று அதற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்தது. மாநில அரசினுடைய பங்குத் தொகை 8,750 ரூபாய். இதுதவிர கான்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதல் நிதி அளிக்கிறது. நடப்பு ஆண்டில் 2010-2011 ஆம் ஆண்டில் மத்திய அரசு இதை 46,000 ரூபாயாக நிர்ணயித்து இருக்கிறது. என்றாலும், 60,000 ரூபாய் மதிப்பீட்டிலே வீடுகளைக் கட்டுவதற்கு நாம் முடிவு செய்திருக்கிறோம். மத்திய அரசு நிதியோடு கூடுதலான நிதியை மாநில அரசு வழங்கி கான்கிரீட் கூரையோடுகூடிய நிலையான வீட்டை வழங்கக்கூடிய ஒரு திட்டம் நடக்கிறது என்று சொன்னால், இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில்தான் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

அதே நேரத்தில் சமத்துவபுரம், தந்தை பெரியார் பெயரில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய சமத்துவபுரம் திட்டம். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவருடைய வரிகள் இன்றைக்கு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினுடைய மூல மந்திரமாக அமைந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

ஈரோட்டுச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் கண்ட கனவை நிறைவேற்றக்கூடிய வகையிலே, ஒரு வீட்டில் ஒரு குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தை என்ன குழந்தை என்று பலர் கேட்கிறபொழுது, ஒன்று ஆண் குழந்தை என்று சொல்லுகிறோம்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இல்லையென்றால் பெண் குழந்தை என்று சொல்லுகிறோம். ஆனால், அதே குழந்தை பெரிதாக வளர்ந்து வருகிறபோது, அப்போது அடையாளம் காட்டுகிறபோது சாதியின் பெயரைச் சொல்லி, முதலியார் என்றோ, செட்டியார் என்றோ, நாயுடு என்றோ, வன்னியர் என்றோ அல்லது பிராமணர் என்றோ சொல்லக்கூடிய, அடையாளம் காட்டக்கூடிய ஒரு இழிதகுநிலை நாட்டில் இருக்கிறது.

ஆக, இந்த நிலை மாற வேண்டும் என்பதற்காகத்தான், தந்தை பெரியார் அன்றைக்குப் போராடினார். அதை மனதிலே வைத்துக்கொண்டுதான், நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அனைவரும் ஒற்றுமை உணர்வோடு, ஒருமித்த கருத்தோடு, சாதி மத பேதம் இன்றி சமத்துவத்தோடு வாழவேண்டும் என்பதற்காக, முதன்முதலில் இந்தத் திட்டம், 1997 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்த அந்தக் காலக்கட்டத்தில், தமிழகத்திலே 145 இடங்களில் சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட்டன. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள்; கிடப்பிலே போட்டார்கள்.

அதற்குப் பிறகு, 2006 ஆம் ஆண்டு மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவேன் என்று சொல்லி-தந்தை பெரியார் 95 ஆண்டுக் காலம் வாழ்ந்திருக்கிறார் என்பதை மனதிலே வைத்துக் கொண்டு, அவர் வாழ்ந்த அந்த ஆண்டை அடிப்படையாக வைத்து, மீண்டும் தமிழ்நாட்டில் 95 இடங்களில் சமத்துவபுரங்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே முதற்கட்டமாக 2008-2009 ஆம் ஆண்டு 29 சமத்துவபுரங்கள் கட்டப்படும் என்று அறிவித்தார். நான் பெருமையோடு தெரிவிக்கிறேன், அறிவித்து ஒரே ஆண்டிற்குள் 29 சமத்துவபுரங்களைக் கட்டி, அத்தனையையும் திறந்து வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் பயனாளிகளிடத்திலே அவை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், இந்த 2009-2010 ஆம் ஆண்டு மேலும் 30 சமத்துவபுரங்கள் கட்டுகிற அந்தப் பணி ஆங்காங்கே தொடங்கியிருக்கிறது. விரைவிலே அவையும் திறந்து வைக்கப்படும்.

அதற்கடுத்து, 2010-2011 ஆம் ஆண்டு 36 சமத்துவபுரங்கள், ஆக 95 சமத்துவபுரங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன. 95 சமத்துவபுரங்கள் உருவாக்கப்படுவது மட்டுமல்ல; உருவாக்கப்படக்கூடிய சமத்துவபுரங்கள் அனைத்திலும் தந்தை பெரியாருடைய சிலை அமைக்கப்படும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி புதிதாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய 29 சமத்துவபுரங்களில் அது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுப் பயனாளிகளிடம் இருக்கக்கூடிய 145 சமத்துவபுரங்களில், 122 சமத்துவபுரங்களில், தந்தை பெரியார் சிலை அமைந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிச் சீரமைப்புத் திட்டம். இந்தத் திட்டத்தின்மூலமாக இதுவரை 266 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 19,041 பள்ளிக் கட்டடங்களைச் சீரமைக்கின்ற பணியை நாம் முடித்திருக்கிறோம். பள்ளிக் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையை அறிமுகப்படுத்தி, அதற்கு பதிலளித்து உரையாற்றுகிறபோது, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது அதற்காக நன்றி தெரிவித்தார். நன்றி தெரிவித்து அடுத்து ஒரு கோரிக்கையையும் அவர் எங்களிடத்தில் எடுத்து வைத்தார். மீதம் இருக்கக்கூடிய பள்ளிகளையும் சீரமைத்துத்தர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். சீர் செய்வது எங்கள் துறை, சமச்சீர் கல்வி தருவது அவர்களுடைய துறை (மேசையைத் தட்டும் ஒலி). எனவே இந்த ஆண்டு அவர் எடுத்து வைத்த இந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட இருக்கிறது. விவரம் அறிவிப்பிலே வெளியிடப்பட இருக்கிறது என்பதை நான் முன்கூட்டியே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புவது, இப்படிப் பள்ளிகளை, ஊராட்சி ஒன்றிய அளவில் இருக்கக்கூடிய பள்ளிகளைச் சீரமைக்கின்ற பணி என்பது, இவ்வளவு பெரிய தொகையிலே, இவ்வளவு பணிகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், இதுதான் தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக நடந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இங்கே பதிவு செய்கிறேன்.

அதேபோல், ஊரகக் கட்டமைப்புத் திட்டம். ஊரகப் பகுதிகளில் சிமென்ட் சாலை, தார்ச் சாலை, தெரு விளக்குகள், கட்டடப் பணிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளுக்காக 2008-2009 ஆம்

ஆண்டு முதல், ஊரகக் கட்டமைப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 730 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 73,800 பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் இந்தப் பணி தொடர இருக்கிறது.

பிற்பகல் 1-40

அதேபோல இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு நபார்டு நிதி, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், 12-வது நிதிக் குழு மானியம், உள்கட்டமைப்பு நிதி, இவற்றின்மூலமாக ஊரகப் பகுதிகளில் சாலைகள், இதுவரையில் இல்லாத அளவிற்குப் பெருமளவில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரையில் 3,065 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 22,113 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மகளிர் மேம்பாட்டுத் திட்டம். எப்போதெல்லாம் கலைஞர் ஆட்சியில் இருக்கிறாரோ, அப்போதெல்லாம் மகளிருடைய முன்னேற்றத்திற்காகப் பல்வேறு சலுகைகள், பல திட்டங்கள், சாதனைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சொத்திலே பெண்களுக்குச் சம உரிமை; வேலைவாய்ப்பிலே பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு; ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக பெண்களைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்கிற சட்டம்; கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊக்கத் தொகை, உதவித் தொகை 6,000 ரூபாய் இப்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோலத்தான், ஒரு ஏழையெளிய குடும்பத்திலே பிறந்திருக்கக்கூடிய ஒரு பெண்ணிற்கு திருமணம் என்று சொன்னால், அந்தப் பெண்ணினுடைய திருமணச் செலவிற்காக உதவித் தொகை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் உருவாக்கப்பட்ட திட்டம்தான் திருமண உதவித் திட்டம், இந்தத் திட்டம் இப்போது அல்ல, 1989 ஆம் ஆண்டே அறிமுகப்படுத்தப்பட்டு, அப்போது 5,000 ரூபாய் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள், 1991-இல் ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தத் திட்டத்தை நிறுத்தினார்கள். அதற்குப் பிறகு 1996-இலே நம்முடைய கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்து, அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து 5,000 ரூபாய் அல்ல, 10,000 ரூபாயாக உயர்த்தித் தந்தார். அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள், 2001-லே ஆட்சிக்கு வந்தவர்கள், அந்தத் திட்டத்தை

மறுபடியும் நிறுத்தினார்கள். எப்போதெல்லாம் அவர்கள் ஆட்சிக்கு வருகிறார்களோ அப்போதெல்லாம் திருமண உதவித் திட்டம் நிற்கும். ஆனால் எப்போதெல்லாம் கலைஞர் ஆட்சிக்கு வருகிறாரோ அப்போதெல்லாம் இந்தத் திட்டம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு எடுத்துக்காட்டாக, 2006 ஆம் ஆண்டு தேர்தலைச் சந்தித்த நேரத்திலே கலைஞர் சொன்னார், தேர்தல் உறுதிமொழியாகவே தந்தார். 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் திருமண உதவித் திட்டம் வரும், 10,000 ரூபாய் அல்ல, 15,000 ரூபாயாக உயர்த்தித் தருவேன்' என்று சொன்னார். ஆட்சிக்கு வந்தார், 15,000 ரூபாய் தந்தார். ஆறே மாதங்களில் அதையும் மாற்றி 20,000 ரூபாயாக வழங்கினார். இப்போது 20,000 ரூபாய்கூட அல்ல, 25,000 ரூபாய் இந்த நிதியாண்டிலே வழங்கப்படும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இப்படிப் பெண்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்கள்.

அதுமட்டுமா? உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகித இட ஒதுக்கீடு பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிலை வந்தபோது, அதை முதன்முதலில் நம்முடைய தமிழ்நாடுதான், கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய ஆட்சிதான் நிறைவேற்றித் தந்தது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதேபோலத்தான், இப்போது நாடாளுமன்றத்திலே, சட்டமன்றத்திலே 33 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டும், வழங்கப்பட வேண்டும் என்ற நிலை வந்தபோது, தி.மு.க.வினுடைய குரல் இன்றைக்கு அங்கே ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், இதே தலைமைச் செயலக-சட்டப் பேரவை வளாகத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு வருகை தந்து பெருமை சேர்த்த பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர் மதிப்பிற்குரிய அன்னை சோனியா காந்தி அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்தபோது, இங்கே வாழ்த்திப் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்களே, "நாடாளுமன்ற மேலவையிலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குக் காரணம் யார் என்று கேட்டால், அதற்கு முதல் காரணம் முதல்வர் கலைஞர்தான்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார்களே!

அதுமட்டுமல்ல; இப்போது உள்ளாட்சி மன்றங்களில் 33 சதவிகித ஒதுக்கீடு. இதைக்கூட உயர்த்தி 50 சதவிகிதமாக வழங்கிட வேண்டுமென்று மத்திய அரசு இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறது. அண்மையிலேகூட, நேற்றைக்கு முன்தினம்கூட, நம்முடைய பிரதமர் அவர்கள் இந்தக் கருத்தை எடுத்து உரையாற்றியிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு கடிதமே வந்திருக்கிறது. "உங்களுடைய கருத்து என்ன? உங்கள் மாநிலத்தினுடைய கருத்து என்ன?" என்று கேட்டபோது, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், எங்களுக்கு உடனே உத்தரவிட்டார்கள். '50 சதவிகிதம் வழங்கப்படுவதை, நாங்கள் மனதார வரவேற்கிறோம் என்று பதில் கடிதம் எழுது' என்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அது எழுதப்பட்டிருக்கிறது. அது இந்த அவைக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக நான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர, வேறல்ல. ஆக இப்படி எத்தனையோ முன்னேற்றங்கள்.

அதற்காகத்தான், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திலே முதன்முதலாக நம்முடைய மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்பட்டது. அப்படித் தொடங்கப்பட்ட நேரத்திலேகூட, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச்சொன்னார்கள். 'ஏதோ கட்சியினுடைய வளர்ச்சிக்காக அல்ல; தேர்தலுக்காக அல்ல; அரசியல் இலாபத்திற்காக அல்ல; பெண்களுடைய முன்னேற்றத்திற்காக, அவர்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ வேண்டும் என்பதற்காக, பெண்கள் அவரவர்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய சூழ்நிலையைப் பெற்றாக வேண்டும் என்பதற்காக இந்த மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்படுகிறது' என்று எடுத்துச் சொல்லி, இது 1989-லே தொடங்கப்பட்டது. அப்படித் தொடங்கிய இந்த மகளிர் சுய உதவிக் குழு, படிப்படியாக வளர்ந்து, ஒரு பேரியக்கமாக, ஒரு மாபெரும் இயக்கமாக வளர்ந்து வந்திருக்கிறது.

பிற்பகல் 1-45

இதுவரையிலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, 2010 மார்ச் வரை 4 இலட்சத்து 30,000 குழுக்கள் அமைந்திருக்கின்றன. 1989 முதல் 2010 வரை, அதாவது இந்த 20 ஆண்டுகளில் 68 இலட்சத்து 32 ஆயிரம் உறுப்பினர்கள் இதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். கடந்த 4 ஆண்டுகளில், அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து, 2006-2010 வரை இந்த நான்கு

ஆண்டுக் காலத்திலே, ஒரு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 22 இலட்சத்து 67 ஆயிரம் உறுப்பினர்கள் இதிலே சேர்ந்திருக்கிறார்கள். நான்கில் ஒரு பங்கு இந்த 4 ஆண்டுகளில் உயர்ந்து வந்திருக்கிறது. இதுதான் முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது சராசரியாக ஒரு நாளைக்கு 105 குழுக்கள் வீதம் தினசரி 1,785 உறுப்பினர்கள் இந்தக் குழுவிலே சேர்ந்து வருகிறார்கள் என்பது மிக மிக முக்கியம். அதிலும் குறிப்பாக, மகளிர் தொழிலாளர்கள் குழுக்களே அமைக்கப்படாத பகுதியில் வாழும் மகளிர், சமூகப் பொருளாதார ரீதியாகப் பிற்பட்ட நிலையில் இருக்கக்கூடியவர்கள் அவர்களையும் இந்தக் குழுக்களில் சேர்க்கிற அந்தச் சிறப்பான முயற்சியிலே மிகப் பெரிய வெற்றியை நாம் பெற்று வருகிறோம் என்று சொன்னால், அது மிகையாகாது. ஆக, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையிலே, வங்கிக் கடனைப் பொறுத்தவரையிலே ஒரு கணக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1989 முதல் 2010 வரை அதாவது, இருபது ஆண்டுக் காலம் அப்போது சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய வங்கியினுடைய கடன் எவ்வளவு என்று கேட்டால் 7,755 கோடி ரூபாய். இருபதாண்டுக் காலத்தில் வழங்கப்பட்டிருக்கக்கூடிய வங்கியினுடைய கடன் 7,755 கோடி ரூபாய், ஆனால் இப்போது 4 ஆண்டுக்காலத்தில் 2006-2010 வரை வங்கியினுடைய கடன் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறதென்று சொன்னால் 6,364 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாளைக்கு சராசரியாக 4 கோடியே 36 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; சுழல் நிதி மானியத்தைப் பொறுத்தவரையில் கணக்கிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 2001-2006 வரை சுழல் நிதி மானியத்தைப் பொறுத்தவரையில் வழங்கப்பட்ட மானியம், 76 கோடி ரூபாய், அதாவது 5 வருடத்தில் 76 கோடி ரூபாய், இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2006-2010 நான்காண்டுக் காலத்தில் 371 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இன்றைக்கு அந்தப் பெருமையை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது; அதற்குத் துணை நிற்கிறது.

ஆக், மகளிரைப் பொறுத்தவரை எந்த அளவுக்கு விழிப்புணர்வைப் பெற்று வருகிறார்கள் என்பதற்கு எத்தனையோ உதாரணங்களை நான் எடுத்துக்காட்ட முடியும். அதிலே குறிப்பாக, கடந்த *22-04-2010* அன்று "Deccan Chronicle" என்கிற ஆங்கில நாளேட்டினர் இந்த மகளிர் சுய உதவிக் குழுவில் இடம் பெற்றிருக்கக்கூடிய சில சகோதரிகளைப் போய்ச் சந்தித்து, அந்தப் பத்திரிகையின் சார்பிலே பேட்டி எடுத்திருக்கிறார்கள். அதிலே ஒரு சகோதரி குறிப்பிட்டுக் காட்டுகிறார், சென்னை பட்டினப்பாக்கம் பகுதியைச் சார்ந்த பாண்டியம்மாள். இவர் ஒரு மகளிர் சுய உதவிக் குழுவிலே உறுப்பினராக இருக்கக்கூடியவர். அவர் செய்தியாளரிடத்திலே பேட்டி தருகிறபோது குறிப்பிடுகிறார். விழிப்புணர்வு எந்த அளவிற்கு வந்திருக்கிறது என்பதற்கு உதாரணம். "If the graduates and teachers have a quota in the Council, why not the same for women self-help groups" என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். அதாவது பட்டதாரிகள். மற்றும் ஆசிரியப் பிரதிநிதிகளுக்கு சட்டமன்ற மேலவையில் ஒதுக்கீடு உள்ளதுபோல மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோலத்தான் தௌலத் மீரா என்கிற இஸ்லாமியச் சமுதாயத்தைச் சார்ந்த ஒரு சகோதரி, தியாகராய நகரில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சகோதரி, சிந்துபைரவி என்ற சுய உதவிக் குழுவிலே உறுப்பினராக இருக்கக்கூடியவர். அவர் ஒரு செய்தியைச் சொல்கிறார். "Women are now seeking their voice to be heard in the law making forum. If the Government provides women SHGs an opportunity, we will serve meaningfully for the upliftment of women" என்று குறிப்பிடுகிறார். அதாவது சட்டத்தை உருவாக்கும் மன்றங்களில் சுய உதவிக் குழுக்களுக்கும் அரசு பிரதிநிதித்துவம் அளித்தால், மகளிர் முன்னேற்றத்திற்கு எங்களால் மேலும் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்ற ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார். ஆகவே, இப்போதே மேலவையை உருவாக்குவதற்காக முன்மொழிந்திருக்கக்கூடிய நம்முடைய முதல்வரிடத்திலே மகளிர் சுய உதவிக் குழுக்களின் சார்பிலே இந்த வேண்டுகோளையும் எங்கள் துறையின் சார்பிலே உரிமையோடு நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1-50

அடுத்து, ஒரு மாபெரும் திட்டமாக எல்லோராலும் போற்றப்படக்கூடிய கலைஞர் வீட்டு வசதித் திட்டம். இந்தக் கலைஞர் வீட்டு வசதித் திட்டம் என்பது இந்திய வரலாற்றிலேயே பெருமைப்படத்தக்க வகையிலே, ஏன் எந்த மாநிலத்திலும் நிறைவேற்றப்பட முடியாத நிலையிலேவுள்ள இந்தத் திட்டத்தை நாம் அறிவித்திருக்கிறோம். ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் நான் துவக்கத்திலே சொன்னேன், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது ஒரு உன்னத திட்டமாக எங்கள் துறைக்குக் கிடைத்தது என்று. ஆக, அதையும் வெல்லக்கூடிய வகையில் ஒரு மாபெரும் திட்டமாக, இந்தக் கலைஞர் வீட்டு வசதித் திட்டமும் எங்களுடைய துறைக்கே கிடைத்திருப்பதிலே, உள்ளபடியே நாங்கள் பெருமைப்படுகிறோம்; மகிழ்ச்சி அடைகிறோம். ஆகவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே தொடக்கத்தில், வரக்கூடிய ஆண்டில் 3 இலட்சம் வீடுகளைக் கட்ட முடிவு செய்து, அதற்காக 1,800 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஊரகக் குடிசைகளில் வாழக்கூடிய மக்களுக்கு, அதாவது அனைத்து மதத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்களுக்கும், சாதி, மத, இன பேதமின்றி, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம். உண்ண உணவு-ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய். உடுக்க உடை-இலவச வேட்டி-சேலை. (மேசையைத் தட்டும் ஒலி) இருக்க இடம்-வீட்டு மனைப் பட்டா. ஆக, இப்படி இருக்கக்கூடிய இந்த நிலையிலேதான், தலைவர் கலைஞர் அவர்கள்—நான் இன்னும் ஒன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் அப்போது முதலமைச்சராக இருந்தபோது, குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு வாரியத்தை உருவாக்கினார்கள். சென்னை மாநகரத்திலே, அதேபோல் மற்ற மாநகராட்சிகளில், நகரப் பகுதிகளில் இருக்கக்கூடிய குடிசைகளை அப்புறப்படுத்தி, அதற்கு மாற்றாக, அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்ற உணர்வோடு உருவாக்கப்பட்ட வாரியம்தான் குடிசை மாற்று வாரியம். அந்தக் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப்பட்டு, அதனுடைய தொடக்க விழா நிகழ்ச்சி, சென்னை கோட்டூர்புரத்திலே நடைபெற்ற

நேரத்தில், அந்த விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றிய லோக்நாயக், சுதந்திரப் போராட்டத்தினுடைய மாபெரும் தியாகியாக விளங்கிய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், அந்த விழாவிற்கு வந்தார்கள். அந்த விழாவிலே அவர் கலந்துகொண்டு உரையாற்றுகிறபோது, காந்தியடிகள் கண்ட கனவையே கலைஞர் இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார் என்று அவர்கள் உரையாற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோலத்தான், 1971 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயத் தொழிலாளர்களுக்காகக் குடியிருப்பு அனுபோகதாரர்கள் என்கிற உரிமைச் சட்டத்தை நிறைவேற்றித் தந்தார்கள். அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காரணத்தால், திருத்துறைப்பூண்டியிலே விவசாயத் தொழிலாளர்களுடைய மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலே பொதுவுடைமைக் கட்சியினுடைய மாபெரும் தலைவராக விளங்கிய, மதிப்பிற்குரிய திரு. மணலி கந்தசாமி அவர்கள் அந்த மாநாட்டிலே பங்கேற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றிய கலைஞர் அவர்களைப் பாராட்டி அவர் பேசுகிறபோது ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "பல ஆண்டுகளாக இரத்தம் சிந்தியும் எங்களால் சாதிக்க முடியாததை, ஒரு துளி பேனா மையினால் கலைஞர் சாதித்துக் காட்டியிருக்கிறார்" என்று பாராட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இடம் கொடுப்பது மட்டுமல்ல; வீடு கட்டக்கூடிய அந்தத் திட்டத்தையும் நாங்கள்தான் நிறைவேற்றுவோம் என்று சொல்லி, அதற்காக இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய திட்டம்தான் கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.

இந்தக் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தினுடைய தொடக்க விழா அண்மையிலே, திருச்சியிலே, கடந்த மார்ச் மாதம் 3 ஆம் தேதி நடைபெற்றது. திரு. வேல்முருகன் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். அவர் கட்சியைச் சார்ந்த தலைவர் மாண்புமிகு கோ.க. மணி பங்கேற்றதைச் சொன்னார். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரும் கலந்துகொண்டார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த தலைவரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த தலைவரும், விடுதலைச் சிறுத்தை கட்சியினுடைய தலைவரும் கலந்துகொண்டார்கள். ஆனால், எதிர்க்கட்சியினுடைய தலைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று நாங்கள் கடிதம் அனுப்பினோம். ஆனால், வருவதற்கு வாய்ப்பில்லை என்று அவர்கள் பதில் கடிதம்

அனுப்பினார்கள். அதற்காக, கலந்து கொண்டவர்களுக்கு மட்டுமல்ல, பதில் கடிதம் அனுப்பிய எதிர்க்கட்சித் தலைவருக்கும் நான் நன்றி தெரிவித்து அந்த விழாவிலே பேசினேன் என்பது அவருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ம.தி.மு.க., தே.மு.தி.க. கட்சியினுடைய தலைவர்களுக்கும் அவர்கள் அந்த விழாவிலே கலந்துகொள்ள வேண்டுமென்று துறையின் சார்பிலே, முதலமைச்சருடைய ஆணையின்படி நானே கடிதம் எழுதினேன். பதில் கடிதம்கூட அவர்களிடத்திலிருந்து எங்களுக்கு வரவில்லை. நான் அவர்களிடம் பலமுறை தொலைபேசியிலேகூட பேசினேன். ஊருக்குச் சென்ற பிறகு பதில் எழுதுகிறேன் என்று டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள் சொன்னார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ எழுதவில்லை; பரவாயில்லை. எது எப்படியிருந்தாலும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு இருந்து, இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, உடனடியாக வீடுகள் கட்டக்கூடிய அந்தப் பணிகளைத் துவக்குவதற்கு ஏதுவாக, கணக்கு எடுக்கக்கூடிய அந்தப் பணிகளெல்லாம் இப்போது வேக வேகமாக நடந்துகொண்டிருக்கின்றன. இன்றுவரை எனக்கு வந்திருக்கக்கூடிய கணக்கின் அடிப்படையில், 11,222 ஊராட்சிகளில் இந்தப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. இதன்படி பார்த்தால், 15 இலட்சத்து 25 ஆயிரத்து 254 குடிசைகள் தகுதியுள்ளவையாகக் கண்டறியப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தக் கணக்கெடுக்கக்கூடிய பணிகள் வருகிற ஜூன் மாதத்திற்குள் முடிவடைய இருக்கின்றன. ஆகவே, இந்தப் பணிகள் முழுமை பெற்றதற்குப் பிறகு இந்த ஆண்டிலே இந்தப் பணிகள் தொடங்கி, 3 இலட்சம் வீடுகள் கட்டித் தரக்கூடிய அந்தப் பணியைச் சிறப்பாக நிறைவேற்றவிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், திரு. கி. ஆறுமுகம் அவர்களும் இங்கே பேசுகிறபொழுது, இந்தத் திட்டத்திற்குத் தேவையான பணியாட்களை, அதேபோல், நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் இங்கே பேசுகிறபொழுது குறிப்பிட்டுச் சொன்னார்கள். தேவையான பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். ஏற்கெனவே நாங்கள் முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே இதுபற்றிப் பேசி அவர்களும் எங்களுக்கு

ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தேவையான பணியிடங்கள் நிச்சயமாக உருவாக்கப்பட இருக்கின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-55

அடுத்து, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் எப்படி ஊராட்சிப் பகுதிகளுக்குக் கூடுதல் நிதி அதிகாரப் பகிர்வை நாம் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறோமோ, அதேபோல நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் நாம் கூடுதல் நிதி உதவி, அதிகாரப் பகிர்வு, புதிய வளர்ச்சித் திட்டங்கள், பணியாளர் நியமனங்கள் இவைபோன்ற பல முன்னோடி நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகின்ற காரணத்தால்தான், அவர்களும் இன்றைக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெற்று, அந்த அமைப்புகளும் பல திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய முக்கியமான நடவடிக்கைகளில் சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரைக்கும், அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை ஏற்கெனவே 787 கோடியே 42 இலட்சம் ரூபாயாக இருந்தது. அதை நாம் ஆட்சிக்கு வந்தவுடன் முழுமையாகத் தள்ளுபடி செய்தோம். அப்படித் தள்ளுபடி செய்த காரணத்தால்தான் அவர்களுடைய நிதிநிலைமை ஓரளவிற்குச் சீரானது. அப்படிச் சீரான காரணத்தினால்தான் புதிய வளர்ச்சித் திட்டங்களை அவர்கள் மேற்கொள்ள முடிந்தது.

அதேபோல, நகர்ப்புறப் பகுதிகளில் மொத்தம் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளைப் பொறுத்தவரையில், 1,53,793 மனைப் பிரிவுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவையெல்லாம் வரன்முறைப்படுத்தப்பட்டன. அப்படி வரன்முறைப்படுத்தப்பட்ட காரணத்தினால், அவர்களுக்குக் குடிநீர், கழிவு நீர் இணைப்பு, சாலைகள், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் எல்லாம் செய்து தருவதற்கு வாய்ப்பாக அது அமைந்தது. இந்த அடிப்படை வசதிகளைச் செய்தது மட்டுமல்ல; அவர்களுக்குக் கூடுதல் வருமானமும், அதாவது 106 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே அதையும் நாம் நிறைவேற்றித் தந்தோம். எனவே, ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் பேரூராட்சிகளாவதும், பேரூராட்சிகள் என்பது நகராட்சிகளாவதும், நகராட்சிகள் மாநகராட்சிகளாவதும்தான்

உண்மையான வளர்ச்சியினுடைய அடையாளமாக அமைந்திட முடியும். அதனால்தான் இந்த நான்காண்டுக் காலத்திலே ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய இந்த நான்கு நகராட்சிகளை மாநகராட்சியினுடைய நிலைக்கு நாம் உயர்த்தித் தந்தோம். அப்படி உயர்த்தித் தந்ததற்குப் பிறகு, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அந்த மாநகராட்சிகளுடைய எல்லைகள் எல்லாம் விரிவுபடுத்தக்கூடிய பணியும் இப்பொழுது முழுமையடைந்திருக்கிறது.

அதேபோல, சென்னை மாநகராட்சியைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சென்னை மாநகராட்சியினுடைய எல்லையும் விரிவுபடுத்தக்கூடிய பணியிலே முழு வீச்சிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம். இது மத்திய அரசின் துணையோடு நிறைவேற்றப்படக்கூடிய திட்டம். நகர்ப்புறப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு நிதியைப் பயன்படுத்தி, மாநில அரசினுடைய நிதியைப் பயன்படுத்தி, உள்ளாட்சி அமைப்புகளின் நிதியைப் பயன்படுத்தி, இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். கடந்த நான்கு ஆண்டுகளில் சென்னைப் பெருநகரப் பகுதிகளுக்கு 39 திட்டங்கள், 3,091 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே செயல்படுத்தப்படுகின்றன. மதுரை பெருநகர்ப் பகுதிகளுக்கு 8 திட்டங்கள்; 838 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகின்றன. கோவை பெருநகர்ப் பகுதிகளுக்கு 5 திட்டங்கள், 826 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகின்றன. கோவையைப் பற்றிகூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, கோவையினுடைய பங்கு என்ன என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். கோவை உள்ளாட்சியினுடைய பங்கு எவ்வளவு என்று கேட்டால், இதிலே 248 கோடி ரூபாய் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக மொத்தம் 5,566 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 52 திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றிலே 232 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 7 பணிகள் முடிவடைந்திருக்கின்றன. மேலும் 12 பணிகள் இந்த நிதியாண்டில் முடிவடைய இருக்கின்றன. இது தவிர, மேலும் 283 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களில் 3,720 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே

258 பெருந்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆக மொத்தம் 9,292 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. நான் பெருமையோடு, பூரிப்போடு தெரிவிக்க விரும்புவது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை வரலாற்றிலே இவ்வளவு பெரிய தொகையிலே இவ்வளவு திட்டங்கள் நடந்ததாக வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல TURIP திட்டத்தின் கீழே Tamil Nadu Urban Road Improvement Programme என்கிற அந்தத் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 11 நகராட்சிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக consultants எல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2-00

அடுத்து, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கேகூட பேரூராட்சிகளைப் பற்றிக் கொஞ்சம் வருத்தத்தோடு சில செய்திகளையெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னீர்கள். எப்படி ஊராட்சிப் பகுதிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படுகிறதோ, அதேபோல தமிழகத்தில் இருக்கக்கூடிய 521 பேரூராட்சிகளுக்கும், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, அதன் மூலமாகவும் பல பணிகளை நாம் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும்.

அதேபோல, மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே, மயானங்களில் எரிவாயு தகன மேடைகளெல்லாம் அமைக்கக்கூடிய பணி, நவீன இறைச்சிக்கூடங்களைக் கட்டுகின்ற பணி போன்ற பல பணிகள் பல கோடி ரூபாய் மதிப்பீட்டிலே தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; நிதிநிலையிலே நலிவுற்றிருக்கக்கூடிய 30 நகராட்சிகளைத் தேர்ந்தெடுத்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழே, அதற்கும் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் திட்டங்களும் இப்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படுகிறபோதெல்லாம் மக்கள் பல தொல்லைகளுக்கு, துன்பங்களுக்கு ஆளாகிறார்கள் என்பதை உணர்ந்து, புரிந்து அதற்கேற்ற வகையிலே கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய இரண்டு திட்டங்கள், ஒன்று, மீஞ்சூர். அடுத்து, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அண்மையிலே அடிக்கல் நாட்டியிருக்கிறோம், நெம்மேலி என்கிற அந்தப் பகுதியிலே. ஆக, இரண்டு திட்டங்கள். ஆகவே, மீஞ்சூரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுகிறபோது, நான் அதற்கு விளக்கம் தந்திருக்கிறேன். எனவே, அதிலே நான் அதிகம் செல்ல விரும்பவில்லை. மீஞ்சூர் திட்டத்தைப் பொறுத்தவரையில், வருகிற ஜூன் மாத இறுதியிலே குடிநீர் கிடைக்கக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நெம்மேலி திட்டத்தைப் பொறுத்தவரையிலே குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், கடந்த 23-2-2010 அன்று அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அதற்காக மத்திய அரசு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு தந்து, அந்தத் திட்டத்தை வருகிற டிசம்பர், 2011-லே முடித்து, தினசரி 100 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகருக்குக் கிடைக்கும். எனவே, நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இந்த இரு திட்டங்களும் முழுமை பெறுகிறபோது, சென்னை நகருக்கு என்னதான் மோசமான வறட்சி நிலை ஏற்பட்டாலும், இந்த இரண்டு திட்டங்களின்மூலமாக சென்னை மாநகர மக்களுக்கு தினசரி 200 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சென்னை மாநகரத்தை அழகு நகரமாக ஆக்கக்கூடிய வகையிலே எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தாலும், அவற்றிலே முக்கியமானது அடையாறு பூங்கா. அந்த அடையாறு பூங்காவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 2003 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதாக எடுத்துச் சொன்னார்கள்; உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால் அதற்கு முன்பே, 1997 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, இந்தத் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை. எனவே, அப்படிப்பட்ட இந்தத் திட்டம் 2006 ஆம் ஆண்டிலே நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அடையாறு

பூங்காவைப் பொறுத்தவரையிலே, 358 ஏக்கர் பரப்பளவில் 'அடையாறு கிரீக்' என்னும் சிற்றோடைப் பகுதியையும், திரு.வி.க. பாலத்திற்குக் கிழக்கே அமைந்திருக்கக்கூடிய கழிமுகப் பகுதியையும் மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அதற்காக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு திட்டத்தை நாம் ஆட்சிக்கு வந்தவுடன் அறிவித்தோம். இதிலே முதற்கட்டமாக 58 ஏக்கர் நிலத்தை எடுத்துக்கொண்டு, அந்த 58 ஏக்கர் நிலப் பரப்பிலே இந்த அடையாறு பூங்காவை அமைக்க வேண்டுமென்று முடிவெடுத்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், கடந்த 2007 ஆம் ஆண்டு இதற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்கள். இப்போது திட்டமிட்டவாறு அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பலமுறை நானே நேரடியாகச் சென்று அந்த ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருக்கிறேன். இந்தப் பூங்காவில் இதுவரை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. இதுவரை ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், நீர்நிலைகள், நில அபிவிருத்தி, நடைபாதைகள், கற்பிக்கும் மையம், குழந்தைகள் செய்முறைப் பயிற்சி மையம், தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் பாதுகாப்பு போன்ற பணிகளெல்லாம் இப்போது அந்தப் பூங்காவிலே முன்னேற்றத்தில் இருக்கின்றன. இப்போது பலவிதமான பறவைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், விதவிதமான வண்ணத்துப் பூச்சிகள், சிட்டுக் குருவிகள், Sea Eagle—கடல் கழுகு, Stilt என்கிற ஒரு பறவை, Sand piper, Kingfisher—நான் சொல்வது பறவைகளைச் சொல்கிறேன், தவறாக யாரும் கருதிவிடக்கூடாது—Sand piper, Kingfisher என்கிற அந்தப் பறவைகள், ப்ளோவர், பூநாரை, கடல் காகம் போன்ற பறவைகளெல்லாம் இப்போதே வரத் தொடங்கியிருக்கின்றன.

அதுமட்டுமல்ல; நீர்வாழ் உயிரினங்கள். குறிப்பாக, கெண்டை, கெளுத்தி, டார்போன், ஆமைகள், நண்டுகள் இவையும் வரத் தொடங்கியுள்ளன. 200-க்கும் மேற்பட்ட தாவர இனங்கள் அங்கு வளர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பூங்காவைப்பற்றி, நேற்றைக்கு வெளிவந்த 'இந்து' பத்திரிகையிலேகூட, ஒரு செய்தி வெளியிட்டிருந்தார்கள். அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிறார்கள்.

"The Adyar Poonga is all set to become a heaven for bird-watchers. More than 85 different kinds of birds are spotted in this green expanse" என்று செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, சென்னையில் இதயப் பகுதியிலே பறவை ஆர்வலர்களின் சொர்க்கமாக அடையாறு பூங்கா. இது பறவை ஆர்வலர்களுக்கு உகந்த இடமாகி வருகிறது. 85 வகைகளுக்கும் மேற்பட்ட பறவைகள் இந்தப் பெரிய பசுமைப் பூங்காவில் காணப்படுகின்றன என்று செய்தி வெளியிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, "Times of India" நாளிதழில்கூட இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "அசுத்தமான பகுதியாக, மாடுகளை வளர்க்கும் இடமாக இருந்த அடையாறு கழிமுகப் பகுதி நீர்நிலை, தற்போது பல்வேறு வகையான பறவைகளை ஈர்க்கும் பூங்காவாக மாறி வருகிறது; சுற்றுச்சூழலுக்கு மிக முக்கியமான இந்த இடத்தைப் புனரமைக்க அரசு மேற்கொண்டுள்ள சீரமைப்புத் திட்டம் வரவேற்கத்தக்கது" என்று தம்முடைய கட்டுரையிலே 'Times of India' குறிப்பிட்டுக் காட்டுகிறது. எனவே, திட்டமிட்டபடி, டிசம்பர் 2010-க்குள் இந்த அடையாறு பூங்கா, பணிகளெல்லாம் முழுமைபெற்று, வருகிற ஜனவரி 2011, தமிழர் திருநாளாம், தமிழ்ப் புத்தாண்டாம், தை முதல் நாள், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்படவிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-05

அதேபோல, சென்னை மாநகராட்சியின் சார்பிலே, அதைத் தொடர்ந்து அறக்கட்டளை அமைத்து, இப்போது எழிலோடு காட்சிதரக்கூடிய கடற்கரை, எந்த அளவிற்கு மெருகூட்டப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஆக, இப்படி சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை பல சாதனைகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருந்தாலும், ஒரு பெரும் சாதனை, ஒரு முக்கியமான சாதனையை நான் அவசியம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, சென்னை மாநகராட்சியினுடைய சாதனைகளில், ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சாதனையாக விளங்கிக் கொண்டிருப்பது, இன்றைக்கு ஆக்கிரமிப்புகளை, அதிலும் தனியாரிடமிருந்து, அந்த ஆக்கிரமிப்புகளை மீட்கக்கூடிய சிறப்பானதொரு பணியை நமது சென்னை மாநகராட்சி செய்து கொண்டிருக்கிறது. நான் குறிப்பாக

ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பெரிய பட்டியலே என் கையில் இருக்கிறது. நேரமில்லை. செனாய் நகர், அமைந்தக்கரை பகுதியிலே 8.5 கிரவுண்டு, மாடம்பாக்கம் பகுதியிலே 30.25 ஏக்கர், அசோக் நகர் 1-வது அவென்யூ பகுதியிலே 14 கிரவுண்டு, அதே அசோக் நகர் 12-வது அவென்யூவிலே 10 கிரவுண்டு, சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகில் இருக்கக்கூடிய வி.பி. ஹால். உங்களுக்குத் தெரியும் விக்டோரியா பப்ளிக் ஹால் என்று புகழ்மிக்க வரலாற்றிலே இடம் பெற்றிருக்கக்கூடிய வி.பி. ஹால். அது இப்போது மெருகூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. 44 கிரவுண்டு மனை அது, தனியாரிடம் மாட்டிக் கொண்டிருந்தது. அதை இன்றைக்கு மாநகராட்சி தன்வசப்படுத்தியிருக்கிறது என்று சொன்னால், நான் ஒரே வரியிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால் கடந்த 4 வருடங்களில், 52 ஏக்கர் நிலத்தைத் தனியாரிடமிருந்து நம்முடைய மாநகராட்சி மீட்டிருக்கிறது. இதனுடைய மதிப்பு எவ்வளவு என்று கேட்டால் சுமார் 1,500 கோடி ரூபாய் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக சென்னை மாநகராட்சியையும், மாநகராட்சியினுடைய மேயரையும் நான் இந்த நேரத்திலே பாராட்ட, அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பெரம்பூர் மேம்பாலம். நான் சென்னை மாநகரத்தினுடைய மேயராக 1996 ஆம் ஆண்டு, பொறுப்பில் இருந்தபோது, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டுமென்பதற்காக 10 மேம்பாலங்களைக் கட்ட முடிவெடுத்து, அதில் 9 மேம்பாலங்களைக் குறித்த காலத்திற்கு முன்பே, மதிப்பீட்டுத் தொகையைவிடக் குறைவான நிலையிலே அவற்றைக் கட்டியதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஒரே ஒரு மேம்பாலம் சில இடையூறுகளின் காரணமாக, மண் ஆய்வு நடத்திய நேரத்தில், தொழில்நுட்பக் காரணத்தால் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. இடையிலே ஆட்சி மாற்றம் வந்தது. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு என்ன செய்திருக்க வேண்டும்? அந்தப் பணியை நிறைவேற்றுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். என்ன செய்தார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்தப் பிரச்சினைக்கெல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. அதை அரசியலாக்க நான் விரும்பவில்லை. ஆனால், அது தடைபட்டுப் போயிருந்தது. ஆனால், 2006 ஆம் ஆண்டிலே நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த பெரம்பூர் மேம்பாலத்தை

எப்படியும் கட்டி முடிக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அந்த உத்தரவையேற்று மாநகராட்சியோடு நாங்களும் தொடர்பு கொண்டு, அந்தப் பணியிலே முழுமையாக ஈடுபட்டோம். அந்தப் பாலத்தினுடைய வடிவமைப்பை மாற்றினோம். அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய ஆய்வறிக்கையைப் பெற்று அதற்குப் பிறகு புதிதாக டெண்டர் விட்டோம். அதற்குப் பிறகு பணிகளெல்லாம் தொடங்கி, கடந்த மார்ச் மாதம் 28-ந்தேதி நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அந்தப் பாலத்தைத் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கூட்டத் தொடரின்போது நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டு கட்ட முடியாது; முடியவே முடியாது என்று செய்கையெல்லாம் காட்டினார்கள். ஆனால், அதைச் சவாலாகவே ஏற்றுக்கொண்டு, அந்தப் பணியை நாங்கள் நிறைவேற்றி முடித்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரம்பூர் மேம்பாலத்தைப் பற்றிச் சொல்கிறபோது, அதிலே பல வரலாறுகளெல்லாம் உண்டு. என்ன வரலாறு என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆக, எங்கே அடிக்கல் நாட்டினோம்? நான் மேயராக இருந்தபோது, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை அழைத்து வந்து, சென்னை மாநகரத்திலே 10 பாலங்களைக் கட்ட, அந்த பெரம்பூர் பகுதியிலேதான் அடிக்கல் நாட்டினோம். ஆனால், அடிக்கல் நாட்டிய இடத்திலே உருவாக இருந்த பெரம்பூர் மேம்பாலத்தைத் திறக்க முடியவில்லை. மற்ற 9 மேம்பாலங்களைத் திறந்துவைத்தோம். அந்த 9 மேம்பாலங்களைத் திறந்தவர் கலைஞர் அவர்கள்தான். ஆனால், எது மிச்சமாக இருந்ததோ, அதனை இப்பொழுது மீண்டும், பத்தாவதாக விடுபட்டுப் போயிருந்த அந்தப் பாலத்தையும் திறந்திருக்கக்கூடியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான், இது ஒரு வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பாலத்திற்காக தலைவர் கலைஞர் அவர்கள்மீது வழக்குப்போட்டு, கைது செய்து, சிறையிலடைத்துக் கொடுமைகளைச் செய்தார்களோ, அதே தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை வைத்து அந்தப் பாலத்தையும் திறந்து வைத்திருக்கிறோம். இது ஒரு வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-10

அதுமட்டுமல்ல; மத்திய அமைச்சராக இருந்து மறைந்த மதிப்பிற்குரிய திரு. முரசொலி மாறன் அவர்கள் அந்தப் பாலத்தை

எப்படியாவது கட்ட வேண்டுமென்று எங்களுக்கு அறிவுரைகள், ஆலோசனைகள் சொன்னது மட்டுமல்ல; அதற்கான சிறப்பான முயற்சிகளிலெல்லாம் ஈடுபட்டார்கள். ஆனால், அவர்கள் இல்லாமல் அந்தப் பாலத்தைத் திறக்கிறபொழுது எங்களுக்கு ஒரு ஏக்கப் பெருமூச்சு இருந்தது. அந்த ஏக்கப் பெருமூச்சையும் போக்கக்கூடிய வகையிலே, இன்றைக்கு அந்த மேம்பாலத்திற்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 'முரசொலி மாறன் பாலம்' என்று பெயர் சூட்டியிருப்பது உள்ளபடியே எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். நான் இதைப்பற்றி அதிகம் விளக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வப்போது இடையிடையிலே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நேரத்தின் அருமை கருதி, நான் ஒரே வரியிலே அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, எப்படி இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் குறித்த காலத்திற்குமுன்பே கட்டி முடித்திருக்கிறோமோ, அதை நிறைவேற்றி முடித்திருக்கிறோமோ, அதேபோல, இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளையும் குறித்த காலத்திற்குமுன்பே நிறைவேற்ற, இந்த அரசு உறுதியெடுத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, பணியாளர் நலனைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், இப்பொழுது பல கோடி ரூபாய் செலவு செய்து எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றுகிறோம். என்னதான் அமைச்சராக இருக்கக்கூடிய நாங்களும், அதிகாரிகளாக இருக்கக்கூடிய அலுவலர்களும் இந்தப் பணிகளில் ஈடுபட்டாலும், இவற்றை செயல்படுத்துகிற நிலையில் இருக்கக்கூடியவர்கள் பணியாளர்கள். அதை உணர்ந்த காரணத்தால்தான், கடந்த கால ஆட்சியிலே 'பணியாளர்கள் நியமனத் தடைச் சட்டம்' என்ற ஒரு சட்டத்தைப் போட்டிருந்தார்கள். அதையும் இரத்து செய்து, அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென்ற நிலையை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் செயல்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிச் செயல்படுத்தியபோது, காலிப் பணியிடங்களை நிரப்பிய முதல் துறை எந்தத் துறையென்று சொன்னால், எங்களுடைய ஊரக வளர்ச்சித் துறைதான் என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கேகூட சில விவரங்களை நம்முடைய திரு. வேல்முருகன் போன்றவர்களெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்; சில விளக்கங்களையெல்லாம் கேட்டார்கள். புதிய பணியிடங்களாக மக்கள் நலப் பணியாளர்கள் முதல் கூடுதல் இயக்குநர் நிலை வரை 18,635 புதிய பணியிடங்களைத் தோற்றுவித்திருக்கிறோம். 2,544 விரிவாக்க அலுவலர் பணியிடங்களைத் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களாக நிலை உயர்த்தியிருக்கிறோம். அலுவலக உதவியாளர் பணியிடங்களிலிருந்து உதவி இயக்குநர் நிலைவரை 29,966 காலிப் பணியிடங்களை நிரப்பியிருக்கிறோம். அதேபோல, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுத்தவரைக்கும், 21,597 காலிப் பணியிடங்களை நிரப்பியிருக்கிறோம். ஆக மொத்தம், உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரைக்கும், 51,563 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஒவ்வோர் ஆண்டும் நிறைவாக சில அறிவிப்புகளை நான் வெளியிடுவதுண்டு. அவையெல்லாம் என்னவாயின? என்ன நிலை? அறிவித்ததோடு நிற்கின்றனவே என்றுகூட சில எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், மாற்றுக் கட்சியைச் சார்ந்த தோழர்கள், நண்பர்கள் இங்கே பேசினீர்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக ஒரு புள்ளிவிவரத்தைக்கூட நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடந்த முறை அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்புகளைப் பொறுத்தவரைக்கும், தனித் தனியாக ஒவ்வோர் ஆண்டும் சொல்வதற்கு நேரம் இல்லை. எனவே, ஒட்டுமொத்தமாக, குறிப்பிட விரும்புகிறேன். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைப் பொறுத்தவரைக்கும் நான்கு ஆண்டுகளில் மொத்தமாக அறிவித்த அறிவிப்புகள் எவ்வளவு என்று கேட்டால், 87. அவற்றிலே முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடியவை 83, செயல்பாட்டில் இருக்கக்கூடியவை 4. அதேபோல, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுத்தவரைக்கும் மொத்தமாக நான்கு ஆண்டுக் காலத்தில் அறிவித்த அறிவிப்புகள் 298. அவற்றிலே முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கக் கூடியவை 191, செயல்பாட்டில் இருக்கக்கூடியவை 104, கைவிடப்பட்டவை 3. இதனுடைய முழு விவரங்கள் அச்சிடப்பட்டு புத்தகமாகவே ஒவ்வோர் உறுப்பினரிடத்திலும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதனை நீங்கள் தயவுகூர்ந்து படித்துப் பார்க்க வேண்டுமென்றும் நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-15

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விவாதத்திலே பங்கேற்று, சில அறிவுரைகளை, ஆலோசனைகளை, குறைகளை, நிறைகளை, வேண்டுகோள்களை, கோரிக்கைகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவற்றிலே, குறிப்பாக அதிமுக-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பேசுகிறபோது, முழு சுகாதாரத் திட்டச் செயலாக்கத்திற்கு மத்திய அரசு வழங்கக்கூடிய 'நிர்மல் கிராம புரஸ்கார் விருது' பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த விருது மத்திய அரசால் 2004-2005 முதல் வழங்கப்பட்டு வருகிறது; உண்மைதான். அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலிருந்த நேரத்தில், அதாவது 2004-2005 ஆம் ஆண்டில் 12 விருதுகளும், 2005-2006 ஆம் ஆண்டு 119 விருதுகளும் வாங்கியதாகக் குறிப்பிட்டுச் சொன்னார். இப்பொழுது தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு 2006-2007 ஆம் ஆண்டு 296 விருதுகளும், 2007-2008 ஆம் ஆண்டு 1,474 விருதுகளும், 2008-2009 ஆம் ஆண்டில் 196 விருதுகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. 2009-2010 ஆம் ஆண்டிற்கு 972 முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. விருதுகள் அறிவிப்பு பின்னாலே வரும். எனவே, இந்த எண்ணிக்கையைப் பொறுத்தவரைக்கும் இந்த ஆட்சியில் உயர்ந்துகொண்டுதான் வருகிறது. அதுமட்டுமல்ல; அவர் இன்னொரு கேள்வியைக்கூட கேட்டார். விருது பெறாத கிராமங்களெல்லாம் சுகாதாரமில்லாத கிராமங்களா என்று ஒரு சந்தேகத்தை அவர் கேட்டார். முன்னாள் அமைச்சராக இருந்த அவருக்கு இந்த விளக்கம்கூட தெரியவில்லை என்ற வருத்தம்தான் எனக்கு. அவர்களுடைய கூற்றுப்படியே பார்த்தால், 2004-2005 ஆம் ஆண்டு அவர்களுடைய ஆட்சியிலே 12 கிராமங்கள் விருது பெற்றதாகக் கூறினார். அப்படியென்றால், மீதமுள்ள 12,606 கிராமங்கள் சுகாதாரம் இல்லாத நிலையில் இருந்தனவா? இந்தக் கேள்வியைத்தான் நான் அவரைப் பார்த்துக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அ.தி.மு.கவைச் சார்ந்த திரு. தா. மலரவன் அவர்கள் இங்கு பேசுகிறபோது, கோவைக்கு எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்று ஆதங்கத்தோடு பேசினார். அவருடைய அக்கறைக்காக நான் பாராட்டுகிறேன். அதற்காக ஒரு விளக்கத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். கோவையிலே உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

நடைபெறவிருக்கிறது. ஆக, இந்த மாநாட்டையொட்டி செம்மொழிப் பூங்கா தொடங்கப்படும் என்று நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களே அறிவித்த செய்தியை அவர் படிக்கவில்லையா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்காக முதல் கட்டப் பணிக்காக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அந்தப் பணி தொடங்கப்படவிருக்கிறது. அதுமட்டுமல்ல; சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கோவை-மேட்டுப்பாளையம் சாலையை விரிவாக்கி, மேம்படுத்தி 4 வழிச் சாலையாக ஆக்கும் அந்தப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கோவை நகருக்கு மேற்கு வெளிவட்டச் சாலை 284 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 26 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய 4 வழிச் சாலையை விரைவிலே நிறைவேற்றவிருக்கிறோம். அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்தி கோவை மாநகரப் பகுதியைப் பொறுத்தவரைக்கும் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பல்வேறு அடிப்படை வசதிகளெல்லாம் செய்து தரப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல; கோவை மாநகராட்சிக்கு, இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டம், அவர்களுடைய ஆட்சியிலே திட்டம் போடப்பட்டது, என்ன ஆயிற்று என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். ஒரு விளக்கம். 113.74 கோடி மதிப்பீட்டில் இதற்காக மத்திய அரசினுடைய ஒப்புதலை 28-12-2006 அன்று பெற்றிருக்கிறோம். இத்திட்டத்திற்கான நிருவாக ஒப்புதல் 17-4-2007 அன்று வழங்கப்பட்டிருக்கிறது. 6 Package-களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிலே 5 பணிகள் திட்டமிட்டபடி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மீதமுள்ள ஒரு பணிக்கு, வனத் துறையினுடைய அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. அதற்கான முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. எனவே, அனைத்துப் பணிகளும் திட்டமிட்டபடி முடிவடையும். அதோடு நிறுத்தாமல், இன்னொரு பிரச்சினையையும் அவரே கேட்டார். திருப்பூர், வேலூர், ஈரோடு, தூத்துக்குடி, இந்த நகராட்சிகளையெல்லாம் மாநகராட்சிகளாக ஆக்கிவிட்டீர்களே, நகராட்சித் தலைவர்களையெல்லாம் மேயர்களாக ஆக்கிவிட்டீர்களே, உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்படி ஆக்கிவிட்டீர்களே என்று கேள்வியைக் கேட்டார். ஆக, நாங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி மேயர்களாகத்தான் ஆக்கினோம். ஆனால், நீங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேயர் பதவியையே பறித்தீர்கள். அதற்காகத் தனிச் சட்டம்கூட போட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய வால்பாறைத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் பேசுகிறபோது, கோட்டூர் மூன்றாவது குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்றவேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைத்தார். 98 இலட்சத்திற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் செயலாக்கத்திற்கு நிச்சயம் எடுத்துக்கொள்ளப்படும். அதேபோல கோட்டூர் பேரூராட்சியில் 40 ஆண்டுக் காலமாக, குழாய் பழுதாகியிருக்கிறது, தெரு விளக்குகள் எங்களுக்குத் தேவை, எரி மேடையும் தேவை என்று கோரிக்கை வைத்தார். அதற்குரிய நடவடிக்கைக்கு அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசுகிறபோது சிறு பாலங்கள், கல்வெட்டு அமைக்க தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். அதற்கான ஒரு விளக்கம். ஊரக உள்கட்டமைப்புத் திட்டம் என்ற பெயரிலே இந்த ஆண்டு 380 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிதியில், அந்தப் பணிகளெல்லாம் நிறைவேற்றப்படும்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், வெள்ளிக்கிழமை அன்று பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. கரி. இராமசாமி இவர்களெல்லாம் இங்கே பேசுகிறபோது B.P.L. கணக்கெடுப்பைப் பற்றி விரிவாக, விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து தொடர்ந்து அவர் குறை சொல்லிக்கொண்டேயிருக்கிறார். நேரிலே பார்க்கிறபோதெல்லாம் இதை அவர் சொல்லாமல் இருந்தது கிடையாது. எனவே, அவரே அதற்கு ஒரு விளக்கமே தந்திருக்கிறார். புதிய வழிமுறைகளை மேற்கொள்ள மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுக்கவிருக்கிறது. எனவே, அந்த நிலை வருகிறபோது நிச்சயமாக நடைமுறையில் இருக்கக்கூடிய அந்தச் சிக்கல்களையெல்லாம், அந்தக் குறைபாடுகளையெல்லாம் சரி செய்யும் என்ற அந்த நம்பிக்கையை, அந்த உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-20

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்ந்து நீடிக்குமா என்ற ஒரு சந்தேகத்தை, ஒரு கேள்வியை இங்கே கேட்டார்கள். இந்தத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை முதன்முதலில் 1972 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிய வாரியம்தான் அந்த வாரியம், விரைவிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்ற இருக்கக்கூடிய வாரியம்தான் அந்த வாரியம். அதேபோல் திரு. ஞானசேகரன் சொன்னதுபோல், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற இருக்கக்கூடிய வாரியம்தான் அந்த வாரியம். எனவே, உங்களுக்கு எந்தவித ஐயமும் இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், மாற்றுத் திறனாளிகளுடைய தொழில் வரியை இரத்து செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை எடுத்துவைத்தார்கள். ஏற்கெனவே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், திரு. ஞானசேகரன் அவர்கள், அதற்கான மனுக்களையெல்லாம் என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். அவற்றை முதல்வர் அவர்களிடத்திலே காட்டியவுடன், அவற்றைப் படித்துப் பார்த்து உடனே எங்களுக்கு உத்தரவு போட்டார்கள். அந்தத் தொழில் வரியை இரத்து செய்துதான் தீர வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அதற்கான சட்டத் திருத்தங்கள் விரைவிலே மேற்கொள்ளப்படும் என்ற அந்த செய்தியை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், மார்க்சிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. நன்மாறன் அவர்கள், இங்கே பேச வாய்ப்பில்லை என்று சொன்னாலும் வெட்டுத் தீர்மானத்தின்மூலமாக சில கோரிக்கைகளையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒன்று, மதுரை திருப்பரங்குன்றம் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட வீடுகள் மிகவும் பழுதடைந்திருக்கிற காரணத்தால்

புதிய கான்கிரீட் வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இயக்குதல் மற்றும் பராமரித்தல், இடைவெளி நிறுத்தம் என்ற திட்ட நிதியின்கீழ் 24 வீடுகளுக்கு ரூபாய் 50 இலட்சம் செலவிலே பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிகுமார் அவர்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்கும் பகுதி நேர ஊழியர்களுக்கு ரூ.600/- மட்டுமே வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். அவருக்கு ஒரு செய்தி, தற்போது மாதம் ரூபாய் 1,470 வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்கள் பேசுகிறபோது ஓசூரில் பேருந்து நிலையம், மின் தகன மேடை குறித்துக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஓசூர் பேருந்து நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் 30-4-2010 அன்று முடிவடைந்து மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும். அதேபோல் மின் தகன மேடைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மே முதல் வாரம் அது பயன்பாட்டிற்கு வரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டு, அடுத்து அறிவிப்புக்களை@ பொறுத்தவரையில் புத்தகமாக அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றை நான் படித்ததாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற அதே வேளையில் சில அறிவிப்புகளை மாத்திரம் தலைப்புச் செய்திகளாக கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 268 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,02,000 புதிய வீடுகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஊரகப் பகுதிகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் கட்டப்படும் கட்டடங்களைப் பராமரிக்க 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் மேற்கொள்ளப்படும்.

@ 771 முதல் 784 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆகஅச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

அதேபோல் மேலும் 50,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். 65,000 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு 65 கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும். சுய உதவிக் குழுக்களுக்கு 3,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 3,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 30 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். நகர்ப்புறங்களில், குடிசைப் பகுதி அளவிலான கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.

அடுத்து, 12-வது நிதி ஆணைய மானியத்தின்கீழ் பழுதடைந்த தார்ச் சாலைகள், சுமார் 103 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். ஊரகக் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் 380 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் மேற்கொள்ளப்படும். வேலூர் மாவட்டம், ஏலகிரியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலமாக தமிழகத்தில் மிகப் பெரிய உலகத் தரத்துடன்கூடிய தாவரவியல் பூங்கா சுமார் 80 ஏக்கர் பரப்பளவில், 20 கோடி ரூபாய் செலவிலே உருவாக்கப்படும்.

நகராட்சி நிருவாகத்தைப் பொறுத்தவரைக்கும், நகர்ப்புற உள்ளாட்சிகளில் அமைந்துள்ள மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றியமைக்கக்கூடிய திட்டத்தின்கீழ், 500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், 60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே தார்ச் சாலைகளாக மாற்றப்படும். நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கீழ்வேளூர் பேரூராட்சியில், புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஒட்டன்சத்திரம் பேரூராட்சி, நகராட்சியாக நிலை உயர்த்தப்படும். மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள் ஆ.வேளாளப்பட்டி, அரவை, விளாங்குடி, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 1,430 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி பேரூராட்சிக்கான 12,15,000 மக்கள் பயன்பெறக் கூடிய வகையிலே ரூ.806 கோடி மதிப்பிட்டில் புதிய விரிவாக்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்படும். விருதுநகர் மாவட்டத்தில் ஏழு பேரூராட்சிகள், மற்றும் 11 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1457 குடியிருப்புகளுக்கு 11 இலட்சம் மக்கள் பயன்பெறக் கூடிய வகையிலே 572 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 2-25

புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, குண்ணான்டார்கோயில் மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 1130 குடியிருப்புகளுக்கு, 3,20,000 மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், 127 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி மற்றும் மணச்சநல்லூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 204 ஊரகக் குடியிருப்புகளுக்கு 1,13,229 மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், ரூ.22 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்படும்.

21 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடையநல்லூர் நகராட்சிக்கான புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவில்பட்டி நகராட்சிக்கு தனிக் குடிநீர்த் திட்டம். 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காயல்பட்டினம் நகராட்சிக்கு தனி குடிநீர்த் திட்டம் உருவாக்கப்படும்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோரக் குடியிருப்புகளுக்கு, காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 1,800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்படும்.

36 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே திருவண்ணாமலை நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். சேலம் மாவட்டத்திலுள்ள நரசிங்கபுரம், ஆத்தூர் நகராட்சிகள், 13 பேரூராட்சிகள் மற்றும் 921 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், நகராட்சிகள் வழங்க வேண்டிய நிதியாதாரம் இறுதி செய்யப்பட்ட பின் இந்த ஆண்டு செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திண்டுக்கல் நகராட்சி உட்பட, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கான வைகை அணை மற்றும் பேரணை மதகுகள் அமைந்துள்ள 8 குடிநீர்த் திட்டங்களுக்கு நீராதாரத்தை உறுதி செய்யும் விதமாக, வைகை அணையிலிருந்து குழாய்மூலமாகக் குடிநீர் வழங்கும் திட்டம் இந்த ஆண்டு செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவாக, உயர் தனிச் செம்மொழியாம் நம் தமிழ் மொழியை போற்றும் வகையில், உலகத் தமிழ்ச் செம்மொழி முதல் மாநாடு நடைபெறுவதை முன்னிட்டு, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றினுடைய அலுவலகக் கட்டடங்கள் மீது "தமிழ் வாழ்க" என்ற சொல் பொறித்த மின்னொளிப் பலகை (Neon Signs) நிறுவப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆக, இவ்வளவு திட்டங்களை, இவ்வளவு பணிகளை நாம் என்னதான் நிறைவேற்றுவதற்கான முயற்சியிலே தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் இந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றுவதற்குத் தேவையான அறிவுரைகளை, ஆலோசனைகளை தொடர்ந்து எங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* இதற்குத் தேவையான நிதியை அவ்வப்போது எங்களுக்கு ஒதுக்குவதற்கு துணை நிற்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, இந்தத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காகத் தொடர்ந்து துணை நிற்கக்கூடிய இந்தத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய உயர் அதிகாரிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய முதன்மைச் செயலர் திரு. அசோக்வரதன் ஷெட்டி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய செயலர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு. கௌரி சங்கர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரண் சிங், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினுடைய மேலாண்மை இயக்குநர் திரு. சிவ்தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, சென்னை மாநகராட்சியினுடைய ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநர் திரு. உதயச்சந்திரன், 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தினுடைய

திட்ட இயக்குநர் திரு. தீரஜ் குமார், நகராட்சி நிருவாகத்தினுடைய இயக்குநர் முனைவர் செந்தில் குமார், பேரூராட்சிகளினுடைய இயக்குநர் திரு. ராஜேந்திரன், தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. பணீந்தர் ரெட்டி ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிற அதேநேரத்தில் அவர்களுக்குத் துணை நிற்கக்கூடிய அரசு அலுவலர்கள், அதற்கும் துணை நிற்கக்கூடிய இந்தத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய பணியாளர்கள், அதேபோல சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி அமைப்பினுடைய உறுப்பினர்கள் அத்துணைப் பேருக்கும் நான் இந்த நேரத்தில் இந்தத் துறையின் சார்பில் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிற அதேநேரத்தில், தன் மகன் பெற்ற சான்றிதழையும், பதக்கத்தையும் பார்த்து, பெருமிதம் கொண்டு அந்தப் பெற்றோர்கள் எந்த அளவிற்குக் கட்டிப் பிடித்து, தட்டிக் கொடுத்து, வாழ்த்துசொல்லி ஊக்குவிப்பார்களோ, அந்த அளவிற்கு இந்தப் பேரவை பெருமிதம்கொள்ளும் என்ற அந்த உணர்வோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மக்கள் பணியில் பாரதி கண்ட சேவகனைப்போல, "காட்டு வழியானாலும், கள்வர் பயமானாலும், இரவில், பகலிலே எந்நேரமானாலும் சிரமத்தைப் பார்ப்பதில்லை; தம்முடனே சுற்றுவேன், தங்களுக்கு ஒரு துன்பம் வராமல் காப்பேன்; எண்ணம், விசாரம் எதுவும் என் பொறுப்பாய்க் கொள்வேன்; செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி, கல்வி, அறிவு, ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண்!" என்றும், "இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்!" என்றும், அனைவரும் போற்றும்வண்ணம் ஒக்கநயங் காட்டி, ஒன்றும் குறைவின்றி, நண்பனாய், சேவகனாய், நாள்தோறும் நான் இருப்பேன் என்ற எனது இந்த உறுதிமொழியை ஏற்று வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடு)

பிற்பகல் 2-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, திரு. கே.பி. அன்பழகன்? (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது நேரம் 2-30 ஆகிவிட்டதே?

மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஒன்றரை மணி நேரம் பதில் அளித்துள்ளார்கள். அதற்கு என் வாழ்த்துக்கள்.

திரு. கே.பி. அன்பழகன், சீக்கிரம், விளக்கம் கேளுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் Nirmal Gram Puraskar விருதைப் பற்றி நான் பேசியதை, முழுமையாகப், புரிந்துகொள்ளாமல் எனக்குப் பதில் தந்திருக்கிறார்கள். அதை நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆரம்பத்தில் மத்திய அரசாங்கம் இந்த Nirmal Gram Puraskar விருதை அறிவிக்கின்றபோது, தமிழகத்தில் 12 ஊராட்சிகள் விருதுகள் பெற்றன என்று குறைவாகக் கூறுகின்றார். இந்திய அளவிலே தமிழகமானது மூன்றில் ஒரு பங்கை, அதாவது 35 சதவிகிதத்திற்கான பரிசை அன்றையதினம் பெற்றது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முன்னோடியாக, ஆண்டுக்காண்டு ஊராட்சிகள், முழு சுகாதாரத்திலே வளர்ச்சி அடைந்துகொண்டிருந்தன. இப்பொழுது 10,523 ஊராட்சிகளில் முழு சுகாதாரத்தில் வளர்ச்சியடையாமல் பல ஊராட்சிகள் உள்ளன விருதுபெற்ற கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை 2007—08-ல் 1,474 என்றும், அடுத்த ஆண்டு அது 196-க்குச் சென்று விட்டது என்றும், அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் இந்த அரசுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் அறிவுரை கூறினேனே தவிர, அவரை நான் புரிந்துகொள்ளவில்லை என்று குற்றச்சாட்டாகக் கூறுகின்றார். இதை மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன். மேலும் ஒரே ஒரு கருத்து. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திண்டிவனம் பேருந்து நிலையம் கட்டுவதற்கு முழுமையாக அனுமதி கொடுக்கப்பட்டு, அதைக் கட்டுகின்ற சூழ்நிலையிலே, இடத்தை மாற்றுவதற்காக பல்வேறு சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. நேற்று முன்தினம் 23 ஆம் தேதி இந்த அவையிலே மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஒரு

புத்தகத்தை வெளியிட்டிருந்தார்கள். அதைப் பார்த்தபோது, நல்ல முறையிலே குளங்கள் சீரமைக்கப்பட்டு, புத்தகங்களிலே அச்சடிக்கப்பட்டிருந்தன. குளங்கள் இருக்கின்ற பகுதிகளில் முழுமையாகத் தண்ணீர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. அன்பழகன், உட்காருங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) அவர் subject-க்குள்ளே போகாமல் எதையோ பேசிக்கொண்டிருக்கின்றார். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 2 மணி நேரங்களுக்கும் அதிகமாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு கோரிக்கைகளுக்கும், வினாக்களுக்கும், சந்தேகங்களுக்கும் விடையளித்து, அற்புதமான பதிலுரையைத் தந்திருக்கின்ற இந்த நேரத்தில், என்னை நீங்கள் பாராட்டி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், என் தந்தை ஏற்றுக்கொள்வதைப்போல என்று உணர்ச்சி பொங்கச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்வேன், உளி படாத சிற்பமில்லை; துளை படாத புல்லாங்குழல் இல்லை; அடி வாங்காத மட்பாண்டம் இல்லை; சுமை தாங்காமல் முத்து விளைவதில்லை, நெருப்பில் உருகாமல் தங்கம் இல்லை; மண்ணைச் சுமக்காமல் வைரம் இல்லை; வியர்வை சிந்தாமல் நீங்கள் விருதுகள் வாங்கவில்லை; பெருமையாகப் பேசப்படும் எதுவும் துன்பம் இல்லாமல் வந்ததில்லை. ஆகவே இந்தப் பெருமை, இந்த விருது, இதற்குப் பின்னாலே நீங்கள் தாங்கி இருக்கின்ற மனச் சுமை, நீங்கள் சிந்தியிருக்கின்ற வியர்வை, உங்கள் உழைப்பு (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றையும் நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லி, கடையநல்லூருக்குக் குடிநீர்த் திட்டம் தந்திருக்கின்றீர்கள். அதற்கு நான் நன்றி சொல்ல வேண்டும். எங்கள் ஊரிலிருந்து நான் வரும்போது துணை முதல்வர் அவர்களிடம் சொல்லுங்கள் என்று சொல்லியனுப்பினார்கள். இந்தக் குடிநீர்த் திட்டம் தந்தால், அடுத்த ஆண்டு கடையநல்லூரில் பிறக்கின்ற ஆண் குழந்தைக்கெல்லாம் துணை முதலமைச்சர் பெயரை வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அப்படி வைப்போம் என்று சொல்லி, நன்றி கூறி அமைகிறேன்.

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. 23-4-2010 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,502,53,25,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,422,75,17,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.328,15,41,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 2-35

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. 23-4-2010 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் பெறவில்லை.)

2010 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,009,22,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,003,99,19,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-4-2010) காலை செவ்வாய் கிழமை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

66. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 166 ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

67. 2008-2009 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (தமிழ்நாடு) ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 42/2005) 12(3)(f) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

2010 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,009,22,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,003,99,19,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-4-2010) காலை செவ்வாய் கிழமை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

66. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டில் ஊராட்சிகளின் பணி குறித்த ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 166 ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

67. 2008-2009 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (தமிழ்நாடு) ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 42/2005) 12(3)(f) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

[2010 ஏப்ரல் 26

68. 2009-2010 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (தமிழ்நாடு) ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 42/2005) 12(3)(f) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ்)

69. 2008-2009 ஆம் ஆண்டிற்கான அடையாறு பூங்காவின் முதலாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

80. 2009-2010 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

81. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் நான்கு ஆண்டு சாதனைகள் (2006-2007 முதல் 2009-2010 வரை) குறித்த புத்தகம்.

82. ஊரக வளர்ச்சியில் வியத்தகு மாற்றம் - நான்கு ஆண்டு சாதனைகள் (2006-2007 முதல் 2009-2010 வரை) என்கிற புத்தகம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2010 ஏப்ரல் 26

68. 2009-2010 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (தமிழ்நாடு) ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 42/2005) 12(3)(f) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ்)

69. 2008-2009 ஆம் ஆண்டிற்கான அடையாறு பூங்காவின் முதலாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

80. 2009-2010 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

81. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் நான்கு ஆண்டு சாதனைகள் (2006-2007 முதல் 2009-2010 வரை) குறித்த புத்தகம்.

82. ஊரக வளர்ச்சியில் வியத்தகு மாற்றம் - நான்கு ஆண்டு சாதனைகள் (2006-2007 முதல் 2009-2010 வரை) என்கிற புத்தகம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2010 ஏப்ரல் 26

இணைப்பு–I

(761 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அறிவிப்புகள் – 2010-2011

சென்னை மாநகராட்சி

1. தண்டையார்பேட்டையில் இயங்கிவரும் தொற்றுநோய் மருத்துவமனை தென்னிந்தியாவிலேயே பெரிய மருத்துவ மையமாகும். இம்மருத்துவமனை 1914 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் கட்டடங்களையும் அதிலுள்ள வசதிகளையும் மேம்படுத்தும் அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, 360 படுக்கைகளைக் கொண்ட புதிய கட்டடங்களைக் கட்டவும், வசதிகளை அதிகரிக்கவும் ரூ.21 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்காக ரூ.16 கோடி, அரசு மானியமாக கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடுசெய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.5 கோடியை சென்னை மாநகராட்சி தனது பொது நிதியிலிருந்து ஏற்கும். இத்திட்டம் 12 மாதங்களில் செய்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

2. மாநகராட்சியின் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், அதன் செயல்பாடுகள் மக்களை விரைவில் சென்றடையவும் விரிவான மின் ஆளுமைத் திட்டம் ரூ.12.07 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

நகராட்சி நிர்வாக இயக்குநரகம்

3. திருவண்ணாமலை நகராட்சிக்கு, சாத்தனூர் அணையை நீராதாரமாகக் கொண்டு, ஒரு புதிய குடிநீர்த் திட்டம் ரூ.36.66 கோடி மதிப்பீட்டில், ஜெர்மன் மேம்பாட்டு வங்கியின் (KfW) நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

[2010 ஏப்ரல் 26

4. கடையநல்லூர் நகராட்சிக்கான புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், 2008-2009 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. தற்போது, இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிவுற்று, ரூ.21.40 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இக்குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணிகள் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி ஆதாரத்துடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. கோவில்பட்டி நகராட்சிக்குத் தனியாக ஒரு குடிநீர்த் திட்டம் ரூ.80 கோடி மதிப்பீட்டிலும், காயல்பட்டினம் நகராட்சிக்குத் தனியாக ஒரு குடிநீர்த் திட்டம் ரூ. 30 கோடி மதிப்பீட்டிலும், செயல்படுத்த விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான நிதியாதாரம் இறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டவுடன், இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. நகர்ப்புற உள்ளாட்சிகளில் அமைந்துள்ள மண் மற்றும் கற்சாலைகளை தார்ச் சாலைகளாகவும், சிமெண்ட் சாலைகளாகவும் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ் சுமார் 500 கி.மீ. நீள மண் சாலைகள், ரூ.60 கோடி மதிப்பீட்டில், தார்ச் சாலைகள்/சிமெண்ட் சாலைகளாக மேம்படுத்தப்படும்.

7. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கென, 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 200 புதிய குடியிருப்புகள், ரூ. 11.65 கோடி மதிப்பீட்டில் கட்டித்தரப்படும்.

பேரூராட்சிகள் இயக்குநரகம்

8. பெரும்பான்மையான பேரூராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்களில் ஓடுதளங்கள் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளன. இதனால், மழைக் காலங்களில் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். 22 பேரூராட்சிகளில் இத்தகைய நிலையிலுள்ள பேருந்து நிலையங்கள், ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் கான்கிரீட் ஓடுதளங்களாக மேம்படுத்தப்படும்.

2010 ஏப்ரல் 26]

9. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஒட்டன்சத்திரம் பேரூராட்சியின் மக்கள் தொகை மற்றும் வருவாய் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, அதனை இரண்டாம் நிலை நகராட்சியாக நிலை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கீழ்வேளூர் பேரூராட்சியில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

11. சென்னை மாநகர் மற்றும் அருகாமையிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திறனை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், கோயம்பேட்டில் கூடுதலாக நாள் ஒன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள், ரூ.130 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

12. மனிதர்களைக் கொண்டு கழிவு நீரகற்றலை தவிர்ப்பதில் அரசு உறுதியாக உள்ளது. இதற்கென 45 புதிய ஜெட்ராடிங் மற்றும் இதர இயந்திரங்கள் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

13. வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோரக் குடியிருப்புகளுக்கு காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கையை நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ரூ.1,400 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்தது. விரிவான கலந்தாய்வுக்குப்பின் தற்போது இந்த திட்ட அறிக்கை நாளொன்றுக்கு 270 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ரூ.1800 கோடி மதிப்பீட்டில்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 26

திருத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான அறிக்கையை ஆய்வு செய்ய ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டு அவரது பூர்வாங்க அறிக்கை பெறப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்திற்கு ரூ.1,500 கோடி வரை நிதியுதவி செய்ய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு நிறுவனம் (HUDCO) இசைவளித்துள்ளது. ஆலோசகரது முடிவான அறிக்கை பெறப்பட்டபின் இத்திட்டத்திற்கான மொத்த செலவிற்கும் நிதியாதாரம் ஏற்பாடு செய்யப்பட்டு நடப்பு நிதியாண்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. 2008-2009 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் மேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது கலந்தாய்வுக்குப்பின் இத்திட்டம் விரிவாக்கப்பட்டு மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, பரவை, விளாங்குடி, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 1,430 குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி பேரூராட்சி ஆகியவற்றிலுள்ள சுமார் 12,15,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.806 கோடி மதிப்பீட்டில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் நிதி ஆதாரம் பெற்றும், குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் நிதியாதாரம் பெற்றும், செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

15. விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களைச் சேர்ந்த 1,457 குடியிருப்புகளிலுள்ள 11,00,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.572 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

16. புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, குண்ணாண்டார்கோயில் மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 1130 குடியிருப்புகளிலுள்ள 3,20,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.127.50 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம், குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

2010 ஏப்ரல் 26]

17. திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி மற்றும் மணச்சநல்லூர் ஒன்றியங்களைச் சேர்ந்த *204* ஊரகக் குடியிருப்புகளிலுள்ள *1,13,000* மக்கள் பயனடையும் வகையில், ரூ.*22* கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரம் கொண்டு செயல்படுத்தப்படும்.

18. கிராமப்புறங்களிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்க உருவாக்கப்பட்ட ஜல்மானி திட்டத்தின்கீழ் குடிநீர் சுத்திகரிப்பு கலன்கள் *6,000* பள்ளிகளில் ரூ.*12* கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் நிறுவப்படும்.

19. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகளை மேம்படுத்திட, கருணை அடிப்படையில், இளநிலை வரைவு அலுவலர், இளநிலை உதவியாளர், பதிவறை எழுத்தர் ஆகிய பணியிடங்களில் *112* நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்படும்.

20. மத்திய அரசின் கிராமக் குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி *7,000* கிராம குடியிருப்புகளிலுள்ள, முழுமையாகக் குடிநீர் வசதி பெறாத மக்களுக்கு, ரூ.*380.61* கோடி மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

21. 19 மாவட்டங்களில், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட *1009* கிராம குடியிருப்புகளிலுள்ள *5,71,000* மக்கள் பயனடையும் வகையில், ரூ.*173.50* கோடி மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், குடிநீர் வசதி செய்து தரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

(761 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

அறிவிப்புகள் – 2010-2011

1. கலைஞர் வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குடிசை வீடுகளையும் மாற்றி, 6 ஆண்டுகளில் நிலையான கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தர, 'கலைஞர் வீட்டு வசதித் திட்டம்' என்னும் புதுமையான திட்டத்தை இந்த அரசு அறிவித்துள்ளது. இதன்படி, 2016-ல் நாட்டிலேயே 'குடிசைகள் இல்லாத முதல் மாநிலம்' என்ற பெருமையை தமிழ்நாடு பெறும். இத்திட்டத்தின் மொத்தச் செலவினத்தையும் தமிழக அரசே ஏற்கும்.

இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 2010-2011 ஆம் ஆண்டில் 3 இலட்சம் குடிசை வீடுகள்—வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை 60 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் — 1,800 கோடி ரூபாய் செலவில் நிலையான கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரப்படும்.

இத்திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3-3-2010 அன்று திருச்சிராப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டின் அனைத்துக் குடிசைகளுக்கான கணக்கெடுப்பு 29-3-2010 அன்று துவக்கப்பட்டு விரைவாக நடைபெற்று வருகிறது. 20-4-2010 வரை ஏறத்தாழ 14 இலட்சத்து 25 ஆயிரம் குடிசைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன.

மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில், 7,747-ல் கணக்கெடுப்புப் பணி முடிவு பெற்றுள்ளது; எஞ்சியுள்ள கிராம ஊராட்சிகளில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் பதவியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
DIGITAL LIBRARY

2010 ஏப்ரல் 26]

2. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் நிதியாண்டில் சுமார் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக தமிழக அரசு சுமார் 268 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும். புதிய வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை 55 ஆயிரம் ரூபாயிலிருந்து, 60 ஆயிரம் ரூபாயாக இந்த நிதியாண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும்.

3. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2008-2009 ஆம் ஆண்டில், 95 புதிய சமத்துவபுரங்கள் மூன்று ஆண்டுகளில் அமைக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, 2008-2009 ஆம் ஆண்டில் 29 சமத்துவபுரங்களும், 2009-2010 ஆம் ஆண்டில் 30 சமத்துவபுரங்களும் அமைக்கப்பட்டன. அதே போல 2010-2011 ஆம் ஆண்டில் 36 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படும். இதற்காக் இந்த ஆண்டில் 75 கோடி ரூபாய் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது என்று அண்மையில் உச்ச நீதிமன்றமே பாராட்டியுள்ளது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தினை தேசிய அளவில் சிறப்பாகச் செயல்படுத்திய திண்டுக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு பிப்ரவரி 2009-லும், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு பிப்ரவரி 2010-லும் சிறப்பு விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

2005-2006 இல் வெறும் 3 கோடி ரூபாயாக இருந்த இத்திட்டச் செலவினம், 2006-2007-ல் 152 கோடி ரூபாயாகவும், 2007-08-ல் 516 கோடி ரூபாயாகவும், 2008-09 இல் 1,005 கோடி ரூபாயாகவும் உயர்ந்து, 2009-2010-ல் 1,676 கோடி ரூபாயை அடைந்துள்ளது.

இத்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து 31-3-2010 வரை மொத்தம் 3,352 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 2,684 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

2010-2011 ஆம் ஆண்டில் 2,514 கிராம ஊராட்சிகளில் சுமார் 508 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

கடந்த 4 ஆண்டுகளாக சீரிய முறையில் நடைபெற்று வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இந்த ஆண்டுடன் நிறைவு பெறும். இந்த நிதியாண்டின் இறுதியில், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு நூலகம், ஒரு விளையாட்டு மையம், ஒரு நீர் சேகரிப்பு அமைப்பு, ஒரு மேம்படுத்தப்பட்ட மயானம், குடிநீர் வசதிப் பணிகள் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டு இருக்கும்.

இந்தியாவிலேயே ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் நூலகம், விளையாட்டு மையம் அமைந்துள்ள ஒரே மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெறும்.

6. ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களான சாலைகள், ஏரிகள், குளங்கள், குடிநீர் வசதித் திட்டங்கள், கட்டடங்கள் ஆகியவற்றைத் தங்களுடைய பொது நிதியிலிருந்து பராமரிக்கும் பொறுப்பு அந்தந்த உள்ளாட்சி அமைப்பையே சாரும். இவற்றில் சாலைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைப் பராமரிக்க இந்த ஊரக உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முயற்சிகளுக்குத் துணையாக பல்வேறு அரசுத் திட்டங்கள் உள்ளன. ஆயினும், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட சமுதாயக் கூடங்கள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடி மையங்கள், நியாயவிலைக் கடைகள், பால் கொள்முதல் நிலையங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், நூலகங்கள், இடுகாடு/சுடுகாடு மேடைகள், மேல்நிலை நீர்த்தேக்கத்

2010 ஏப்ரல் 26]

தொட்டிகள், தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் இது போன்ற கட்டடங்கள் போதிய பராமரிப்பு இன்றி பழுதுபட்டு முழுமையான பயன்பாட்டிற்குத் தகுதியில்லாத நிலையில் உள்ளன. இவற்றைத் தவிர, ஊர்ப்புற விளையாட்டு மையங்களும் பராமரிக்கப்பட வேண்டியுள்ளன.

இவற்றைப் பராமரிக்க ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் துணையாக, 2010-2011 ஆம் ஆண்டு 'ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்' என்ற ஒரு புதிய திட்டம் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

7. கிராம சமுதாயக் கூடம் கட்டும் திட்டம்

தற்போது தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமுதாயக் கூடங்கள் உள்ளன. இருப்பினும், கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை எளியோரின் குடும்ப மங்கல விழாக்களுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடிய சமுதாயக் கூடங்களை அனைத்து ஊராட்சிகளிலும் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. இதனை நிறைவேற்றும் வகையில் ஏற்கெனவே சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் இல்லாத அனைத்து ஊராட்சிகளிலும் தேவைக்கேற்ப, உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதிமூன்றாவது நிதி ஆணைய நிதியினைப் பயன்படுத்தி பொதுச் சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்.

8. 50,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்கள் அனைவரும் சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர்ந்து பயனடையும் வகையில் சுமார் ஒரு இலட்சம் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மதிப்பிடப்பட்டு கடந்த 2009-2010 ஆம் ஆண்டில் 50 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதேபோல 2010-2011 ஆம் ஆண்டிலும் 50 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

[2010 ஏப்ரல் 26

9. 65,000 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி

தகுதி பெற்ற அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் வகையில் 2006-2007 ஆம் ஆண்டு முதல் கடந்த நான்காண்டுகளில் 2,81,883 சுய உதவிக் குழுக்களுக்கு 281 கோடியே 88 இலட்சம் ரூபாய் சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சில விடுபட்டுப் போன குழுக்கள் பயன்பெறும் வகையில் 2010-2011 ஆம் ஆண்டில் 65 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு 65 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.

10. சுய உதவிக் குழுக்களுக்கு 3,000 கோடி ரூபாய் வங்கிக் கடன்

1989 ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2006 ஆம் ஆண்டு வரை அதாவது 17 ஆண்டுகளில் சுமார் 1,765 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்பட்டது. தமிழக அரசு பெருமளவில் வழங்கிய சுழல் நிதி காரணமாகவும், வங்கிகளில் இருந்து கூடுதல் தொகையை கடனாகப் பெற அரசு எடுத்த சிறப்பு முயற்சிகளின் பலனாகவும், கடந்த நான்கு ஆண்டுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 6,342 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 3,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

11. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில், தரமதிப்பீட்டில் தேர்ச்சிபெற்ற 1,000 கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. 2010-2011 ஆம் ஆண்டில் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற மேலும் 3,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்காக இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2010 ஏப்ரல் 26]

12. நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகள்

